# வருடாந்தச் செயலயாற்றுகை அறிக்கை

# 2018

**கைத்தொழில் மற்றும் வணிக, பாதுகாக்கப்பட்ட இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்ற, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் தொழில்பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சு**

இந்த அறிக்கை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

# முகவுரை

2002ம் செப்டெம்பர் 12ம் திகதி வெளியிடப்பட்ட 402ம் இலக்க திறைசேரி சுற்றுநிருபத்திற்கு அமைவாக கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் 2018ம் ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் முதலாவது பகுதி அமைச்சின் அலகுகளினால் அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை வழங்குகின்றது.

இந்த அறிக்கையின் இரண்டாவது பகுதி அமைச்சின் கீழ்வரும் திணைக்களம் மற்றும் நிறுவனங்களினால் அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை வழங்குகின்றது.

இந்த அறிக்கையின் மூன்றாம் பகுதி அமைச்சின் மனிதவளத் தகவல்களையும் முழுமையான நிதி முன்னேற்றத்தையும் உள்ளடக்கியுள்ளது.



## தொலைநோக்கு

“சக்தி மிக்க வணிகச் சூழலின் மூலம் சர்வதேச போட்டியையேற்படுத்தும் வல்லமையுள்ள கைத்தொழில்துறையினை இலங்கையினுள் உருவாக்கல்”

## செயற்பணி

“மக்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்தக் கூடியதும், உயர் பெறுமதி சேர்த்த உற்பத்திகளை மேற்கொள்ளுகின்றதும், தொடர்ந்து மாறுகின்ற வர்த்தகப் பரிபாலனத்தையுடையதும், நிலைத்திருக்கக் கூடியதும் மற்றும் போட்டியையேற்படுத்தும் வல்லமையுள்ளதுமான நிறுவனத்தின் அபிவிருத்திக்கு உகந்த சூழலை உருவாக்குதல்”



# அமைச்சின் கடமைகள் மற்றும் செயற்பாடுகள்

**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 2103/33 மற்றும் 28.12.2018ம் திகதி அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக கைத்தொழில் மற்றும் வாணிப அலுவலகள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சுக்கு சாட்டப்பட்டுள்ள பணிகள் பின்வருமாறு அமையும்.**

1. கைத்தொழில் மற்றும் வாணிப அலுவலகள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம் மற்றும் கூட்டுறவுத்துறை விடயங்களுடன் தொடர்புடைய கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களை வகுத்தமைத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும் மற்றும் இந்த விடயங்களின் கீழ் வரும் திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் பொதுக் கூட்டுத்தாபனங்கள் IIம் நிரலில் பட்டியிடப்பட்டுள்ளது

2. கைத்தொழில்துறையின் ஊக்குவிப்பு மற்றும் அபிவிருத்தி

3. தேசிய பொருளாதாரக் கொள்கையுடன் இணைத்து தொழில்முயற்சியாளர்களுக்கான உபாயமார்க்கங்களை அபிவிருத்தி செய்தல்

4. பற்றாக்குறையில்லாமல் உள்நாட்டு சந்தைக்கு நியாயமான விலையில் தரமான நுகர்வுப் பொருட்கள் விநியோகிக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்

5. 1949ம் ஆண்டு 6ம் இலக்க ஈட்டுச் சட்டத்தின் 114ம் பிரிவின் கீழ் கடன் முகவர்களுக்கு அனுமதியளித்தல்

6. நுகர்வுப்பொருட்கள் தொடர்பாக தேசிய விலையிடல் கொள்கையை உருவாக்கலும் அமுல்படுத்தலும்

7. நுகர்வோர் பாதுகாப்பிற்கான நடவடிக்கைகளை எடுத்தல்

8. இலங்கையில் உள்ள கைப்பணி கைத்துறையில் தயரிப்புகளுக்கான வடிவமைப்புகளை அபிவிருத்தி செய்தலும் பிரபல்யப்படுத்தலும்

9. வன்னி மாவட்டத்தின் விசேட பிரதேசங்களில் உள்ளூர் ரீதியாக இடம்பெயர்ந்த மக்களுக்காக வாழ்வாதாரம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை முன்னெற்றும் அரசின் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்தல்.

10. நிரல் II இல் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களுக்கு சாட்டப்பட்டுள்ள ஏனைய அனைத்து விடயங்கள் தொடர்பான விடயங்கள்.

11. . நிரல் II இல் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களைக் கண்காணித்தல்.

## கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் செயற்படும் பிரிவுகள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள்

**கைத்தொழில் துறை**

கைத்தொழில் கொள்கை மற்றும் அபிவிருத்திப் பிரிவு

சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மற்றும் ஆடைப் பிரிவு

**உந்துகைத்துறை அபிவிருத்தித் துறை**

அபிவிருத்திப் பிரிவு 1

அபிவிருத்திப் பிரிவு 11

அபிவிருத்திப் பிரிவு 111

கைத்தொழில் பதிவு, உற்பத்தித்திறன் மேம்படுத்தல் மற்றும் தகவல் முகாமைத்துவப் பிரிவு

சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (SMILE III – சுழற்சி நிதியம்)

இராசயன ஆயுத உடன்படிக்கையினை செயற்படுத்தும் தேசிய அதிகாரசபை (NACWC)

உணவு மற்றும் கூட்டுறவுப் பிரிவு

**திணைக்களங்கள்**

கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் (ROC)

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் (DCD)

அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் (DMUS)

புடவைக் கைத்தொழில் திணைக்களம் (DTI)

**அதிகாரசபைகள், சபைகள் மற்றும் ஆணைக்குழுக்கள்**

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை (NEDA)

நுகர்வோர் விவகாரங்கள் அதிகாரசபை (CAA)

கைத்தொழில் அபிவிருத்திச் சபை (IDB)

கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு (CEC)

**அரச நிறுவனங்கள்**

கஹட்டகஹ கிரபைட் லங்கா லிமிடட் (KGLL)

பரந்தன் கெமிகல்ஸ் லிமிடட் (PCCL)

லங்கா மினரல் சான்ட் லிமிடட்

மாந்தை சோல்ட் லிமிடட் (MSL)

ஸ்டேட் ட்ரேடிங் (ஜெனரல்) கோர்பரேசன் லிமிடட்

கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம்

லங்கா சத்தோச லிமிடட்

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம் (NICD)

இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனம் (SLITA)

தேசிய அருங்கலைகள் பேரவை (NCC)

தேசிய வடிவமைப்பு மத்தியநிலையம் (NDC)

தேசிய கைப்பணிச் சபை (Laksala)

லங்கா சலுசல லிமிடட்

தேசிய கடதாசிக் கம்பனி (NPC)

இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்

லங்கா சிமென்ட் பிஎல்சி

லங்கா சுகர் (பிறைவட்) கம்பனி லிமிடட்

ஹிங்குரான சுகர் இன்டஸ்ரீஸ் லிமிடட்

லங்கா லேலனட் லிமிடட்

லங்கா அசோக் லேலன்ட் லிமிடட்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | **துறைகள் மற்றும் நிறுவனங்கள்** | **PAGE** |
| | **அமைச்சின் அலகுகள்** | |
| 01 | கைத்தொழிற்துறை அபிவிருத்திப் பிரிவு | 13 |
| 02 | சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மற்றும் ஆடைப் பிரிவு | 14-16 |
| 03 | **உந்துகைத்துறை அபிவிருத்தித் துறை** | **17-18** |
| **3.i** | அபிவிருத்திப் பிரிவு 1 | 19-20 |
| **3.ii** | அபிவிருத்திப் பிரிவு 11 | 21-22 |
| **3.iii** | அபிவிருத்திப் பிரிவு 111 | 23-24 |
| **3.iv** | கைத்தொழில் பதிவு மற்றும் தகவல் முகாமைத்துவ தகவல் பிரிவு | 25-26 |
| **3.v** | இராசயன ஆயுத உடன்படிக்கையினை செயற்படுத்தும் தேசிய அதிகாரசபை | 27-29 |
| 04 | கூட்டுறவுப் பிரிவு | 30 |
| 05 | சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 31-32 |
| | **திணைக்களங்கள்** | **33-34** |
| 06 | கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் (ROC) | 35 |
| 07 | கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் (DCD) | 36-37 |
| 08 | அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் | 38 |
| 09 | புடவைக் கைத்தொழில் திணைக்களம் (DTI) | 39-40 |
| | **அதிகாரசபைகள், சபைகள் மற்றும் ஆணைக்குழுக்கள்** | **41-42** |
| 10 | தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை (NEDA) | 43-45 |
| 11 | நுகர்வோர் விவகாரங்கள் அதிகாரசபை (CAA) | 46-48 |
| 12 | கைத்தொழில் அபிவிருத்திச் சபை (IDB) | 49-50 |
| 13 | கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு (CEC) | 51-52 |
| | **அரச நிறுவனங்கள்** | **53-54** |
| 14 | மாந்தை சோல்ட் லிமிடட் (MSL) | 55 |
| 15 | இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனம் (SLITA) | 56-57 |
| 16 | லங்கா சத்தோச லிமிடட் | 58-59 |
| 17 | தேசிய அருங்கலைகள் பேரவை (NCC) | 60-62 |
| 18 | இலங்கை தேசிய வடிவமைப்பு மத்தியநிலையம் (NDC) | 63-64 |
| 19 | தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம் (NICD) | 65-66 |
| | **அமைச்சின் இயலளவைக் கட்டியெழுப்பல் தகவல்கள்** | **67-68** |
| 20 | பதவியணித் தகவல் | 69 |
| 21 | ஊழியர் பயிற்சி (உள்நாடு மற்றும் வெளிநாடு) | 70-74 |
| 22 | நிதிமுன்னேற்றம 2018 | 75-90 |

# அமைச்சின் பிரிவுகள்



# கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு

## பிரிவு பற்றிய அறிமுகம்:

அமைச்சு 32 கைத்தொழில் பேட்டைகளை நாடு முழுவதிலுமுள்ள 18 மாவட்டங்களில் 1,006.5 ஏக்கர் நிலப்பரப்பில் மின்சாரம், தண்ணீர் மற்றும் பாதை வசதிகளுடன் நிறுவியுள்ளது. அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் 32 கைத்தொழில் பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு அரசு ரூபா 4,087 மில்லியனை செலவளித்துள்ளதுடன், இந்த கைத்தொழில் பேட்டைகளில் கைத்தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு தனியார் கம்பனிகள் ரூபா 35,768 மில்லியனை முதலீடு செய்துள்ளது. அரச முதலீடுகள் தனியார் துறை முதலீடுகளை ஊக்குவிப்பதுடன், இப்பிரிவு பிராந்திய மட்டத்தில் கைத்தொழிற்துறைக்கு முதலீடுகளை ஊக்குவிப்பதுடன், உட்கட்மைப்பு வசதிகளுடன் தொழில்நுட்ப மற்றும் ஆலோசனை உதவிகளை வழங்குவதற்கு பொறுப்பாக உள்ளது அமைச்சு ரைகமவில் புதிய கைத்தொழில் பேட்டையை நிறுவுவதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளது. இதன் முதல் கட்ட நடவடிக்கையாக 200 ஏக்கரில் 87 ஏக்கர் நிலப்பரப்பை அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பாக்கப்படுகின்றது.

அரச முதலீடுகள் தனியார் துறை முதலீடுகளையும் தேசிய உற்பத்திகளையும் பெரிதும் வரவேற்கின்றது. மேலும், அமைச்சினால் கைத்தொழில் பேட்டை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 20,277 தொழில்வாய்ப்புகளை உருவாக்க முடிந்ததுடன், பிராந்திய பிரதேசங்களின் அபிவிருத்தித் தடைகளை தகர்த்தெரிய முடிந்தது.

## 4 31 டிசம்பர் 2018ம் திகதியில் முன்னேற்றம்

| 4 31 டிசம்பர் 2018ம் திகதி வரையில் திரட்டிய முன்னேற்றம். | |
|---|---|
| கைத்தொழில் பேட்கைளின் எண்ணிக்கை | 35 (19 மாவட்டங்களில்) |
| அபிவிருத்தி செய்யப்பட்ட நிலப்பரப்பு (அதாவது மின்சாரம், நீர் மற்றும் பாதை முறைமை) | 1,162.25 ஏக்கர் |
| மொத்த முதலீடு | Rs. 1163 மில் |
| அரசாங்க முதலீடு | ரூபா. 3,973.65 மில் |
| தனியார் முதலீடு | ரூபா 35,491.81 மில் |
| **வர்த்தக தயாரிப்புகளில் ஈடுபட்டுள்ள கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை** | **358** |
| **நிர்மாணிப்பு நிலையில் உள்ள கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை** | **133** |
| **தொழில்வாய்ப்புகள்** | **20,217** |

## கருத்திட்ட முன்மொழிவுகள்

| 01 ஜனவரியில் இருந்து 31 டிசம்பர் 2018 வரை | |
|---|---|
| பிரதேச கைத்தொழில் சேவைக் குழுக்களினால் அனுமதியளிக்கப்பட்ட புதிய கருத்திட்டங்களின் எண்ணிக்கை | 52 |
| அமைச்சின் மதிப்பீட்டுக் குழுவினால் விதப்புரை செய்யப்பட்ட புதிய கருத்திட்டங்களின் எண்ணிக்கை | 52 |
| கைத்தொழில் பேட்கைகளில் இருந்து காணிகள், காணித் துண்டுகளை ஒதுக்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பட்ட புதிய கருத்திட்டங்களின் எண்ணிக்கை | 49 |

## கைத்தொழில் அபிவிருத்தியைப் பலப்படுத்தல்

இந்தப் பிரிவு மேற்குறிப்பிட்ட கைத்தொழில் பேட்டைகளினுள் கைத்தொழிற்சாலையாளர்களின் முதலீட்டு சந்தர்ப்பங்களை மேம்படுத்துவதற்கு அபிவிருத்திக் கருத்திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுக்கின்றது. இதற்காக 2017ம் ஆண்டு ரூபா 434 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

- **டெம்பில்பேர்க் கைத்தொழில் பேட்டை**

ரூபா 76.60 மில்லியன் செலவில் உள்ளக மற்றும் அணுகல் பாதைகளின் நிர்மாணிப்பு பூர்த்திசெய்யப்பட்டது.

- **நாலந்த (மாத்தளை) கைத்தொழில் பேட்டை**

ரூபா 46.45 மில்லியன் செலவில் உள்ளக பாதைகளின் நிர்மாணிப்பு பூர்த்திசெய்யப்பட்டது.

- **மாகாந்துர (மேற்கு) கைத்தொழில் பேட்டை**

ரூபா 34.64 மில்லியன் செலவில் உள்ளக பாதைகளின் நிர்மாணிப்பு பூர்த்திசெய்யப்பட்டது.

- **பட்டாத்தா கைத்தொழில் பேட்டை**

ரூபா 0.50 மில்லியன் செலவில் கைத்தொழில் பேட்கைகளின் வீதி விளக்குகள் திருத்தப்பட்டதுடன் புதிய விளக்குகள் போடப்பட்டது.

இக்கருத்திட்டத்தின் நோக்கம்:- புதிய முதலீட்டு சந்தர்ப்பங்களை அதிகரித்தல் மற்றும் பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி.

# புடவை, ஆடை, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவு

### முகவுரை

புடவை ஆடை மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவு, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மற்றும் புடவை ஆடைக் கைத்தொழிற்துறையைப் பலப்படுத்துவதற்கு மனிதவள அபிவிருத்தி, உற்பத்தித்திறன் மற்றும் தர மேம்படுத்தல் என்பவற்றை வலுவூட்டும் நோக்கத்துடன் அவசியமான கொள்கைகள், உபாயமார்க்கங்களை உருவாக்கி அமுல்படுத்துவதுடன் நிதியுதவிகளையும் வழங்குகின்றது.

### டிசம்பர் 2018ம் திகதியன்று முன்னேற்றம்

- **கைத்தறித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்**

  2018ம் ஆண்டு கைத்தறி கிராம நிகழ்ச்சித்திட்டத்திற்கு ரூபா 64.6 மில்லியன் ஒதுக்கப்பட்டது. 10 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டது. 207 பயிற்சியாளர்களுக்கு பயிற்றப்பட்டு இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டது. இந்தக் கைத்தறிக் கிராமதங்களுக்கு பொறிகள், உபகரணங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. யாழ்ப்பாணம், கட்டுபத்த, பண்டாரவல மற்றும் மாத்தளை கைத்தறி நிலையங்களின் புதுப்பித்தல் பூர்த்திசெய்யப்பட்டு உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கப்பட்டது.

  கைத்தறியை சீரமைக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 9 மாகாணங்களில் கண்காட்சிகள் மற்றும் ரன்சலு தேசிய கண்காட்சி நடாத்தப்பட்டது.

### கைத்தொழில் கிராம நிகழ்ச்சித்திட்டங்கள்

- **உற்பத்தித்திறன் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் (PIP)**

  இந்த நிகழ்ச்சித்திட்டம், இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனத்தினால், சிறிய மற்றும் நடுத்தர துறையை சேர்ந்த ஆடை தயாரிப்பாளர்களின் பொறித்தொகுதிகளில் இருந்து உற்பத்தி வினைத்திறனை அதிகரிப்பதற்கு அவர்களின் ஊழியர்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்ததும் நோக்கத்துடன் நடாத்தப்படுகின்றது. இக்கருத்திட்டத்திற்காக அமைச்சு ரூபா 15 மில்லியனை ஒதுக்கியுள்ளது. 09 தொழிற்சாலைகளிலுள்ள தொழில்நுட்ப ஊழியர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டது. பயிற்றப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 263 ஆகும். 2018 ஜுலையில் இருந்து ஒகஸ்ட் வரையான காலப்பகுதியில் "V" மைல்கற்களுக்கான அனைத்து தேவைகளும் வழங்கப்பட்டன. இந்த "V" மைல்கற்களைப் பூர்த்திசெய்வதற்கான செலவு 31.08.2018 வரை ரூபா 11 மில்லியனாகும். இந்த 09 தொழிற்சாலைகளும் 2018 நவம்பர் மாத இறுதியில் அவசியமான நியமத்தையும் 10% – 15% வீதம் வரையிலான வினைத்திறன் அதிகரிப்பையும் பெற்றுக்கொண்டுள்ளன.

- **திறன் அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்**

  இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு 2018ம் ஆண்டிற்கு ரூபா 2.5 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. பிட்கோட்டே, பாகுந்துர, வவுனியா, கல்பிட்டி, மொரட்டுவை, கம்பொல பிரதேசங்களில் 07 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், இதன் 1 மற்றும் 11ம் மைல்கற்களின் கீழ் 206 நபர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். இதற்கான நிதிச் செலவு ரூபா 2.0 மில்லியன் ஆகும்.

- **150 சிறிய ஆடை கைத்தொழிற்சாலை கருத்திட்டங்களை நிறுவுதல் ஊடாக பெண்களை பொருளாதார ரீதியாக வலுவூட்டல்**

  இந்தக் கருத்திட்டத்தின் கீழ் 150 கூட்டுறவு சார் அல்லது பங்குதாரர் மாதிரி சிறிய ஆடை கைத்தொழிற்சாலைகள் நிறுவப்பட்டு ஒரு மத்திய நிலையத்தின் ஊடாக 20 -40 தொழில்வாய்ப்புகளை உருவாக்குவதுடன், 6,000 பெண்களுக்கு நேரடியான தொழில்வாய்ப்புகளை வழங்க எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தக் கருத்திட்டத்தின் ஊடாக, கூட்டுறவுச் சங்கங்கள் பங்குடமையாளர்களுக்கு பொது சேவை இயந்திரம் அல்லது தையல் இயந்திரம் போன்றவை சிறிய ஆடைத் தொழிற்சாலைகளை நிறுவுவதற்காக வழங்கப்பட்டது. இதற்காக அமைச்சு 2018ம் ஆண்டிற்கு ரூபா 49.75 மில்லியனை ஒதுக்கியுள்ளது.

- **வாழைநார் தயாரிப்பு அபிவிருத்தி**

  வாழைநார் தயாரிப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கருத்திட்டம் வாழைநார்களை ஏனைய இயற்கை நார்களுடன் இணைந்து அரைப்பதன் ஊடாக அபிவிருத்தி செய்யப்படும் கருத்திட்டமாகும்.

  ஆரம்ப ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு, அதன் பெறுபேறாக மெல்லிய நார்களும் துணிகளும் பெறப்பட்டள்ளன. "கழிவிலிருந்து செல்வம்" எனும் சுலோகத்தின் கீழ் வாழைமரக் கழிவில் இருந்து வர்த்தக ரீதியான நார்களை பெற்றுக்கொள்ளல் இறுதி நோக்கமாகும்.

  2018ம் ஆண்டுக்காக ரூபா 15.0 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த கருத்திட்டம் இலங்கை புடவை மற்றும் ஆடைகள் நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. இதுவரை மேற்கொள்ளப்பட்ட மொத்தச் செலவு ரூபா 14.0 மில்லியன் ஆகும். இதன் கீழ் மொத்தகமாக 250 – 300 பயன்பெறுனர்கள் நன்மை பெறுகின்றனர். புடவை கைத்தொழிற்துறைத் திணைக்களம், கைத்தொழில் அபிவிருத்தி சபை மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி சபை, தென் மற்றும் கிழக்கு மாகாண சபை என்பவற்றில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டது.

  2018ம் ஆண்டு தெற்காசிய intex கண்காட்சியில் நவநாகரீக காட்சியும் கண்காட்சியும் நாடாத்தப்பட்டது. HPHT மாதிரி சாயமிடல் பொறி கொள்வனவு செய்யப்பட்டது.

- **புடவை மற்றும் ஆடைகள் தயாரிப்புகளில் சுகாதார மற்றும் பாதுகாப்பு மீதான சான்றிதழ் முறைமையை நிறுவுதல்**

துணித் தயாரிப்புகளில் பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருட்களினால் ஏற்படும் சுகாதாரப் பாதிப்புகளை தடுத்தல் மற்றும் உள்நாட்டு சந்தைக்கு வரும் புடவை மற்றும் ஆடை தயாரிப்புகளில் சுகாதார மற்றும் பாதுகாப்பு நியமங்களைப் பேணுதல்.
2018ம் ஆண்டுக்காக ரூபா 11.31 மில்லியன் ஒதுக்கப்பட்டள்ளது. இதன் பௌதீக முன்னேற்றம் 100% வீதமாகும்.

- **சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக 2018ம் ஆண்டு ரூபா 129.0 மில்லியன் ஒதுக்கப்பட்டது.இந்த சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி செயற்திட்டத்தின் கீழ் அமைச்சு கீழ்வரும் பல்வேறுபட்ட கருத்திட்டங்களை நடாத்தியது.;
சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் சுத்தமிகு உற்பத்திப் பழக்கங்கள் தரவுப் புள்ளிவிபர சேகரிப்புகள் மற்றும் MSME வள வரைபடம், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி செயற்பாட்டுத் திட்டத்தினை அமுல்படுத்தல் ஊடாக ISO 14001 சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கான வசதியளிப்பை வழங்கல்.

- **ரோபோ பிரயோகங்களின் சிறப்பு மத்தியநிலையம் (CERA)**

வேகமான நடவடிக்கை மற்றும் திறமையான நிர்வாக செயல்திறன் பெற இது வழிவகுக்கின்றது, ஒரு கம்பனியாக கைத்தொழிற்துறையின் நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு ரோபோ மற்றும் தனினயக்கமயப்படுத்தல் சார்ந்த நடவடிக்கைகளுக்கு ரோபா பிரயோகங்களின் சிறப்பு மத்தியநிலையம் தொழிற்படுகின்றது.

இலங்கை அரசாங்கம், இந்த ரோபா பிரயோகங்களின் சிறப்பு மத்தியநிலையத்தை நிறுவுவதன் ஊடாக இலங்கையின் நிலையை உயர் வருமானம் பெறும் நிலைக்கு உதவும்இலங்கைத் கைத்தொழிலாளர்கள் உயர் தொழில்நுட்பம் மற்றும் தன்னியக்கம் என்பவற்றுக்கு மாறுவதற்கு தற்போது எதிர்கொள்ளும் சவால்களைத் தீர்ப்பதற்கு எதிர்பார்க்கின்றது.

*ரோபா பிரயோகங்களின் சிறப்பு மத்தியநிலையம்*

இலங்கைத் கைத்தொழிலாளர்களிடம் ரோபோ தொழில்நுட்பம் தொடர்பாக மிகக் குறைந்த அறிவே காணப்படுகின்றது, புதிய கைத்தொழிலாளர்களை ரோபோ தொழில்நுட்பம் உடையவர்களாக உருவாக்கல், உயர் பொறுமதியுடைய தயாரிப்பாளர்களாக இலங்கை கைத்தொழிற்துறையை உருவாக்கல், இலங்கை கைத்தொழில் வலையமைப்புகளுக்கிடையில் வரையறுக்கப்பட்ட புத்தாக்க நடவடிக்கைகள் காணப்படுதல் என்பவற்றின் காரணமாக முதலீட்டில் இருந்து சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக்கொள்வதற்கு தன்னியக்க முறைமையுள்ள உருவாக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தக் கருத்திட்டத்திற்கு ரூபா 80 மில்லியன் ஒதுக்கப்பட்டள்ளதுடன், இக்கருத்திட்டக் காலம் 2016 இருந்து 2020 வரையாகும். ரோபா பிரயோகங்களின் சிறப்பு மத்தியநிலையத்தை அபிவிருத்தி செய்வதற்கு ரூபா 65 மில்லியன் கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

- **தொழில்முயற்சி கிராமத்தின் அபிவிருத்தி மற்றும் பெண்கள் தொழில்முயற்சி நிகழ்ச்சித்திட்டம்.**

அமைச்சின் கீழ் உள்ள தேசிய கைப்பணிப் பேரவை மற்றும் தேசிய வடிவமைப்பு மத்தியநிலையம் மற்றும் கைத்தொழில் அபிவிருத்திச் சங்கம் என்பவற்றினால் தொழில்முயற்சி கிராம அபிவிருத்தி மற்றும் பெண்கள் தொழில்முயற்சி கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றது. பெண்கள் தொழில்முயற்சிக்கு அதிக வலுச்சேர்த்து, உயர் உத்தேச சந்தர்ப்பங்கள், நம்பிக்கையான கைத்தொழில்கள் மற்றும் தொழில்முயற்சிகள் மற்றும் கைப்பணி துறைகள் என்பவற்றை அடையாளம் காணும் நோக்கத்தடன் தொழில்முயற்சி கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டது.

2018ம் ஆண்டு இந்த கருத்திட்டத்திற்கு ரூபா 40 மில்லியன் ஒதுக்கப்பட்டதுன், 33 கிராமங்களில் உள்ள 556 பயன்பெறுனர்கள் இந்திகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பயன்பெற்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், பின்னூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள், தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டங்கள், புதிவ வடிவமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டது. லுனாவ களிமண் சாந்த கிராமம் 11 டிசம்பர் 2018ம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

*தொழில்முயற்சி கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்*

- **சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் அறியாமையை விலக்கல் (மனிதவளம், தகவல் தொழில்நுட்பம், வர்த்தகநாமமிடல், வரி மற்றும் நிதி)**

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை பொருத்தமான நிகழ்ச்சிகளுக்கு வியாபார விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் தொடர்பாக விழிப்புணர்வை வழங்கியது. தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை குருநாகல், புத்தளம் மற்றும் அனுராதபுரத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்தியது. இந்தக் கருத்திட்டத்திற்கு 2018ம் ஆண்டு ரூபா 7.00 மில்லியன் ஒதுக்கப்பட்டது.

- **தொழில்முயற்சி அபிவிருத்தி ஊடாக இலங்கை இளைஞர்களை மேம்படுத்தல்**

தொழில் பயிலுனர்களுக்கு இளைஞர் தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை வழங்கியது. 2018ம் ஆண்டு தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி திணைக்களுடன் இணைந்த இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டம் மேல் மாகாணத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது. ஹோமகம தொழில்நுட்பக் கல்லூரியில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டதுடன், மருதானை, களுத்துறை, இரத்மலானை மற்றும் கம்பஹாவில் ஒழுங்குசெய்யப்பட்டது. இக்கருத்திட்டத்திற்கு ரூபா 5.7 மில்லியன் ஒதுக்கப்பட்டது.

# அமைச்சின் துறைகள்



# அபிவிருத்திப் பிரிவு – 1

## முகவுரை

அமைச்சின் அபிவிருத்திப் பிரிவு – 1 ஆனது பதனிடப்பட்ட உணவுகள், தேயிலை, வாசனைத்திரவியங்கள், பொதியிடப்பட்ட நார்வகைகள் மற்றும் தெங்கு அடிப்படை கைத்தொழில்கள் போன் விவசாய அடிப்படையிலான கைத்தொழில்களின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது.

### 31 டிசம்பர் 2018ம் திகதியில் முன்னேற்றம்

- கைத்தொழில் அபிவிருத்திச் சபையில் (IDB) தர உறுதிப்படுத்தப்பட்ட உணவு ஆய்வுகூடமொன்றினைத் தாபித்தலின் இரண்டாம் கட்டமானது இலங்கையிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களுக்கான ஆய்வுகூட பரிசோதனைகள் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி சேவைகளினை அளிக்கும் பொருட்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டத்தில் கைத்தொழில் அபிவிருத்திச் சபையானது பரிசோதனைகளினை போட்டி விலையில் கைத்தொழில் துநைக்கு வழங்கும் பொருட்டு இரசாயன ஆய்வுகூடமொன்றினை தாபிக்கவுள்ளது. இந்தக் கட்டத்தில், ஆய்வுகூட கட்டிடமானது முலாம் மற்றும் இரண்டாம் தளங்களை நிருமாணிப்பதன் மூலம் விரிவாக்கவுள்ளதுடன் இதன் மூலமாக அதன் சேவைகளினை கைத்தொழில்களுக்கு போட்டி விலையில் வழங்க முடியும்.

- அரசாங்கமானது புதிய ஒழுங்குவிதிகளின் கீழ் தடைசெய்யப்பட்ட உணவு பொதியிடும் பொலித்தீன்களின் தயாரிப்பில் ஈடுபடுகின்ற கைத்தொழிலாளர்களின் உணவு பொதியிடும் பொலித்தீன்களை உக்கிப் போகும் வகையில் அடர்த்தி மிகுந்த (HDPE) வகையில் தயாரிக்கும் மாற்றீட்டு இயந்திரங்களை கொள்விலையில் வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது. இந்த அமைச்சானது சுற்றாடல் அதிகாரசபை, மஹவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு, நிதி அமைச்சு மற்றும் இலங்கை கட்டளைகள் நிறுவகம் என்பவற்றுடன் இணைந்து பதிவு செய்யப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தயாரிப்பாளர்களுக்கு தற்பொதிருக்கும் இயந்திரங்களின் கொள்விலை மாற்றீட்டினை ஆகக்கூடுதலாக ரூபா.200,000/- (மொத்த மாற்றீட்டுச் செலவான ரூபா.400,000/- இல்) வரையில் 50% நிதி மானியத்தினை வழங்குவதன் மூலம் இக்கருத்திட்டத்தினை அமுல்படுத்தியுள்ளது. ஒதுக்கீடு ரூபா 25 மில்லியன்.

- தேயிலையில் பெறுமதி சேர்ப்பானது, சுவைகள், பல்வேறு வகையிலான மூலிகைகள், பழ மூலக்கூறுகள் போன்றவற்றினை சேர்ப்பதன் மூலமான பொதியிடல் செயல்முறையினூடாக பிரதானமாக மேற்கொள்ளப்படுகின்றது. கைத்தொழிலாளர்கள், ஏற்றுமதி செயல்முறைத் திட்டத்திற்கான (TIEP) தற்காலிக இறக்குமதியினூடாக சுங்கத் தீர்வையற்ற அடிப்படையில் மூலப் பொருட்கள் மற்றும் தொழில்நுட்ப இறக்குமதிக்கு அவற்றினை வசதிப்படுத்துவதன் மூலம் ஊக்குவிக்கப் படுகின்றார்கள். இதுவரையில், நேரடியாக மற்றும் மறைமுகமாக ஏற்றுமதியில் ஈடுபடுகின்ற 224 தேயிலைக் கைத்தொழிலாளர்களுக்கு இத்தகைய வசதிகள் அளிக்கப்படுள்ளன.

- இந்த அமைச்சானது பெறுமதி சேர்ப்பினை அதிகரிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்ற மூலப் பொருட்களின் இறக்குமதிக்கு வரிச் சலுகைகளினை அளிப்பதன் மூலம் தும்பு அடிப்படையிலான கைத்தொழில் துறைக்கு தனது ஆதரவினை வழங்கி வருகின்றது. இது சர்தேச சந்தையில் ஏற்றுமதிகளுக்கான போட்டியினை அதிகரிப்பதற்கு வழி வகுக்கும். இதன் கீழ், ஏற்றுமதி நோக்கிலான 52 உள்ளூர் ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்களுக்கு வசதியளிக்கப்பட்டுள்ளன.

### தர மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள்

- அமைச்சானது தரம், பாதுகாப்பு மற்றும் முறைமைச் சான்றிதழ்கள் (ISO 9001, ISO 14001, ISO 22000, ISO 50001) என்பவற்றினைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு கைத்தொழிலாளர்களுக்கான தர மற்றும் உற்பத்தித்திறன் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தியுள்ளது. கைத்தொழில்கள் அமைச்சுக்கு சான்றிதழ்களினை சமர்ப்பித்ததன் பின்னர், மொத்த சான்றுப்படுத்தல் செலவினை (ஆகக்கூடுதலாக ரூபா.300,000/-) வரையில் மீளளிப்புச் செய்வதன் மூலம், இந்நிகழ்ச்சித்திட்த்தினை வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ளன. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், பதப்படுத்தப்பட்ட உணவுக் கைத்தொழில்துறை, பொதியிடல் கைத்தொழில்துறை, பெறுமதி சேர்த்த தேயிலைத் துறை, பெறுமதி சேர்த்த வாசனைத் திரவியத்துறை மற்றும் தும்பு கைத்தொழில்துறை என்வற்றினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 50 கைத்தொழிலாளர்களுக்கு 2018 ஆம் ஆண்டிற்கான இந்த வாய்ப்பு அளிக்கப்படும். ஒதுக்கீடு ரூபா 16 மில்லியன்..

- அமைச்சானது சிறிய மற்றும் நடுத்தர பதப்படுத்தப்பட்ட உணவு கைத்தொழில்துறைக்காக சிறந்த தயாரிப்பு செயல்முறைகளினை அமுல்படுத்தியுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தில், இலங்கை கட்டளைகள் நிறுவகத்திடமிருந்து சிற்நத பாதுகாப்பு செயல்முறை (GMP) சான்றிதழ்களினைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான வழிகாட்டுதல்கள் மற்றும் நிதி ஆதரவு என்பன வழங்கப்பட்டுள்ளன. கைத்தொழிலாளர்கள் அமைச்சுக்கு சான்றிதழ்கள் மற்றும் வவுச்சர்களினை வழங்கியதன் பின்னர் மொத்த சான்றுப்படுத்தல் செலவில் ஆகக்கூடுதலாக ரூபா.100,000/- வரையில் மீளளிக்கப்படுவதன் மூலம் இந்நிகழ்ச்சித்திட்டத்தினை வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ளனர். இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக, 80 கைத்தொழிலாளர்கள்

2018 ஆம் ஆண்டிற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். ஒதுக்கீடு ரூபா 5.5 மில்லியன்.

### திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

- பொதியிடல் தொழில்நுட்பத்தில்12 நாட்களினைக் கொண்ட வார இறுதிச் சான்றிதழ் பாடநெறியினை நடாத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமானது, பொதியிடல் கைத்தொழில் துறைக்கான காலத் தேவையாகவுள்ள தொழில்நுட்பவியலாளர்களின் அறிவு மற்றும் திறன்களை அதிகரிப்பதேயாகும். இந்த நிகழ்ச்சித்திட்டமானது, அமைச்சு மற்றும் பொதியிடல் அபிவிருத்தி நிலையத்துடன் இணைந்து அமுல்படுத்தப்படும். பொதியிடல் கைத்தொழிலில் ஈடுபடுகின்ற 24 தொழில்நுட்பவியலாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். ஒதுக்கீடு ரூபா 1.0 மில்லியன்.

### சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள்.

- உணவ தொடர்பான / பொதியிடல தொடர்பான கண்காட்சி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 2018 ஆக்ஸ்டில் பெருமளவிலான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கண்காட்சியாளர்களின் பங்குபற்றுதலுடன் பதினேழாவது தடவையாக இலங்கை உணவு பதப்படுத்துனர் சங்கத்துடன் ஒஒருங்கிணைந்து அமைச்சினால் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.

- இந்தியா, பாகிஸ்தான், சீனா, ஐக்கிய அமரிக்கா, டுபாய், தாய்லாந்து, தாய்வான், மலேசியா, ஹொலண்ட், சிங்கப்பூர் மற்றும் ஜேர்மனியிலிருந்தான கைத்தொழிலாளர்களுடன இணைந்து பெருமளவிலான உள'நாட்டு கைத்தொழில் துறையினைச் சார்ந்நதவர்களும் இக் கண்காட்சியில் பங்குபற்றியிருந்தார்கள். அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கான விசேட கண்காட்சியில் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களுக்கு விசேட சலுகை விலையில் விற்பனை நிலையங்கள் வழங்கப்பட்டன. அத்துடன், அமைச்சானது கைத்தொழில் மற்றும் பல்கலைக்கழகங்கள் என்பவற்றிற்கிடையில் இணைப்பினை உருவாக்கும் பொருட்டு அவர்களின் ஆராய்ச்சிப் பொருட்களினைக் காட்சிப்படுத்துவதற்கான வாய்ப்பினை வழங்கும் நோக்குடன் அவற்றினை கண்காட்சிக்கு அழைப்பதன் மூலம் பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்களின் பங்குபற்றுதலினை ஊக்குவிப்பதில் விசேட கவனம் செலவுத்தியுள்ளது. **இற்கான நிதி ஒதுக்கீடு ரூபா.2.0 மில்லியனாகும்.**

- “லங்கா பக் 2018” கண்காட்சியானது உள்நாட்டு பொதியிடல் கைத்தொழில்களுக்கு வெளிநாட்டுச் சந்தை வாய்ப்புக்களினை அதிகரிக்கும் நோக்குடன் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 17 ஆவது தடவையாக வெற்றிகரமாக நடாத்தப்பட்டுள்ளது. இக் கண்காட்சியின் நோக்கம், இலங்கையில் பொதியிடல் கைத்தொழில் துறையில் அதிகரிப்பினை, விருத்தியினை ஏற்படுத்துவதுடன் பொதியிடல் தொழில்நுட்பத்திலுள்ள அனுபவத்தினைப் பகிர்ந்து கொள்வதேயாகும். கண்காட்சியானது இலங்கை பொதியிடல் நிறுவகத்துடன் (SLIP) இணைந்து அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டதாகும். **இற்கான நிதி ஒதுக்கீடு ரூபா.2.0 மில்லியனாகும்.**

- சர்வதேச வர்த்தக கண்காட்சியொன்று சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களினைத் தரமுயர்த்துதல் மற்றும் சர்வதேச சந்தைகளினைக் கவருதல் போன்ற நோக்கங்களுடன் கிழக்கு மாகாணத்தினை அடிப்படையாகக் கொண்ட பதப்படுத்தப்பட்ட உணவு கைத்தொழில்களுக்காக நடாத்தப்பட்டது. அமைச்சானது சலுகை அடிப்படையில் சேவைகளினை வழங்கும் பொருட்டு விசேட வர்த்தக கண்காட்சியொன்றினையும் ஏற்பாடு செய்துள்ளது. . **இற்கான நிதி ஒதுக்கீடு ரூபா.0.45 மில்லியனாகும்.**

# அபிவிருத்திப் பிரிவு - 11

## முகவுரை

இப்பிரிவின் பிரதான நோக்கம் உலகளாவிய ரீதியில் போட்டிமிக்க அதி உயர் தரமான பொருட்களை உற்பத்தி செய்யும் அதன் நோக்கெல்லையின் கீழான தயாரிப்புத் துறைகளுக்கு வசதியளிப்பதேயாகும்.

## இப் பிரின் நோக்கெல்லையின் கீழான துறைகள்

- சாயம் மற்றும் அச்சு தயாரிக்கும் கைத்தொழில்
- இறப்பர் அடிப்படையிலான கைத்தொழில்
- உலோகப் பொருட்கள் மற்றும் இயந்திர தயாரிப்புக் கைத்தொழில்
- படகு கட்டுமானக் கைத்தொழில்
- மோட்டார் வாகன மற்றும் போக்குவரத்து உபகரண கைத்தொழில்
- முரம் மற்றும் மர அடிப்படையிலான கைத்தொழில்
- பிளாஸ்ரிக் அடிப்படையிலான கைத்தொழில்
- இரசாயனம் சார்ந்த கைத்தொழில்
- ஒளியில் மற்றும் புகைப்பட உபகரணக் கைத்தொழில்

### 31 டிசம்பர் 2018ம் திகதியில் முன்னேற்றம்

## திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டம்

- **இறப்பர் துறை**

#### தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் (CPD)

இலங்கை இறப்பர் கைத்தொழில்துறையானது நாட்டின் பிரதான நிதி ஈட்டும் துறையாக அடையாளங் காணப்பட்டுள்ளது. இக் கைத்தொழில்துறையானது தொழில்நுட்ப விருத்திக்காக அதன் செயற்பாடுகளை எப்பொதும் அர்ப்பணிப்புடன் வழங்கி வருகின்றது. நவீன இயந்திர சாதனைங்களைப் பொருத்தவதனூடாக மட்டும் தொழில்நுட்பம் முன்னேறியுள்ளதாக கூறி விட முடியாது. அத்தகைய இயந்திர சாதனங்களை கையாளக்கூடிய பதவியினரை ஆட்சேர்ப்புச் செய்வதும் அவசியமாகின்றது.

ஆகையல், தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி என்பன உலக சந்தையில் நிலையான வளர்ச்சியினை அடைவதற்கு உலகளாவிய ரீதியில் போட்டியாகவுள்ளவற்றினை விருத்தி செய்ய வேண்டியுள்ளது.

எனவே, அமைச்சானது தனியார் துறை யிலுள்ள 68 தொழில்நுட்பம் சாராத பதவியினர், ஆராய்ச்சி நிறுவகங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் மற்றும் அரசாங்க துறை அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் இலங்கை பிளாஸ்ரிக் மற்றும் இறப்பர் நிறுவகத்துடன் (PRI) இணைந்து தொழில்நுட்பம் சாராத செயலமர்வுக்காக தொடர்ச்சியான தொழில்சார் விருத்தி இறப்பர் தொழில்நுட்பத்தினை 2018 டிசம்பர் 06 – 07 நடாத்தியது, இதில் தனியார் துறையைச் சார்ந்த 68 தொழில்நுட்பம் சாராத ஊழியர்கள் பங்குபற்றினர். இதற்காக ரூபா.0.2045 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### பிளாஸ்ரிக் விஞ்ஞான தொழில்நுட்ப பட்டப் படிப்பு நிகழ்ச்சித்திட்டம்

இறப்பர் துறையின் மதியுரைக் குழவானது இத் துறையில் உலகளாவிய ரீதியில் தற்போது எழுந்துள்ள சவால்கள் மற்றும் திறன் இடைவெளி என்பன தொடர்பில் அமைச்சு அதிகாரிளுடன் பேச்சவார்த்தை நடாத்தியுள்ளது. எனவே, அமைச்சானது இத்துறையிலுள்ள திறன் விருத்தி கொண்ட ஆட்களைக் கொண்டு இவ்விடைவெளியினை நிரப்புவதற்றான முன்னுரிமைத் தேவைப்பாடுகளினை இனங்கண்டள்ளது.

எனவே, அமைச்சானது பிளாஸரிக் மற்றும் இறப்பர் நிறுவகத்தில் பிளாஞ்ரிக் விஞ்ஞான தொழில்நுட்ப பட்டபப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தினைத் தொடருவதற்கு 19 மாணவர்களுக்குத் தேவையான நிதி உதவியினை அளித்துள்ளது.

இந்தப்பட்டப் படிப்பு நிகழ்ச்சித்திட்டமனது 3 வருட காலப்பகுதியினைக் கொண்டதாகும். இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூபா.5,252,000 ஆகும். ஆமைச்சு இதில் 50மூ இனைப் பொறுப்பேற்பதுடன் அதன் பெறுமதி ரூபா.2,626,000 ஆகும்.

#### இறப்பர் கொத்தணி இளைய வலையமைப்பு (RCYN) நிகழ்ச்சித்திட்டம்

இறப்பர் முதன்மைத் திட்டமானது நாட்டில் இறப்பர் துறையினை விருத்தி செய்வதற்கான ஓர் கொள்கை ஆவணமாகும். முதன்மைத் திட்டமானது முதன்மைத் திட்ட இலக்குகளினை அடைவதற்கான 25 கருத்திட்டங்கள் உள்ளடங்கலான பத்து (10) நிகழ்ச்சித்திட்ங்களைக் கொண்டுள்ளது. இறப்பர் கொத்தணி இளைய வலையமைப்பானது (RCYN) இறப்பர் முதன்மைத் திட்டத்திலுள்ள பிரதான கருத்திட்டங்களில் ஒன்றாகும் என்பதுடன் இலங்கை இறப்பர் செயலகம் மற்றும் இறப்பர் உற்பத்திப் பொருட்கள் தயாரிப்புத் துறையின் மதியுரைக்குழு என்பவற்றின் ஓருங்கிணைவுடன் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சினால் அமுல்படுத்தப்படுகின்றது.

இக்கருத்திட்டத்தின் ஆரம்பிக்குகைக்காக அமைச்சானது தனியார் துறை, ஆராய்ச்சி நிறுவகங்கள் மற்றும் பொதுத் துறையினை பிரதிநிதித்துவப்படுத்தும் கனிஸ்ட, நடுத்தர மற்றும் சிரேஸ்ட மட்டத்திலான அலுவல்களுக்கான ஏழு (07) வதிவிட தலைமைத்துவ செயலமர்வுகளை நடாத்தியுள்ளது. செயலமர்வுகளின் நோக்கமானது, உற்பத்தித்திறன் மேம்படுத்தல்களுக்கான தொழில்நுட்ப மற்றும் உபாய முகாமைத்துவ எண்ணக்கருக்களில் காணப்படும் பிந்திய போக்குகளினை மெச்சுவதற்கு அரசாங்க அதிகாரிகள் மற்றும் கைத்தொழில் நிறைவேற்றுனர்களாக இருக்கின்ற இளம் தொழில்சார் வல்லுனர்களை இலங்கை இறப்பர் கைத்தொழிலில் எதிர்கால கைத்தொழில் தலைவர்களாக அவர்களை வளர்த்தெடுப்பதற்கு அனுமதிப்பதேயாகும்.

மேலும், தனியார் மற்றும் அரச துறையிலிருந்து 148 பங்குபற்றாளர்கள் ஏழு செயலமர்வுகளில் பங்குபற்றியுள்ளதுடன் அமைச்சும் எதிர்காலத் தலைவர்களுக்கான விருது வழங்கும் வைபவம் ஒன்றினையும் ஏற்பாடு செய்திருந்தது. அமைச்சு இதற்காக ரூபா.10.25 மில்லியனை செலவிட்டுள்ளது.

## சந்தை ஊக்குவிப்பு

- **இறப்பர் மற்றும் மோட்டார் வாகனத் துறை**

இறப்பர் முதன்மைத் திட்டம் (RMP) 2017 – 2026 ஆனது இறப்பர் கைத்தொழில் அபிவிருத்திக்கான தேசிய நிகழ்ச்சி நிரலொன்றாகும். இந்த இறப்பர் முதன்மைக் கருத்திட்டத்தின்

பிரதான நோக்கத்தில் ஒன்று, ஏஜளுஜமுழே 2025 மற்றும் தேசிய ஏற்றுமதி உபாயம் (NES) என்பவறிற்கு இணையாக 2025 இல் 3.5 அமெரிக்க டொலருக்கு மேற்பட்ட ஏற்றுமதிப் புரள்வினை அடைவதேயாகும்.

இந்த இலக்கானது ஒட்டுமொத்த பெறுமதி சேர்ப்பு சங்கிலிக்கு மேற்பட்ட முன்னேற்றத்தினைக் கொண்டு வருகின்ற 25 விதித்துரைக்கப்பட்ட செயலாக்கம் நிறைந்த கருத்திட்டங்களின் இணைந்த நிகழ்ச்சித்திட்டமாகும்.

இறப்பர் கைத்தொழில் விருத்தியினை மேம்படுத்தவதற்கு, வெளிநாடுகளிலுள்ள முதலீட்டாளர்கள், வாங்குனர்கள் மற்றும் தொழில்நுட்ப வழங்குனர்களுடன் தொடர்புகளினைப் பேணுவது மிகவும் முக்கியமானதாகும். இலங்கையின் இறப்பர் உற்பத்திப் பொருட்களின் உபாய ஊக்கவிப்பகக்ன கருத்திட்டமானது முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய கருத்திட்டங்களில் மிகவும் முக்கியமானதொன்றாகும். இக்கருத்திட்டத்திற்கு ஆதரவளிக்கும் வகையில், சர்வதேச மாநாடொன்றினை நடாத்தவதற்குத் திட்டமிட்டுள்ளோம். கண்காட்சி மற்றும் வியாபாரம் தொடர்பிலான கூட்டங்கள் என்பன பெருமளவில் வெளிநாட்டு வாங்குனர்களைக் கவருவதற்கு வழி வகுக்கும்.

இந்த கருத்திட்டமானது, மேற்படி நோக்கத்தினை அடையும் நோக்குடன் அமைச்சு மற்றும் மதியுரைக் குழு என்பன இணைந்து திட்டமிடுவதற்கும் அமுல்படுத்துவதற்கும் வழி வகுக்கும். எனவே இறப்பர் உற்பத்திப் பொருள் தயாரிப்புத் துறை மற்றும் மோட்டார் வாகன உதிரிப்பாக தயாரிப்புத் துறை என்பவற்றின் மதியுரைக்குழுவானது 2018 நவம்பர் 13 – 16 ஆம் திகதி வரையில் தென்னாபிரிக்காவிலும் 2018 ஜுன் 13 – 15 ஆம் திகதி வரையில் மியான்மாரில் நடாத்தப்படும் COMPLAST (இறப்பர், மோட்டார் வாகன உதிரிப்பாகம் மற்றும் பிளாஸ்ரிக் உற்பத்திப் பொருட்கள்) இல் பங்குபற்றுவதற்கு விமானச் சீட்டில் 50மூ உமும் தங்குமிட வசதிகளில் 50மூ சலுகையினை வழங்கியுதவுமாறு கோரிக்கை விடுத்துள்ளன.

## தொழில்நுட்ப அபிவிருத்தி

- **NVQ நியமங்களுக்கான முன் பாடநெறிகளினைத் தரமுயர்த்துதல்**

இலங்கை பிளாஸ்ரிக் மற்றும் இறப்பர் நிறுவகமானது (PRI) பிளாஸ்ரிக் மற்றும் இறப்பர் துறையுடன் தொடர்புடைய பட்டப்படிப்பு மற்றும் டிப்புளோமா பாடநெறியினை இலங்கையில் நடாத்தகின்ற ஒரேயொரு நிறுவனமாகும். இதனால், இலங்கை பிளாஸ்ரிக் மற்றும் இறப்பர் நிறுவகமானது (PRI)> NVQ நியமங்களுக்கான அவற்றின் பாடநெறிகளினைத் தரமுயர்த்தவதற்கு தீர்மானித்துள்ளது. அதற்கிணங்க, துறையிலுள்ள தொழில்நுட்ப திறன் விருத்தி பாடநெறிகளினை மேம்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்து கவனத்தில் கொள்கின்றது. அமைச்சானது புதிய விடயங்கள் மற்றும் பாடவிதானங்களினைப் பின்பற்றுவதற்கு கற்பித்தல் நடைமுறைகளுக்குட்பட்ட வகையில் அவற்றின் விரிவுரைகளுக்கு பயிற்சியளிப்பதற்கான நிதி உதவுகையினை வழங்கியுள்ளது.

எனவே, தனியார் துறை, ஆராய்ச்சி நிறுவகங்கள். பல்கலைக்கழகங்கள் மற்றும் அரசாங்க துறைகளினைச் சேர்ந்த 75 பரீட்சார்த்திகளின் பங்குகுபற்றுதலுடன் 2018 15 – 16 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டது. இதற்கான மொத்தச் செலவு: ரூபா. 0.620 மில்லியனாகும்.

## ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

- **உலோகத் துறை**

**உலோக உற்பத்திப் பொருட்களின் தர நிர்ணயம்**

உலோக கைத்தொழில்துறையானது இலங்கையில் புராதன காலந்தொட்டு இடம்பெற்று வருவதுடன் 16 ஆம் நூற்றாண்டில் பதிவு செய்ப்பட்டுள்ளது. உலோகத் துறையானது நாட்டிலுள்ள ஏனைய கைத்தொழில் துறைகளுக்கு ஆதரவளித்து வருகின்றது. இது நாடு முழுவதும் பரந்து காணப்படுவதுடன் முறையான மற்றும் முறையற்ற கைத்தொழில்களில் 60,000 இற்கு மேற்பட்டவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இத்துறையானது நாட்டின் பொருளாதாரத்திற்கு கணிசமானளவு பங்களிப்பினை வழங்கி வருகின்றது.

உலோக அடிப்படையிலான தயாரிப்புக் கைத்தொழிலின் மதியுரைக் குழுவானது உலோக அடிப்டையிலான உற்பத்திப் பொருட்களுக்கான தர நியமங்களை அறிமுகப்படுத்துவதற்கு கைத்தொழில் ஆணைக்குழுவினூடாக முன்மொழிவொன்றினைச் சமர்ப்பித்துள்ளது. இந்த நோக்கத்திற்காக, அமைச்சானது இலங்கை கட்டளைகள் நிறுவகம், வர்த்தக திணைக்களம், பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை, இலங்கைச் சுங்கம் மற்றும் தனியார் நிறுவனங்கள் என்பவற்றுடன் இணைந்து குழுவொன்றினை நியமித்துள்ளது.

எனவே, குழவானது நுகர்வப் பொருட்களாக பெருமளவில் பயன்படுத்தப்படுகின்ற 06 பொருட்களுக்கான தர நியமங்களை அறிமுகப்படுத்தவதற்குத் தீர்மானித்தள்ளது. அவை நீர் இறைக்கும் இயந்திரங்கள், பாடசாலை தண்ணீர்ப் போத்தல், அலுமினிய பிரித்தெடுப்புக்கள், தெளிப்பான்கள், அலுமினிய சமையல் பாத்திரங்கள் மற்றும் கத்திகள் ஆகியனவாகும். 2019 இல் இவற்றினை அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டு உரிய தரப்புக்க்ளுடன் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

# அபிவிருத்திப் பிரிவு - 111

## முகவுரை

## பிரதான குறிக்கோள்கள் / நோக்கங்கள்

சர்வதேச சந்தையில் போட்டியாக இருக்கும் வகையில் உயர் தரமான பொருட்களை உற்பத்தி செய்யும் பொருட்டு தயாரிப்புத் துறைகளினை ஊக்குவித்தலும் வசதிப்படுத்தலும்.

**இப் பிரிவின் மீளாய்வின் கீழான துறைகள்**

- பாதணி கைத்தொழில்
- தோல் கைத்தொழில்
- பீங்கான் கைத்தொழில்
- மின்சார மற்றும் இலத்திரனியல் கைத்தொழில்
- மருந்தாக்கல் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் கைத்தொழில்
- பெயின்ற் மற்றும் அச்சடித்தல் கைத்தொழில்
- தைத்த ஆடைகள் மற்றும் ஏனைய கைத்தொழில் உற்பத்திகள் ∴ பாகங்கள்

**31 டிசம்பர் 2018ம் திகதியில் முன்னேற்றம்.**

## பாதணி மற்றும் தோல் கைத்தொழில்

### • பாதணி மற்றும் தோல் பொருட்கள் கண்காட்சி

இந்த வருடத்தில் பாதணி மற்றும் தோல் பொருட்கள் கண்காட்சி வெற்றிகரமாக நடாத்தப்பட்டதுடன் இந்நிகழ்விற்காக அமைச்சு ரூபா.4 மில்லியனைச் செலவிட்டுள்ளது.

22 வெளிநாட்டு பங்குபற்றாளர்களின் விற்பனை நிலையங்கள் உள்ளடங்கலாக 230 விற்பனை நிலையங்கள் இருந்துள்ளன. இந்த கண்காட்சியில் 16,000 இற்கு மேற்பட்ட உள்நாட்டு பார்வையாளர்களும் 108 கைத்தொழிலாளர்களும் பங்குபற்றியிருந்தார்கள்.

### • பாதணிக் கைத்தொழிலுக்கான பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டம்

பாதணி கைத்தொழிலில் உற்பத்திப்பொருள் விருத்தியின் தேவையினை அடையாளங் காண்பதில், கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சானது இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை, இலங்கை புடவைகள் மற்றும் தைத்த ஆடைகள் நிறுவகத்துடன் இணைந்து 2018 இல் மன்னார், குருநாகல் மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் பல்வேறு பாதணி உற்பத்திப் பொருள் விருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களினை நடாத்தியுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கங்களாவன, உற்பத்திப் பொருட்களின் தரத்தினை மேம்படுத்துதல் மற்றும் சிறியளவிலான பாதணி உற்பத்தியாளர்களுக்குப் புதிய தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்துதல் என்பனவாகும். இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 85 பயிற்சியாளர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளதுடன் இதற்காக ரூபா.02 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

## மருந்தாக்கல் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் கைத்தொழில்

- அமைச்சானது உள்ளூர் மருந்தாக்கல் தயாரிப்பாளர்களிடமிருந்து அரசாங்க வைத்தியசாலைகளுக்கான மருந்தாக்கல் பொருட்களின் கொள்வனவினை அதிகரிப்பதற்கத் தேவையான நடவடிக்கையினை எடுத்துள்ளது.
- அழகுசாதனப் பொருட்கள் துறைக்கான சட்டமொன்றினைத் தயாரிப்பதற்காக சுகாதார அமைச்சுக்கு உதவியளித்தல்.
- அழகுசாதனப் பொருட்களின் பரிசோதனை வசதியினை அதிகரிப்பதற்கு கொழும்பு பல்கலைக்கழகத்தில் இலங்கை மருந்தாக்கல் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் ஆய்வுகூடமொன்றிற்கான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை வழங்குதல். அமைச்சு இக் கருத்திட்டத்திற்காக ரூபா.22.50 மில்லியனைச் செலவிட்டுள்ளது.

## மின்சார மற்றும் இலத்திரனியல் துறை

### • மின்சார மற்றும் இலத்திரனியல் கைத்தொழிலுக்குப் புதிய உற்பத்திப் பொருட்களினை அறிமுகப்படுத்தும் கண்காட்சி (INCO கண்காட்சி)

இந்தக் கண்காட்சியின் பிரதான நோக்கம், உள்ளூர் கைத்தொழிலாளர்களை ஊக்குவித்தல், அவர்களின் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான சிறந்த சந்தையினைக் கண்டறிவதற்கான அதிகூடிய ஆதரவினை அவர்களுக்கு வழங்குவதேயாகும்.

ஐஹேமு – 2018 வெற்றிகரமாக நடாத்தப்பட்டுள்ளதுடன் அமைச்சானது இந்நிகழ்விற்காக ரூபா.1.5 மில்லியனைச் செலவிட்டுள்ளது. இக்கண்காட்சியில் 248 விற்பனை நிலையங்கள் தாபிக்கப்பட்டுள்ளதுடன் 145,000 இற்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் பங்கபற்றியிருந்தார்கள். அமைச்சானது இத்தகைய கண்காட்சிக்கு அனுசரணை வழங்குவதன் மூலம் பொருட்களின் உற்பத்திக்கான புதிய தொழில்நுட்ப புத்தாக்கத்தினை அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றது.

## பீங்கான் உற்பத்திப் பொருட்கள் துறை

### • சிவப்பு மண் கூரை ஓடு தயாரிக்கும் கைத்தொழிலுக்கு எஸ்எல்எஸ் தர நிர்ணயச் சான்றிதழினைப் பெற்றுக் கொள்ளுதல்

அமைச்சானது சிவப்பு களிமண் கூரை ஓட்டுத் தயாரிப்பு கைத்தொழிலின் நற்பெயரினை அதிகரிப்பதற்காக

இலங்கை கட்டளைகள் நிறுவகத்திடமிருந்து தரநிர்ணச் சான்றுப்படுத்தலினைப் பெற்றுக் கொள்வதற்கு உதவியளிக்கின்றது. இக்கருத்திட்டத்தின் கீழ். அமைச்சானது இலங்கை கட்டளைகள் நிறுவகத்திடமிருந்து தரநிர்ணயத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு20 கைத்தொழிலாளர்களுக்கு உதவிய ளித்துள்ளதுடன் அமைச்சானது இக்கருத்திட்டத்திற்காக ரூபா.4.3 மில்லியனைச் செலவிட்டுள்ளது.

- **உள்ளூர் கூரை ஓட்டுத் தயாரிப்பாளர் களுக்காக புதிய உலர்த்தியி-னை அறிமுகம் செய்தல்**

இக் கருத்திட்டத்தின் கீழ். அமைச்சானது கூரை ஓட்டு உலர்த்தி இயந்திரத்தினை விருத்தி செய்தல் மற்றும் நிறுவுதலுக்காக ரூபா.2 மில்லியனைச் செலவிட்டுள்ளது.

அமைச்சானது இக கருத்திட்டத்தின் உற்பத்திச் செலவினைக் குறைத்து உற்பத்திப் பொருட்களின் வினைத்திறன் மற்றும் தரத்தினை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கின்றது.

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னோடிக் கருத்திட்டமானது நிறைவு பெற்றுள்ளதுடன் மேலதிக அபிவிருத்திச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

- **உள்ளூர் கைத்தொழில் அமுலாக்கத்திற்கான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிதியம்**

அமைச்சானது உள்ளூர் தயாரிப்புக் கைத்தாழில்கள் தமது ஆராய்ச்சி மற்றும் உற்பத்திப் பொருட்களின் புத்தாக்க விருத்திகள் என்பவற்றினை மேற்கொள்வதற்காக நிதியமொன்றினைத் தாபித்துள்ளது. 09 கைத்தொழிலாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களின் புதிய கருத்திட்டங்களுக்காக ரூபா.8.3 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

## ஏனைய நிகழ்வுகள்

- **நிருமாணம் 2018 கண்காட்சி**

இக்கண்காட்சியானது வெளிநாட்டு முதலீட்டினை ஊக்குவித்தல். புிந்திய தொழில்நுட்பங்களை வெளிக்காட்டுதல், அவர்களின் பொருட்கள் மற்றம் சேவைகளினை ஊக்குவித்தல் மற்றும் காட்சிப்படுத்துவதற்கான வாய்ப்பினை அக்கறைதார்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் உள்நாட்டு நிருமாணக் கைத்தொழிலின் ஆற்றல் மற்றும் போட்டித்தன்மையினை அதிகரிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

நிருமாணம் 2018 கண்காட்சி வெற்றிகரமாக நடாத்தப்பட்டதுடன் அமைச்சானது இதற்காக ரூபா.1 மில்லியனைச் செலவிட்டுள்ளது. இக் கண்காட்சியில் 300 விற்பனை நிலையங்கள் தாபிக்கப்பட்டதுடன் 40,000 இற்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் பங்குபற்றியிருந்தார்கள்.

# கைத்தொழில் பதிவுப் பிரிவு

---

### முகவுரை

### பிரதான இலக்குகள் / நோக்கங்களை

- கைத்தொழில் பதிவினை மேம்படுத்தல்
- தயாரிப்பு கைத்தொழிற்சாலைகளின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கு உதவியளித்தல்

### செயற்பாடுகள்

- தயாரிப்புக் கைத்தொழிற்சாலைகளைப் பதிவுசெய்தலும் தரவுத்தளத்தை இற்றைப்படுத்தலும்
- வலுச்சக்தி பாவனை வினைத்திறனை அதிகரிப்பதற்கும் வலுச்சக்திப் பாவனை ஆகுசெலவைக் குறைப்பதற்குமான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

31 டிசம்பர் 2018

- **வலுச்சக்தி வினைத்திறன் மேம்படுத்தலுக்கான கருத்திட்டம் - 2ம் கட்டம்**

### நோக்கங்கள்

- இக்கருத்திட்டத்தின் பிரதான நோக்கம் வலுச்சக்தி வினைத்திறனை அதிகரிப்பதன் ஊடாக தயாரிப்பு கைத்தொழிற்சாலைகளின் உற்பத்தித்திறனை அதிகரித்தல் ஆகும்.
- தேசிய மின்பிறப்பாக்கி மற்றும் ஏனைய மூலங்களில் இருந்து பெற்றுக்கொள்ளப்படும் வலுச்சக்தியை சேமித்தலும் கைத்தொழில்துறை ஆகுசெலவைக் குறைத்தலும் ஆகும்
- இந்தக் கருத்திட்டம் வலுச்சக்தித் தேவைகளை அளவிடுவதற்கும் வலுச்சக்தி வினைத்திறனை மேம்படுத்தவதற்கான விதப்புரைகளை வழங்குவதற்கும் தயாரிப்பு கைத்தொழிற்சாலைகளைத் தேர்ந்தெடுத்து வலுச்சக்தி நுண்ணாய்வுகளை மேற்கொள்வதற்கு உதவும். இந்தக் கருத்திட்டத்திற்கான முழு ஒதுக்கீடு ரூபா 4.5 மில்லியன் ஆகும்.
- ஆரம்ப வலுச்சக்தி நுண்ணாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதன் அடிப்படையில் பதினைந்து கைத்தொழிற்சாலைகளில் பன்னிரெண்டு கைத்தொழிற்சாலைகளில் விரிவான வலுச்சக்தி நுண்ணாய்வு நடாத்தப்பட்டுள்ளது. இந்த ஆவண நுண்ணாய்வானது வளாக பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் மேற்கொள்ளப்படும். இது பின்வரும் : தயாரிப்பு மற்றும் திட்டமிடல், கடந்த 12 மாதங்களுக்கான வரலாற்று வலுச்சக்தி தரவுப் பகுப்பாய்வு, பிரதான ஆக்கக்கூறுகளைக் கொண்டிருக்கும், அவதானிப்பின் அடிப்படையில் பரிசோதனை மற்றும் அளவீடுகள், கணிப்பீடு மற்றும் மதிப்பீடு, வலுச்சக்தி மாற்ற சந்தர்ப்பங்களுக்கான விதப்புரைகள் எனும் பிரதான ஆக்கக்கூறுகளைக் கொண்டிருக்கும். இது வரை 10 விரிவான வலுச்சக்தி ஆய்வுகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.
- இந்தக் கருத்திட்டத்திற்கு 31 டிசம்பர் 2018ம் திகதி வரையிலான உண்மையான செலவு ரூபா 1.8 மில்லியன் ஆவதுடன், இக்கருத்திட்டம் 2019ம் ஆண்டு பூர்த்தியடையும்.

## கைத்தொழில் பதிவு

**அட்டவணை 7.1**

**கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் தொழிற்படும் பதிவுசெய்யப்பட்ட கைத்தொழிற்சாலைகள்:**
**( 31 டிசம்பர் 2018ம் திகதியில், உபதுறை ரீதியாக)**

| பிரிவு | 2017 டிசம்பர் வரை தொழிற்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை | பங்கு (%) | 2018 டிசம்பர் வரை தொழிற்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை | பங்கு (%) | வளர்ச்சி (%) |
|---|---|---|---|---|---|
| உணவு, குடி பானம் மற்றும் புகையிலை (31) | 411 | 16.3 | 451 | 16.9 | 9.73 |
| துணி, ஆடைகள் மற்றும் தோற்பொருட்கள் (32) | 511 | 20.3 | 521 | 19.5 | 1.96 |
| மரம், மரம் சார்ந்த பொருட்கள் (33) | 86 | 3.4 | 90 | 3.4 | 4.65 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கடதாசி மற்றும் கடதாசிப் பொருட்கள் (34) | 207 | 8.2 | 225 | 8.4 | 8.70 |
| இரசாயன, பெற்றோலியம், இறப்பர், பிளாஸ்டிக் பொருட்கள் (35) | 570 | 22.7 | 594 | 22.2 | 4.21 |
| உலோகம் அல்லாத பொருட்கள் மற்றும் கனியப் பொருட்கள் (36) | 133 | 5.3 | 152 | 5.7 | 14.29 |
| உலோக அடிப்படைப் பொருட்கள் (37) | 65 | 2.6 | 70 | 2.7 | 7.69 |
| உலோக நிர்மாணப் பொருட்கள் (38) | 424 | 16.9 | 461 | 17.2 | 8.73 |
| ஏனையவை (39) | 107 | 4.3 | 110 | 4.0 | 2.80 |
| **மொத்தம்** | **2,514** | **100** | **2674** | **100** | **6.36** |

*மூலம் : கைத்தொழில் கதிவுத் தரவுத்தளம்*

**வரைவு 7.1**

31 - உணவு, குடி பானம் மற்றும் புகையிலை

32 - துணி, ஆடைகள் மற்றும் தோற்பொருட்கள்

33 - மரம், மரம் சார்ந்த பொருட்கள்

34 - கடதாசி மற்றும் கடதாசிப் பொருட்கள்

35 - இரசாயன, பெற்றோலியம், இறப்பர், பிளாஸ்டிக் பொருட்கள்

36 - உலோகம் அல்லாத பொருட்கள் மற்றும் கனியப் பொருட்கள்

37 - உலோக அடிப்படைப் பொருட்கள்

38 - உலோக நிர்மாணப் பொருட்கள்

39 - ஏனையவை

*மூலம் : கைத்தொழில் கதிவுத் தரவுத்தளம்*

உணவு, குடி பானம் மற்றும் புகையிலை (31) - 16.87%

துணி, ஆடைகள் மற்றும் தோற்பொருட்கள் (32) - 19.48%

மரம், மரம் சார்ந்த பொருட்கள் (33) - 3.37%

கடதாசி மற்றும் கடதாசிப் பொருட்கள் (34) - 8.41%

இரசாயன, பெற்றோலியம், இறப்பர், பிளாஸ்டிக் பொருட்கள் (35) - 22.21%

உலோகம் அல்லாத பொருட்கள் மற்றும் கனியப் பொருட்கள் (36) - 5.68%

உலோக அடிப்படைப் பொருட்கள் (37) - 2.62%

ஏனையவை (38) - 17.24%

ஏனையவை (39) - 4.11%

*மூலம் : கைத்தொழில் கதிவுத் தரவுத்தளம்*

•

# இரசாயன ஆயுத உடன்படிக்கையினை செயற்படுத்தும் தேசிய அதிகாரசபை

### முகவுரை

இரசாயன ஆயுத உடன்படிக்கையினை செயற்படுத்தும் தேசிய அதிகாரசபையானது, இரசாயன ஆயுதங்களை விருத்தி செய்தல், உற்பத்தி செய்தல், களஞ்சியப்படுத்தல், உபயோகித்தல் என்பவற்றோடு அதனால் ஏற்படும் அழிவுகளையும் தடை செய்வதற்காக உருவாக்கப்பட்ட 2007ஆம் ஆண்டு 58ம் இலக்க இரசாயன ஆயுத உடன்படிக்கையை அமுல்படுத்தவதற்காக அமைச்சின் கீழ் நிறுவப்பட்ட ஓர் அரச நிறுவனமாகும். அதேவேளை, இந்த உடன்படிக்கையானது உடன்படிக்கையில் உள்ள அட்டவணையில் உள்ள இரசாயனப் பொருட்களின் சமாதானப் பாவனையை கண்காணிக்கின்றது.

### தொலைநோக்கு

“உடன்படிக்கையின் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்ட இரசாயனப் பொருடகளின் சமாதானப் பாவனை மற்றும் பாதுகாப்பான பயன்படுத்துகை என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு, இலங்கையினுள் இரசாயன ஆயுத உடன்படிக்கையினை அமுல்படுத்தல்.”

### செயற்பணி

- 2007ஆம் ஆண்டு 58ம் இலக்க இரசாயன ஆயுத உடன்படிக்கையை அமுல்படுத்துதல்.
- தடைசெய்யப்பட்ட இரசாயன ஆயுதங்களுக்கான நிறுவனம் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுடன் வினைத்திறன் மிக்க தொடர்புகளைப் பேணுதல்.
- அட்டவணைப்படுத்தப்பட்ட இரசாயனப் பொருட்களின் செயற்பாடுகளையும் அதன் அமைதிக்கான பாவனையையும் கண்காணித்தல்.
- உடன்படிக்கையை அமுல்படுத்தவதற்காக துணை நிறுவனங்களின் இயலளவை கட்டியெழுப்பலும், அவற்றினைப் பலப்படுத்தலும்.

### பிரதான இலக்குகள் / நோக்கங்கள்

- இரசாயனப் பொருட்களின் அமைதிக்கான பயன்படுத்தலை உறுதிப்படுத்தல.
- இரசாயன கைத்தொழிற்சாலைகளுக்குள் பாதுகாப்பு கலாச்சாரத்தை அபிவிருத்தி செய்தல்.
- உரிய நிறுவனங்களின் இரசாயன அவசர நிலைமைகளில் செயற்படுதலை மேம்படுத்தல்.
- தடைசெய்யப்பட்ட இரசாயன ஆயுதங்களுக்கான நிறுவனம் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுடன் வினைத்திறன் மிக்க தொடர்புகளைப் பேணுதல்.

**பணிகள்**

- அட்டவணைப்படுத்தப்பட்ட இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்துபவர்களை பதிவுசெய்தலும், இந்த கைத்தொழில் வசதிகளை கண்காணிப்பு செய்வதற்கு அங்கு விஜயங்களை மேற்கொள்ளல்.
- இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு சபை மற்றும் இலங்கை முதலீட்டுச் சபை என்பவற்றுக்கு அட்டவணைப்படுத்தப்பட்ட இரசாயனப்பொருட்களின் பாவனையை ஒழுங்குபடுத்துவதற்கு அவசியமான விதப்புரைகளை வழங்குதல்.
- தடைசெய்யப்பட்ட இரசாயன ஆயுதங்களுக்கான நிறுவனத்திற்கு அட்டவணைப்படுத்தப்பட்ட இரசாயப்பொருட்களின் தொழிற்பாடு தொடர்பாக தரவுகளைச் சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் வருடாந்த பிரகடனத்தை சமர்ப்பித்தல்.
- சர்வதேச நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு தடைசெய்யப்பட்ட இரசாயன ஆயுதங்களுக்கான நிறுவனத்திற்கு ஒருங்கிணைப்புகளை மேற்கொள்ளல்.
- கைத்தொழிற்சாலைகளில் உள்ள அலுவலர்களையும் அவசரகால பதிலளிப்போர்களையும் விழிப்பூட்டல் மற்றும் பயிற்றுவித்தல்.
- இரசாயன அவசரநிலைமைகளின் போது பொறுப்புடைய அரச நிறுவனங்களுக்கும் கைத்தொழிற்சாலையாளர்களுக்குட் உதவியளித்தல்.
- இரசாயன ஆயுத உடன்படிக்கையை வினைத்திறனுடன் அமுல்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்காக உடன்படிக்கையை அமுல்படுத்தவதற்கான துணை நிறுவனங்களின் இயலளவை கட்டியெழுப்புவதற்கும், அவற்றினைப் பலப்படுத்ததுவதற்கும் உள்நாட்டு மற்றும் சர்வதேச பயிற்சிகளை வழங்குதல்..

### 31 டிசம்பர் 2019ம் திகதியில் முன்னேற்றம்

.

- **அட்டவணைப்படுத்தப்பட்ட கம்பனிகளைப் பதிவுசெய்தல்**

இதுவரை அட்டவணைப்படுத்தப்பட்ட இரசாயனப் பொருட்களை கையாளும் முப்பதியாறு கம்பனிகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. 2018ம் ஆண்டு மூன்று புதிய கம்பனிகள் பதிவுசெய்யப்பட்டன.

- **அனுமதிப்பத்திரங்களை விநியோகிப்பதற்கான விதப்புரை**

2007ம் ஆண்டு 58ம் இலக்க சட்டத்திற்கு அமைவாக, அட்டவணைப்படுத்தப்பட்ட இரசாயனப் பொருட்களை ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்வதற்கு தேசிய அதிகாரசபையின் விதப்புரை அவசியமாகும். 2018ம் ஆண்டு ஏற்றுமதி மற்றும் இறக்குமதி திணைக்களத்திற்கு நாற்பத்தியேழு விதப்புரைகள் வழங்கப்பட்டது.

- **வழமையான கம்பனி நுண்ணாய்வுகள்**

இரசாயன ஆயுத உடன்படிக்கைக்கு அமைவாக, OPCW வின் நோக்கங்களுடனும் அரசின் கொள்கைளுடனும் இரசாயனக் கம்பனிகளின் செயற்பாடுகள் இணங்குகின்றனாவா என ஆய்வுசெய்தல் வேண்டும். 2018ம் ஆண்டினுள் 10 இரசாயனக் கம்பனிகள் ஆய்வுசெய்யப்பட்டன.

- **வழமையான கம்பனி நுண்ணாய்வுகள்**

இரசாயன ஆயுத உடன்படிக்கைக்கு அமைவாக, OPCW வின் நோக்கங்களுடனும் அரசின் கொள்கைளுடனும் இரசாயனக் கம்பனிகளின் செயற்பாடுகள் இணங்குகின்றனாவா என

ஆய்வுசெய்தல் வேண்டும். 2018ம் ஆண்டினுள் 10 இரசாயனக் கம்பனிகள் ஆய்வுசெய்யப்பட்டன.

- **இலங்கையில் உள்ள அட்டவணைப்படுத்தப்பட்ட இரசாயனங்களைப் பயன்படுத்துபவர்களுக்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டம்**

அட்டவணைப்படுத்தப்பட்ட இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்தும் கம்பனிகள் மற்றும் வர்த்தகர்கள் அரச நிறுவனங்களின் ஒழுங்குவிதிகள் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றுவதுடன் இரசாய ஆயுத உடன்படிக்கையின் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்வதற்கான விசேட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சி 25 ஜுலை 2018ம் திகதி SLIDA வில் நடைபெற்றது.

### சர்வதேச ஒத்துழைப்பு

- **OPCW க்கு வருடாந்த ஆவணங்களை சமர்ப்பித்தல்**

இந்த உடன்படிக்கையின் அரச தரப்பினராக, இலங்கையில் 2017ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கைகளும் புள்ளிவிபரங்களும் அனுப்பி வைக்கப்பட்டன.

- **OPCW யினால் 2018ம் ஆண்டு நடாத்தப்பட்ட துணை நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைத்தல்**

இரசாயனப் பொருட்களை அமைதிப் பாவனைக்கு பயன்படுத்துலை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், OPCW ஒவ்வொரு வருடமும் நெதர்லாந்திலும் அதன் அங்கத்துவ நாடுகளிலும் துணை நிகழ்ச்சியொன்றை ஒழுங்குசெய்யும். இவ்வருடம் பங்களாதேஷ் மற்றும் புருணே நாடுகளின் இரு பிரதிநிதிகளை 10 – 28 செப்டெம்பர் 2018 வரை இலங்கையின் தனியார் கைத்தொழிற்துறையை கற்கை செய்வதற்காக பெயரிட்டது.

- **சர்வதேச செயலமர்வு**

நெதர்லாந்து இரசாய ஆயுதங்களைத் தடைசெய்யுவதற்கான அமைப்புடன் இணைந்து கொழும்பு சினமன் லோக்சைட் ஹொட்டலில் 4 – 6 டிசம்பர் 2018ம் திகதி வரை ஆசிய நாடுகளுக்கான “Chemical Safety and Security Management” எனும் தலைப்பிலான சர்வதேச செயலமர்வு நடாத்தப்பட்டது. தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த 30 அங்கத்தவர்கள் பங்குபற்றினர்.

### தேசிய பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம்

- **அட்டவணைப்படுத்தப்பட்ட இரசாயனங்களை பயன்படுத்தும் கைத்தொழிற்சாலைகளுக்கான “அவரசகால முகாமைத்துவத் திட்டத்தை” அபிவிருத்தி செய்வதற்கு உதவுதல்.**

கைத்தொழிற்சாலைகளில் ஏற்படும் கைத்தொழில் விபத்தகள் மற்றும் இரசாயன விபத்துகளைக் குறைக்கும் நோக்கத்துடன் அவசரகால முகாமைத்தவத் திட்டம் அபிவிருத்தி செய்யப்படுகின்றது. பத்து கம்பனிகள் பங்குபற்றியதுடன், அவர்கள் தங்களுடைய கம்பனிக்கான அவசரகால முகாமைத்தவத் திட்டத்தை தயார்செய்து தேசிய அதிகாரசபைக்கு 09 ஏப்பிரல் 2018ம் திகதி சமர்ப்பித்திருந்தனர்.

- **இரசாயன, உயிரியல் கதிர்வீச்சு மற்றும் அணுத் தாக்கங்களின் போதான பதிலளிப்புப் படைக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்.**

மோதர இராணுவ முகாமில் உள்ள இரசாயன, உயிரியல் கதிர்வீச்சு மற்றும் அணுத் தாக்கங்களின் போதான பதிலளிப்புப் படைகளுக்கு 23 – 27 ஏப்பிரல் 2018 வரை “இரசாயன ஆயுத உடன்படிக்கை மற்றும் இரசாயன ஆயுத முகவர்கள்” பற்றிய ஐந்து நாள் பயிற்சி வழங்கப்பட்டது. இதில் இலங்கை இராணுவம், இலங்கை விமானப்படை, இலங்கை கடற்படையைச் சேர்ந்த 40 பேர் பங்குபற்றினர்.

- **விரிவுரை உதவி மற்றும் பயிற்சி - 06**

எம்பிலிபிட்டிய இலங்கை இராணும் மற்றும் கட்டுநாயக்க இலங்கை வான் படையினால் ஒழுங்குசெய்யப்பட்ட இரசாயன அவசரகால முகாமைத்துவ பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கு தேசிய அதிகாரசபை விரிவுரையை வழங்கியது.

- **உள்ளூர் நலன்விரும்பி நிறுவனங்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் - 03**

தேசிய அதிகாரசபை மிக முக்கிய நபர்களுக்கு எதிரான இரசாயன அச்சுறுத்தலில் இருந்து பாதுகாப்பை வழங்குவதற்கு மிக முக்கிய நபர்களுக்கான பாதுகாப்பு ஊழியர்களுக்கு 03 நாள் பயிற்சியை வழங்கியது.

### திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

- **கைத்தொழில் பேட்டைகளுக்கு “பாதுகாப்பாக இரசாயனப் பொருட்களை கையாளுதல், தீ எதிர்ப்பு மற்றும் முதலுதவி” பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம். –06**

இரசாயன ஆயுத உடன்படிக்கை தேவைகள், இரசாயன ஆயுத உடன்படிக்கையின் சட்ட விடயங்களை பழக்கத்தில் கொண்டுவருவதல் மற்றும் இரசாயனப் பொருட்களை கையாளுதல் நடைமுறைகள் போன்றவற்றை அறிமுகப்படுத்துவதற்கு விசேட விழிப்புணர்வு நிகழ்ச்சி நடாத்தப்படும். தேசிய அதிகாரசபை நான்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை கைத்தொழில் பேட்டைகளில் நடாத்தியது. பங்குபற்றுனர்களிடமிருந்து உயர் பங்களிப்பு கிடைக்கப்பெற்றதுடன், வெற்றிகரமாக நிகழ்ச்சி பூர்த்திசெய்யப்பட்டது.

- **கைத்தொழில் பாதுகாப்பு, அவசரகால முன்னடவடிக்கைகள் மற்றும் சூழல் முகாமைத்துவம் மீதான சான்றிதழ் பாடநெறி**

கல்வியின் ஊடாக கைத்தொழில் பிரச்சினைகளைக் குறைக்கும் நோக்கத்துடன், பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து கைத்தொழில் பாதுகாப்பு, அவசரகால முன்னடவடிக்கைகள் மற்றும் சூழல் முகாமைத்துவம் மீதான ஐந்து மாத பாடநெறியை நடாத்தப்பட்டது.

இதற்கான சான்றிதழ் வழங்குதல் வைபவம் 16 ஜுன் 2018ம் திகதி நடைபெற்றது. இந்தப் பாடநெறியின் 05வது நிகழ்ச்சி 06 ஒக்டோபர் 2018ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

- **விவசாயிகளுக்கான விவசாய இரசாயனப் பொருட்களை பாதுகாப்பாக பயன்படுத்துதல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்**

கல்வியின் ஊடாக விவசாய சமூகத்தை அறிவூட்டுவதன் ஊடாக சுகாதார மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகளைக் குறைக்கும் நோக்கத்தடன் தொடர்ச்சியான 04 நிகழ்ச்சித்திட்டங்கள் பொலொன்னறுவை மாவட்டத்தில் (மதிரிகிரிய, ஹிங்குராக்கொட, பக்கமூன, மன்னம்பிட்டி) நடாத்தப்பட்டது. விவசாயிகளுக்கு 400 தொகுதி பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டன. இதில் பூட்ஸ், கையுறைகள், கண் பாதுகாப்பு கவசம் மற்றும் சுவாச முகமூடி என்பன உள்ளங்கியிருந்தன.

**அட்டவணை 10.1**

- **சர்வதேச நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக பங்குதார நிறுவனங்களின் இயலளவைக் கட்டியெழுப்பல்**

| பாடநெறி | பங்குபற்றுனர்களின் எண்ணிக்கை | நாடு மற்றும் பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| பகுப்பாய்வுத் திறன்கள் | 03 | பின்லாந்து – 01<br>நெதர்லாந்து -01<br>கனடா - 01 |
| உதவி மற்றும் பாதுகாப்பு | 10 | நேபாளம் - 02<br>பங்களதேஷ் - 02<br>போலந்து – 01<br>நெதர்லாந்து – 01<br>துருக்கி – 01<br>செக் குடியரசு – 01<br>சுவிஸ்சர்லாந்து - 01 |
| இரசாயன ஆயுத உடன்படிக்கை அமுல்படுத்தல் பாடநெறிகள் | 01 | நெதர்லாந்து - 01 |
| இரசாயனப் பாதுகாப்பு | 07 | கம்போடியா – 02<br>வியட்நாம் - 02<br>ஜேர்மனி – 01<br>நெதர்லாந்து – 01<br>கட்டார் – 01 |
| மருத்துவப் பாடநெறி | 03 | துருக்கி - 03 |

***மூலம் : தேசிய இரசாயன ஆயுத உடன்டிக்கை அமுல்பூத்தலுக்கான அதிகாரசபை***

# கூட்டுறவு அபிவிருத்திப் பிரிவு

## முகவுரை

கூட்டுறவு அபிவிருத்திப் பிரிவின் பிரதான நோக்கம், கூட்டுறவுத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு அவசியமான வழிகாட்டல்கள், உதவிகள் மற்றும் ஒருங்கிணைப்பை மேற்கொள்ளளுடன், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் உணவுப் பாதுகாப்பு என்பவற்றில் தலையீடு செய்தல் ஆகும்.

## செயற்பாடுகள்

- கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், தேசிய கூட்டுறவு திணைக்கள நிறுவனம், கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு, உணவுத் திணைக்களம், அளவீடுகள் அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் அதிகாரசபை என்பவற்றின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல்.
- கூட்டுறவுத்துறை, நுகர்வோர் பாதுகாப்பு, அளவீடுகள் அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் மற்றும் உணவுத்துறை தொடர்பான கொள்கைத் தீர்மானங்களை எடுப்பதற்கு உதவுதல்.
- கூட்டுறவுச் சங்கங்களைப் பலப்படுத்துதல் மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டங்களை அமுல்படுத்துதல் என்பவற்றுக்கு வருடாந்த பாதீட்டு நிதியை ஒதுக்குதல். கூட்டுறவு கிராமிய வங்கிகளை ஒழுங்குபடுத்தல், சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் கொள்கைகளின் திருத்தங்கள் மற்றும் தயாரித்தல் உள்ளடங்களாக சட்டபூர்வ வகிபாகத்தை பூர்த்திசெய்தல்.
- கூட்டுறவு அமைப்புகளின் அபிவிருத்திக்கான நடைமுறைகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாகவும் மற்றும் அமுல்படுத்தப்படும் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பாகவும் மாகாண கூட்டுறவு அமைச்சர்கள் மற்றும் மாகாண அலுவலர்களுடன் கலந்துரையாடல்களையும் மாநாடுகளையும் நடாத்துதல்
- உள்ளக மாகாண ஒருங்கிணைப்பு
- ஜனாதிபதி காரியாலயம் மற்றும் ஏனைய நபர்களிடமிருந்தும் நிறுவனங்களிடமிருந்தும் வரும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல்.
- அரசியல் பழிவாங்கல்கள் காரணமாக பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்வோருக்கு நிவாரணங்களை வழங்குதல் ( அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களில் உள்ள ஊழியர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற மேன்முறையீடுகள்)
- தேசிய மற்றும் சர்வதேச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் தொழில்நுட்ப உதவிகளையும் பெற்றுக்கொள்ளுதல்.

### 31 டிசம்பர் 2018ம் திகதியில் முன்னேற்றம்.

கீழ்வரும் செயற்பாடுகள் மன்னாரில் உள்ள தாரபுரம் கூட்டுறவு கிராமத்தில் மேற்கொள்ளப்பட்டன.

| இல | கருத்திட்டம் மற்றும் முன்னேற்றம் | செலவு (ரூ.மில்) |
|---|---|---|
| 01 | **கேட்போர் கூடத்தை நிர்மாணித்தல்;** நிர்மாணிப்பு பணிகளின் ஆரம்பமட்ட வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. நிலத்துளைப்பு மற்றும் கொங்கிறீட் தூர்ண் நிர்மாணிப்புகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. | 41.2 |
| 02 | **தாராபுரம் தாங்கி அபிவிருத்திப் பணிகள் ;** நடைபாதைகள், தரைவடிவமைப்பு, இன்டர்லொக் பதித்தல் மற்றும் டெக் கொங்கிறீட் இடுதல் என்பன பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. | 35.65 |
| 03 | இலங்கை அரச பொறியில் கூட்டுத்தாபனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஆலோசனைச் சேவைகளுக்கான கொடுப்புனவுகளை வழங்கல். | 14.9 |
| 04 | **வசதி மத்தியநிலைய நிர்மாணிப்பு:** முன்மொழியப்பட்ட கென்வென்சன் சென்டரை நிர்மாணிப்பதற்கான வடிவமைப்பு மற்றும் நிர்மாணிப்பு அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. | 30.0 |

*மூலம்: கூட்டுறவு அபிவிருத்திப் பிரிவு*

- விசேடமாக கூட்டுறவு நிதியம், கூட்டுறவு கிராமிய வங்கிகளின் ஒழுங்குவிதிகள் தொடர்பாக கலந்துரையாடுதல். கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் ஒருங்கிணைப்புடன் மாகாண கூட்டுறவு ஆணையாளர்களுக்கான மாநாட்டை நடாத்துதல்.

# சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

### முகவுரை

### Small and Micro Industries Leader and சிறிய மற்றும் நுண்நிலைக் கைத்தொழிற்சாலைத் தலைவர் மற்றும் தொழில்முயற்சியாளர் ஊக்குவிப்புக் கருத்திட்டம் 111 – சுழற்சிநிதியம்

நிதி அமைச்சின் ஆலோசனையுடன் கீழ்வரும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கருத்திட்ட முகாமைத்துவ அலகின் ஊடாக 2012 மே 01ம் திகதியில் இருந்து செயற்படுமாறு SMILE III கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

**பிரதான இலக்குகள் / நோக்கங்கள்**

- சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு நிதியில் உதவிகளை வழங்குதல் அல்லது பொருளாதார ரீதியாக அல்லது நிதியியல் ரீதியாக பயனுள்ள கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு உதவுதல்.
- சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு அவர்களின் முகாமைத்துவ, கணக்கியல் மற்றும் தொழில்நுட்ப திறனை அபிவிருத்தி செய்வதற்கு மூலதனத்தை வழங்குதல்.
- இடைநிலை நிதியியல் நிறுவனங்களின் நிறுவன இயலளவை பலப்படுத்தல்.

புதிய தொழில்முயற்களை தொடங்குவதற்கு, அவற்களின் உற்பத்தித்திறனை அல்லது உற்பத்தியினை அதிகரிப்பதற்கு, உற்பத்திப் பொருட்களின் தரத்தினை அதிகரிப்பதற்கு குறைந்த வட்டி வீதத்தில் கடன்களை வழங்குவதற்கு SMILE III சுழற்ச்சி நிதியம், உருவாக்கப்பட்டுள்ளது. அத்தோடு இக்கடன்திட்டம், நிறுவனத்தின் இயலளவினையும், உற்பத்தித்திறக் அபிவிருத்தினையும் சிறிய மற்றம் நுண்பாகத் தொழில்முயற்சியாளர்கள் மேற்கொள்வதற்கும் உதவும்.

இந்தக் கடன்கள் 10 பங்குபற்றும் கடன் நிறுவனங்களின் (இலங்கை வங்கி, மக்கள் வங்கி , பிரதேச அபிவிருத்தி வங்கி, கொமர்சல் வங்கி, ஹட்டன் நஷனல் வங்கி, செலான் வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி, சம்பத் வங்கி மற்றும் DFCC வங்கி, சணச வங்கி) ஊடாக மீளளிப்பு செய்யப்படுவதுடன், இந்த மீளளிப்பு 2013 ஜுலை மாதத்தில் இருந்து வழங்கப்படுகின்றன.

### சுற்றாடல் நட்புடனான தீர்வுகள் நிதியம் II - சுழற்சிநிதியம்

சுற்றாடல் நட்புடனான தீர்வுகள் நிதியம் II சுழற்சி நிதிய கடன் முறைமை குறைந்த ஆகுசெலவுக் கடன்களை தொழில்முயற்சியாளர்களக்கு, அவர்களுடைய தயாரிப்பின் காரணமாக ஏற்படும் சுற்றாடல் பிரச்சினைகள் மற்றும் வலுச்சக்தி நுகர்வு, கழிவு முகாமைத்துவம், வளத்தை மீளப் பெறுதல் மற்றும் சேமிப்பு போன்ற சூழல் பிரச்சனைகளுக்கு தீர்வுகளைக் காணப்பதற்கும், மாசுறுதலைக் கட்டுப்படுத்தவதற்கும் தீர்வினைக் காணப்பதற்காக வழங்குகின்றது.

இந்தக் கருத்திட்டம் உப கடன்களை 11 பங்குபற்றும் கடன் நிறுவனங்களின் (இலங்கை வங்கி, மக்கள் வங்கி , பிரதேச அபிவிருத்தி வங்கி, கொமர்சல் வங்கி, ஹட்டன் நஷனல் வங்கி, செலான் வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி, சம்பத் வங்கி மற்றும் DFCC வங்கி, லங்கா ஒரிக்ஸ் லீசிங் பைனான்சிங், பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பைனாஸ் பிஎல்சி ) ஊடாக மீளளிப்பு செய்யப்படுவதுடன், இந்த மீளளிப்பு 2018 செப்டெம்பர் மாதத்தில் இருந்து வழங்கப்படுகின்றன.

**31 டிசம்பர் 2018ம் திகதியில் முன்னேற்றம்.**

### சிறிய மற்றும் நுண்நிலைக் கைத்தொழிற்சாலைத் தலைவர் மற்றும் தொழில்முயற்சியாளர் ஊக்குவிப்புக் கருத்திட்டம் 111 – சுழற்சிநிதியம்

2013 ஜுலை மாதத்தில் இருந்து 30 செப்டெம்பர் 2018 வரை, 13,671 கடன் விண்ணப்பங்கள் 10 பங்குபற்றும் கடன் நிறுவனங்களின் ஊடாகவும் நேரடியாகவும் கிடைக்கப்பெற்றுள்ளது. இதில் 11,523 உப கருத்திட்டங்கள் கடன் வழங்குவதற்கு உகந்தவையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. கருத்திட்ட முகாமைத்துவ அலகு ரூபா 11.8 பில்லியனை 2,418 உப கருத்திட்டங்களுக்கு ஒதுக்கியுள்ளதுடன், 10 பங்குபற்றம் கடன் நிறுவனங்களின் உப கருத்திட்டங்களுக்கு ரூபா 11.3 பில்லியன் மீளளிப்பு செய்யப்பட்டள்ளது. இந்தக் காலப்பகுதியில் 10 பங்குபற்றும் கடன் நிறுவனங்களின் ஊடாக உப கருத்திட்டங்களுக்கு ரூபா 631 பில்லியனை கருத்திட்ட முகாமைத்துவ அலகு ஒதுக்கியுள்ளது.

### சுற்றாடல் நட்புடனான தீர்வுகள் நிதியம் II - சுழற்சிநிதியம்

2017 டிசம்பர் மாதத்தில் இருந்து 30 செப்டெம்பர் 2018 வரை, 185 கடன் விண்ணப்பங்கள் 11 பங்குபற்றும் கடன் நிறுவனங்களின் ஊடாக கருத்திட்ட முகாமைத்துவ அலகிற்கு கிடைக்கப்பெற்றுள்ளது. இதில் 98 உப கருத்திட்டங்கள் கடன் வழங்குவதற்கு உகந்தவையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதுடன் இக்கருத்திட்டங்களின் பெறுமதி ரூபா 1,385 ஆகும். கருத்திட்ட முகாமைத்துவ அலகு ரூபா 131 மில்லியனை 09 உப கருத்திட்டங்களுக்கு ஒதுக்கியுள்ளது. கருத்திட்ட முகாமைத்தவ அலகு ஆற்றோரங்களிலும் குடாக்களிலும் இருக்கும் தொழில்முயற்சிகளுக்கு பல்வேறுபட்ட நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்தள்ளது.

# திணைக்களங்கள்



# கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்

## முகவுரை

சுதந்திரத்தின் பின்பு இலங்கையின் வியாபார தொகுதி உள்நாட்டு அடையாளத்துடன் செயற்பட்டதோடு அதற்கு வசதியாக 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 1982 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டது. இச்சட்டம் 25 ஆண்டுகள் செயல்வலுவில் இருந்து வந்ததோடு அச்சட்டத்தை மேலும் இலகுவாக்கி இலங்கையின் பொருளாதாரத்தை பரவலாக்குவதை கவனத்தில் கொண்டு பாரிய அளவில் முதலீட்டாளர்களை உள்ளீர்த்து கொள்வதற்கு வசதியளிப்பதற்காக 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் கட்டளைச் சட்டம் 2007 ஆம் ஆண்டு மே மாதம் 03 ஆம் திகதியிலிருந்து செயற்படுத்தப்படுகிறது.

## பிரதான இலக்குகள் / நோக்கங்கள்

திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள பிரதான பொறுப்பு யாதெனில் கீழ் குறிக்கப்பட்டுள்ள சட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்தல், நிருவகித்தல் மற்றும் வலுவூட்டல் என்பனவாகும். அச்சட்டங்கள் பின்வருமாறு,

(அ) 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்
(ஆ) சங்கங்கள் கட்டளைச் சட்டம் அத்தியாயம் 123
(இ) 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டம்

## 31 டிசம்பர் 2018ம் திகதியில் முன்னேற்றம்

### மீள்கட்டமைப்பு (e ROC Project).

| நிகழ்ச்சிமற்றும் செயற்திட்டம் | மதிப்பீடு 2018 (ரூ.மில்லி.) | அடைவுமட்டம் | | விசேடகுறிப்பு |
|---|---|---|---|---|
| | | செலவு 2018 ஆகஸ்ட் 31 வரை (ரூ.மில்லி.) | பௌதிக முன்னேற்றம | |
| **2501 – மீள்கட்டமைப்பு (e ROC Project)** | | | | |
| (1.1) மென்பொருள் அபிவிருத்தி | 57 | 0 | 10% | முதலாம் கட்டம் நிறைவுற்றுள் ளது |
| (1.2) வன்பொருள் மற்றும் இயந்திரங்களை இணைத்தல் | 20 | 12.9 | 50% | இறுதிக்கட்ட பெறுகைக் கட்டத்தில் உள்ளது |
| (1.3) கட்டகலை வடிவமைப்பும் உள்ளக வடிவமைப்பும் | 13 | 0 | 10% | திட்டமிடல் |

*மூலம்: கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்*

| செயற்பாடு | இலக்கு 2018 | அடைவுமட்டம் 2018 ஆகஸ்ட் 31 வரை | பௌதிக முன்னேற்றம் |
|---|---|---|---|
| (1) புதிய கூட்டிணைப்பு | 8,000 | 11,534 | 144 |
| (2) பதிவு செய்யும் கோவைகளின் எண்ணிக்கை | 190,000 | 183,451 | 97 |
| (3) பதிவு செய்யும் சங்கங்களின் எண்ணிக்கை | 75 | 1,086 | 1448 |
| (4) செயலாளர்கள் பதிவு | 650 | 817 | 126 |
| (5) பொது ஒப்பந்தக்காரர்களின் பதிவு | 12,000 | 24,743 | 206 |
| **மொத்த எண்ணிக்கை** | **210,725** | **221,631** | **105** |

## வரவுகள் மற்றும் செலவுகளின் சாராம்சம்

| செயற்பாடு | இலக்கு 2018 (ரூபா) | அடைவுமட்டம் 2018 ஆகஸ்ட் 31 வரை (ரூபா) | பௌதிக முன்னேற்றம் |
|---|---|---|---|
| **நிறுவனங்களிடம் இருந்து பெற்ற வருமானம்** | **360,000,000.00** | **274,084,833.00** | **76** |
| **செலவு** | | | |
| தலைப்பு 297 | 53,900,000 | 37,748,534 | 70 |
| திணைக்கள நிதியம் | 172,046,100 | 49,267,553 | 29 |

*மூலம்: கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்*

# கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்

## முகவுரை

### தொலைநோக்கு

“வலுவான கூட்டுறவுத்துறை”

### செயற்பணி

“கூட்டுறவு துறையை வளப்படுத்துவதனூடாக சமூக மற்றும் பொருளதார அபிவிருத்தியை உறுதிப்படுத்தி கொள்ளுதல்”

### பிரதான இலக்குகள் / நோக்கங்கள்

- கொள்கைவகுப்பு மற்றும் முகாமைத்துவம்.
- கூட்டுறவுச் சங்கங்களை பதிவு செய்தல் மற்றும் கண்காணிப்பு.
- கூட்டுறவுச் சங்கங்களின் கணக்காய்வு மற்றும் பரிசீலணை
- கூட்டுறவுச் சங்கங்களின் பிணக்குகளை தீர்த்தல் மற்றம் நடுத்தீர்ப்பு செயற்பாடுகள்.
- மாகாணசபைகளுடனான தொடர்பாடல்.
- கூட்டுறவுச் சங்கங்களின் வங்கி மற்றும் நிதிப் பிரிவுகளின் மேற்பார்வை அல்லது கண்காணிப்பு.
- கூட்டுறவுத்துறையின் நுகர்ச்சிப்பிரிவை அபிவிருத்தி செய்தல்.
- கூட்டுறவுச் நிதியத்தின் முகாமைத்தவம்.
- கூட்டுறவுத்துறையின் மேம்பாடு மற்றும் அபிவிருத்தி.
- மனிதவள மற்றும் பௌதீக வளங்களை அபிவிருத்தி செய்தல்.

### செயற்பாடுகள்

- கூட்டுறவுத்துறையினை பிரபல்யப்படுத்துதல்.
- கூட்டுறவுச் சங்கம் மற்றும் சம்மேளனங்களை வலுப்படுத்தல்.
- கூட்டுறவுச் சங்கம் மற்றும் சம்மேளனங்களை கூட்டுறவு கொள்கைக்கு அமைய தொழிற்படுவதற்கு உதவுதல்.
- கூட்டுறவு சேவைக்கு தொடர்பான வேறு பிறநபர்கள் மற்றும் நிறுவனங்களுடன் தொடர்பாடல்செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
- காலத்துக்கு காலம் அரசினால் மேற்கொள்ளப்புடுகின்ற அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பை வழங்குதல்.

| கருத்திட்டத்தின் பெயர் | பௌதீக முன்னேற்றம் | |
|---|---|---|
| | உள்ளீடு | விளைவு |
| • வெளியீடுகளும் ஊக்குவிப்பும் | சமூபதீபணி மற்றும் புள்ளிவிபரவில் அறிக்கை வெளியிடுதல் | சிங்கள மற்றும் தமிழ் ஊடகங்களில் மேலதிக பத்திரிகை இணைப்ப 24 மற்றும் 2017 ஆம் ஆண்டு புள்ளிவிபரவியல் அறிக்கை வெளியிடுதல் |
| • “நனசக்தி” பாடசாலை கூட்டுறவுச் சங்க வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் | பாடசாலை மாணவர்களின் கல்வி தலைமைத்தவம் திறன் அபிவிருத்தி செய்தல் மற்றும் கூட்டுறவுதுறை தொடர்பாக பாடசாலை சிறார்களினை அறிவுட்டுதல் | 5ஆம் வகுப்பு புலமைப்பரிசில் காபொ.த (சா.த.) காபொத (உ.த) போன்ற பரீட்சைளுக்கு தொற்றும் மாணவர்களுக்கு கருத்தரங்குகளை நாடளாவிய ரீதியில் நடாத்துதல்<br>பல்கலைகளகத்தின் கல்வி பயிலும் மாணவர்களுக்கான கூட்டுறவு வியாபாரம் தொடர்பான தொழிவுபடுத்த கருத்தரங்குகளை நடாத்துதல் மற்றும் கூட்டுறவு சங்கங்களை உருவாக்குதல் |
| • நிதி சேவை ஒழுங்குபடுத்தல்கள் ) கிராமிய வங்கி கண்காணிப்பு( | தேசிய வங்கி ஒழுங்குபடுத்தல் செயற்குழு கூட்டத்தை நடாத்துதல்<br>வங்கி விதுபியசவுடன் ஒன்றிணைந்து வங்கிஒழுங்குபடுத்தல் தொடர்பான பயிற்சி வேலைத்திட்டங்கள் 02 ஐ நடாத்தப்பட்டது | கூட்டுறவு கிராமிய வங்கி மற்றும் நிதிசேவை கூட்டுறவுச் சங்க ஒழுங்குபடுத்தல்லை வலுப்படுத்தல் |

**31 டிசம்பர் 2018ம் திகதியில் முன்னேற்றம்.**

*மூலம்: கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்*

| கருத்திட்டத்தின் பெயர் | பௌதீக முன்னேற்றம் | |
|---|---|---|
| | உள்ளீடு | விளைவு |
| • கைத்தொழில் மற்றும் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களை அபிவிருத்தி செய்தல் | வ.்.ப இலங்கை கைத்தொழில் கூட்டுறவுச் சம்மேளனத்தின் வருமானத்தை மேம்படுத்தி கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது | புதிய உற்பத்தி கைத்தொழில்களை அரம்பித்தல் ( தும்புக் உற்பத்தி கருத்திட்டத்தை ஆரம்பித்தல்) |
| • முகாமைத்துவ மற்றும் தகவல் தொழில் நுட்ப தொகுதியை நிர்மானித்தல் | - | இத்துறையை புணர் நிர்மானம் செய்தல் மற்றும் ஆதன் தேவைப்பாடுகளை அடையாளம் கானுதல்<br>*யுனுகு ளுஉயநெசஇ ஊடழரன ளநசஎநச ரூ ீலளைஉயட ளநசஎநச .பெற்றுக் கொள்ள விண்ணப்பிக்கப்பட்டுள்ளது*<br>*பெறுகைகள் செயற்பாட்டு நடைமுறைக்குஅமைவாக இது மேற் கொள்ளப்படவுள்ளது*<br>இணையத்தளத்தை இற்றைப்படுத்ததல்<br>ளுடு ஊநுசுவு நிறுவனத்தின் உதவியுடன் இணையத்தளத்தினை கணக்காய்வு செய்தல் |

# அளவீடுகள் அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம்

**முகவுரை**

இந்தத் திணைக்களத்தின் நோக்கங்கள சர்வதேச நியமங்களுடன் இணங்கியவாறு தேசிய அளவீட்டு நியமங்களைத் தயாரித்தல் பேணுதல் மற்றும் பரவச் செய்தல், அளவீடுகளின் அடிப்படையிலான ஒழுங்குபடுத்தல் மற்றும் சேவை நடவடிக்கைகள் ஊடாக வியாபாரிகள், தயாரிப்பாளர்கள் மற்றும் பாவனையாளர்களுக்கான நீதி மற்றும் ஒப்புரவினை உறுதிசெய்தல். (1995ம் ஆண்டு 35ம் இலக்க அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் சட்டம்.)

**31 டிசம்பர் 2018ம் திகதியில் முன்னேற்றம்**

| நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பௌதீக முன்னேற்றம் |
|---|---|
| • வர்த்த தேவைகளுக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களை வைத்திருக்கும் தயாரிப்பாளர்கள். இறக்குமதியாளர்கள், திருத்துபவர்கள் மற்றும் விற்பனையாளர்களைப் பதிவுசெய்தல் | 522 பதிவு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன |
| • தேசிய அளவீடுகள் ஆய்வுகூடத்தினால் வழங்கப்பட்ட அளவுத்திருத்த செயற்பாடுகளில் இருந்தான வருமானம் | 1,243 அலகுகள் அளவுத்திருத்தம் செய்யப்பட்டன |

| நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பௌதீக முன்னேற்றம் |
|---|---|
| • வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் நிறை மற்றும் அளவீட்டு உபகரணங்களுக்கான வடிவமைப்பு அங்கீகாரத்தை வழங்கல் | வழங்கப்பட்ட உருக்களின் எண்ணிக்கை - 80 |
| • வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் நிறை மற்றும் அளவீட்டு உபகரணங்களை உறுதிப்படுத்தல் | உறுதி செய்யப்பட்ட உருக்களின் எண்ணிக்கை - 667,275 |
| • ஆய்வுகூடங்களில் இருக்கும் ஊழியர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல். | வழங்கப்பட்ட பயிற்சிகளின் எண்ணிக்கை – 05<br>இலவச ஆலோசனைகள் 04 அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது. |
| • விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துதல் | 863 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டது |
| • அளவிடுகள், அலகுகள், நியமங்கள் சட்டத்தை மீறுபவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல | மொத்த சோதனைகள் — 15,203 |
| • தேவைக்கு அமைவாக முற்பொதிகளின் பரிசோதனை | 2 தொகுதிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. |
| • ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களை கொள்வனவு செய்தல் | DPC விதப்புரை 21.11.2018 அமைச்சுக்கு அனுப்பப்பட்டது.<br>பெறுகை நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய இயலாமல் போனது<br>(பௌதீக முன்னேற்றம் 82 %) |
| • ஊழியர்களுக்கு பயிற்சி வழங்கல் | உள்ளூர் பயிற்சி - 33 .<br>வெளிநாட்டுப் பயிற்சி – 24 nos. |

*மூலம்:* அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம்

# புடவைக் கைத்தொழில் திணைக்களம்

## முகவுரை

இலங்கை யாப்பின் 13ம் திருத்தச் சட்டமூலத்தின்படி கைத்தறி நெசவுக் கைத்தொழிற்துறை விடயமானது மாகாண சபைக்குரியதாகும். அதன்படி புடவைக் கைத்தொழில் திணைக்களத்திற்குரிய பணியாக அமைவது, இவ்விடயதிற்குரிய கொள்கைத் தீர்மானங்களை எடுப்பதும், மாகாண சபைக்குரிய நெசவுப்பிரிவுடன் இணைந்து கைத்தொழிற்துறையின் அபிவிருத்திக்குரிய சேவைகளை வழங்குதலாகும்.

**31 டிசம்பர் 2018ம் திகதியில் முன்னேற்றம்.**

| கருத்திட்டம் | ஒதுக்கீடு ( ரூ.மில் | செயலாற்றுகை | பௌதீக முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| சீருடைகளுக்கான ஏற்பாடு | 0.500 | 152 மாணவர்களுக்கான சீருடைகளுகள் வழங்கப்பட்டன | 75% |
| தேசிய நெசவு புடவைக் கண்காட்சி | 9.000 | SLECC யில் 3 மற்றும் 4 டிசம்பர்களில் நடைபெற்றது. | 90% |
| மாணவர்களை பயிற்றுவித்தல் | 4.000 | 152 மாணவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது. | 75% |
| மூலப் பொருட்களுக்கான ஏற்பாடுகள் | 2.000 | 03 ஜக்குவாட் இயந்திரங்கள் 0 கணணிமயப்படுத் தப்பட்ட இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டது. | 40% |
| ஆங்கில மொழிப் புலமை | 0.600 | 142 மாணவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது. | 80% |
| சேவைப் பயிற்சிகள் | 5.500 | -630 பேர் பயிற்றப்பட்டனர் 34 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்க ள் நடாத்தப்பட்டது. | 75% |
| ஊக்குவிப்பு நடவடிக்கைகள் | 3.600 | 06,07,08 ஏப்பிரலில் வர்த்த சந்தை BMICHஇல் நடாத்தப்பட்டது. 125 ஊழியர்களுக்கு சீருடை வழங்கப்பட்டது. | 100% |
| ஏனையவை | 1.200 | விடுதிக்கு மெத்தைகள் தலையணைகள் வாங்கப்பட்டது. | 50% |
| பரீட்சைகள் | 0.600 | 2018 ஜனவரி மற்றும் ஜுலையில் பரீட்சைகள் 231 மாணவர்களுக்கு நடாத்தப்பட்டது. | 93% |

*மூலம் : புடவை கைத்தொழில் திணைக்களம்*

# அதிகாரசபைகள் மற்றும் ஆணைக்குழுக்கள்



# தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை

## முகவுரை

விசேடமாக நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை கவனத்தில் கொண்டு, தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை இலங்கையின் தொழில்முயற்சிகளுக்கு ஊக்குவித்தல், உதவுதல், ஊக்கமளித்தல் மற்றும் வசதியளித்தல் என்பவற்றை மேற்கொள்ளுகின்றது. தொழில்முயற்சி அபிவிருத்தி, நிதி உதவியளித்தல், சந்தை வலையமைப்பு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி என்பவற்றுக்கான சேவைகளை வழங்குவதுடன், வியாபார அபிவிருத்தி சேவையினருக்கான சேவைகளையும் வழங்குகின்றது. தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை தொழிலுமுயற்சியாண்மையாளர், சந்தைப்படுத்தல், வியாபாரத் திட்டமிடல், கணக்கீடு, கணக்குப் பதிவு, உற்பத்தித்திறன் மேம்படுத்தல் தொடர்பான இயலளவு அபிவிருத்தி பயிற்சிகளையும் வழங்குகின்றது.

### 31 டிசம்பர் 2018ம் திகதியன்று முன்னேற்றம்

- தொழில்முயற்சிகள் தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ தகவலகளை பெற்றுக்கொள்வதற்கு இலகுவான அணுகலை வழங்கல்.
- வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களை பலப்படுத்துவதுடன், வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களுக்கு அனுமதிப்பத்திர முறைமையை நிறுவுதல்.
- தொழில்முயற்சியாளர்களை அடையாளம் காணும் நிகழ்ச்சித்திட்டங்களை ஊக்குவித்தல்.
- நுண், சிறிய, மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறையின் அபிவிருத்தி மற்றும் தீர்வுகளுக்கு அவர்களின் பிரச்சனைகளை பிரதேச, மாவட்ட மற்றும் தேசிய மட்டத்தில் நோக்குதல்.
- அடையாளம் காணப்பட்ட வியாபார கொத்தணிகளில் தற்போதுள்ள தொழில்முயற்சிகளின் தற்போதைய இயலளவை மேம்படுத்தல்.
- அவர்களுக்கு புதிய தொழில்நுட்பத்திற்கு மாறுவதற்கு உதவதன் ஊடாக புத்தாக்க தொழில்முயற்சிகளை ஊக்குவித்தல்.
- பிராந்தியங்களில் போட்டித்தன்மையுள்ள மற்றும் நிலைத்திருக்கக்கூடிய தொழில்முயற்சிகளை நிறுவுதல்.
- தேசிய தொழில்முயற்சி அதிகாரசபையின் மனித மூலதனத்தை, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் அபிவிருத்தி (தொழில்நுட்ப) மற்றும் முகாமைத்துவ திறன்கள் என்பற்றில் மேம்பாட்டினை உருவாக்குவதன் ஊடாக தொழில்திறன், நிபுணத்துவம் என்பவற்றை அபிவிருத்தி செய்தல்.
- உள்ளக செயற்பாடுகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் நியம படிமுறை என்பவற்றை அபிவிருத்தி செய்வதன் ஊடாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு வழங்கும் சேவையின் தரத்தினை மேம்படுத்தல்.
- நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி கொள்கைகளை உருவாக்குவதற்கு MOF & MIC யின் Doing Business Forum த்திற்கு சாத்தியமான விதப்புரைகளை வழங்குதல்.

- **நிகழ்ச்சித்திட்டம் 01: BDS விபரக்கொத்தை தயாரித்தல்**

சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கும் வியாபார அபிவிருத்தி சேவையாளர்களுக்கும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர் வழிகாட்டல் கையேட்டை வெளியிடுவதற்கு தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை திட்டமிட்டுள்ளது. இது தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்த வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களின் தகவல்களை உள்ளடக்கி இருப்பதுடன், இது அவர்கள் வெற்றிகரமான தொழில்முயற்சியாளராவதற்கு வழிகாட்டும் (ஏறத்தாள 200 பக்கங்கள்). தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை அபிவிருத்தி அலுவலர்களிடமிருந்தும் விளம்பரங்களில் இருந்தும் தகவல்களை பெற்றுக்கொண்டுள்ளது. இது 2019இல் வெளியிடுவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டள்ளது.

**நிகழ்ச்சித்திட்டம் 02: வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களுக்கான இயலுமை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்.**

தொழில்வாய்ப்பற்றவர்கள் மட்டுமல்லாது நுண், சிறிய மற்றும் நடுத்தர சமூகம் உள்ளடங்கலாக தொழில்முயற்சியாளர்களுக்கும் உயர் தர வாடிக்கையாளர் நோக்கிய ஆலோசனை, வழிகாட்டல், உதவி மற்றும் பயிற்சி என்பவற்றை உள்நாட்டு சமூகத்திற்கு வழங்குவதற்கு வியாபார அபிவிருத்தி சேவைகள் பணியாற்ற வேண்டும். இந்த சேவைகள் தனிப்பட்ட ஆலோசனையாளர்களினாலும் வியாபார அபிவிருத்தி சேவைகளை வழங்கும் நிறுவனங்களினாலும் வழங்கப்படும். தொழில்முயற்சியாளர்களினால் வியாபார ஆரம்பம், விரிவுபடுத்தல், ஏற்றுமதி, நிதியிடல், கல்வி அல்லது பயிற்சி மற்றும் ஏனைய வியாபார உதவிச் சேவைகள் உதவிச் சேவைகளிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் தொழில்முயற்சியாளர்களுக்கு இவ்வாறான உதவிச் சேவைகளை வழங்குவதற்கு சரியான முறையிலான பொறிமுறையொன்றில்லை. அதனால் தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களின் இயலளவைப் பலப்படுத்தவதற்கு திட்டமிட்டுள்ளது. இந்தக் கருத்திட்டத்தின் நோக்கம் வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களின் இயலளவை கட்டியெழுப்பல் மற்றும் சரியான முறையிலான வியாபார உதவி சேவை வலையமைப்பைக் கட்டியெழுப்பல் ஆகும். தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களின் தேவை மதிப்பீட்டை நடாத்தியுள்ளதுடன் 25 நபர்களை வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களாக பயிற்றுவித்துள்ளது.

- **நிகழ்ச்சித்திட்டம் 03: பிராந்திய தொழில்முயற்சியாளர் விருது வழங்கல் வைபவங்கள்**

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு செயலாற்றிய இந்த தொழில்முயற்சிகளை அடையாளம் காணுதல், விருதுவழங்கல் மற்றும் ஊக்கவித்தல் நோக்கத்துடன் தொழில்முயற்சியாளர் விருது வழங்கும் வைபவத்தை நடாத்துகின்றது. தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை மாவட்ட சம்மேளனங்கள் /அரசாங்க நிறுவனங்கள் என்பவற்றின் ஆதரவுடன் அனைத்து மாகாணங்களிலும் 09 விருது வழங்கல் வைபவங்களை நடாத்தவதற்கு திட்டமிட்டள்ளது. தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை உதவி நிறுவனங்கள் மற்றும் ஊக்குவிப்பு செயற்பாடுகளுடன் சேவை ஒப்பந்தத்தை

கைச்சாத்திட்டுள்ளதுடன் ஊக்குவிப்பு நடவடிக்கைகளை தொடங்கியுள்ளது. தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை 2018ம் ஆண்டு எட்டு விருது வழங்கும் விழாக்களை நடத்தியுள்ளது.

- **நிகழ்ச்சித்திட்டம் 04: மாவட்ட மற்றும் பிராந்திய தொழில்முயற்சி பேரவைகள்**

மாவட்ட மற்றும் பிரதேச செயலக மட்டத்தில் தொழில்முயற்சியாளர்களுக்கு வியாபார அபிவிருத்தி சேவைகளை வழங்குவதற்கு உரிய பொறிமுறையை அபிவிருத்தி செய்வதற்கு மாவட்ட மற்றும் பிராந்திய தொழில்முயற்சிகள் பேரவைகள் நிறுவப்பட்டுள்ளது. இது அம்மாவட்டத்தின் அரசாங்க மற்றும் அரச சார்பற்ற வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்கள், சம்மேளனங்கள் மற்றும் வர்த்தக அல்லது வியாபார சங்கங்கள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. தேசிய தொழில்முயற்சி அதிகாரசபை மாவட்ட தொழில்முயற்சி மன்றங்களையும் பிரதேச செயலக மட்டத்தில் பிராந்திய தொழில்முயற்சி மன்னறங்களையும் நிறுவுதற்கு திட்டமிட்டுள்ளது. தேசிய தொழில்முயற்சி அதிகாரசபை 2018 வரை 14 மாவட்ட தொழில்முயற்சி மன்றங்களையும் 232 பிராந்திய தொழில்முயற்சி மன்னறங்களையும் நிறுவியுள்ளதுடன் பிராந்திய மட்டத்தில் உள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்கு உரிய முறையொன்றை நிறுவியுள்ளது..

- **நிகழ்ச்சித்திட்டம் 05: கொத்தணி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை வியாபார கொத்தணி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை மேற்கொள்வதில் ஈடுபட்டள்ளது. தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை சந்தை அபிவிருத்தி, தொழில்முயற்சியாளர் அபிவிருத்தி, தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் நிதி உதவி போன்ற துறைகளில் அவர்களின் இயலுமையை அதிகரிப்பதற்கு தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை ஆர்வமாகவுள்ளது. தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை ஒவ்வொரு மாகாணத்திலும் துறைசார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்தியது (பயன்பெறுநர்களின் எண்ணிக்கை 315).

- **நிகழ்ச்சித்திட்டம் 06: வியாபார வர்த்தக சந்தைகள்**

பிராந்திய மட்டத்தில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி துறை அபிவிருத்திக்கு வியாபார வர்த்தக சந்தைகள் முன்மொழியப்பட்டுள்ளது. தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை சிறிய, நடுத்தர மற்றும் நுண் மட்ட தொழில்முயற்சியாளர்கள் நாட்டிலும் பிரதேச மட்டத்திலும் வியாபார அபிவிருத்தி சேவைகள் கிடைக்கப்பெறுவதை அறியாதுள்ளனர். அதனால் அவர்கள் வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களிடமிருந்து உச்சளவு சேவையைப் பெற்றுக்கொள்வதில்லை. அவர்களுக்கிடையில் காணப்படும் இந்த இடைவெளியை நிரப்புவதற்கு பலமான இணைப்பொன்று கட்டியெழுப்பப்படுதல் வேண்டும். வியாபா சேவை வர்த்தக சந்தைகள் இத்தகைய பாலத்தை சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்கள் மற்றும் வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களுக்கிடையில் உருவாக்கும். அதன் மூலம் உத்தேச தொழில்முயற்சியாளர்களின் தொழில்முயற்சிகளை மேம்படுத்த முடியும். அத்துடன் இரு தங்களுடைய பண்டங்களை அறிமுகப்படுத்தவதற்கான சந்தர்ப்பத்தையும் சந்தை தொடர்பாடலையும் பெற்றுக்கொள்ள வழிவகுக்கும். 2018ம் ஆண்டு தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை ஒவ்வொரு மாகாணங்களிலும் சந்தைகளை நடாத்தியது.

**நிகழ்ச்சித்திட்டம் 07: பொதியிடல் உதவியை வேண்டிநிற்கும் பிராந்திய தொழில்முயற்சியாளர்களுக்கு வசதியளித்தல்**

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை MSMEஐ சுப்பர் மார்க்கட்டகளுக்கு விநியோகத்தர்களாக அறிமுகப்படுத்தியுள்ளது. அத்துடன், அபிவிருத்தி அலுவலர்களின் ஊடாக தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை உத்தேச விநியோகத்தர்களை அடையாளம் கண்டுள்ளதுடன் அவர்களினால் விநியோகக்கூடிய இயலளவு மற்றும் பண்டத்தின் தரத்தினை மதிப்பிடுதல். தொழில்நுட்ப பயிற்சியினை வழங்குவதன் ஊடாக அவர்கள் தரமான பொருட்களை தயாரிப்பதற்கு தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை உதவுகின்றது. 2018ம் ஆண்டு, தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை மாத்தறை மற்றும் கேகாலை மாவட்டங்களை சேர்ந்த 90 தொழில்முயற்சியாளர்களுக்கு உதவிகளை வழங்கியது

- **நிகழ்ச்சித்திட்டம் 08: சர்வதேச வியாபார சந்திப்புகள**

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் 2018ம் ஆண்டு செயற்பாட்டுத் திட்டத்திற்கு அமைவாக, இந்த நிகழ்ச்சித்திட்டம் வெளிநாட்டு வியாபார சந்தைகளுக்கு வியாபார சந்திப்புகளை ஒழுங்குசெய்தல் மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கு அவர்களின் வியாபாரத்தை சர்வதேசத்திற்கு விஸ்தரித்தல் என்பவற்றை நோக்காக் கொண்டுள்ளது. தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை தாய்லாந்து நாட்டில் நடைபெற்ற எக்ஸ்போ கணடகாட்சியில் 15 பங்குபற்றுனர்களுடன் மூலம் வியாபார சந்திப்புகளை பூர்த்தி செய்துள்ளது.

- **நிகழ்ச்சித்திட்டம் 09: கொள்வனவாளர் – விற்பனையாளர் சந்திப்புகள்**

நிலையான மற்றும் நியாயமான பொருளாதார வளர்ச்சியை உருவாக்கும் தொழில்முயற்சியாளர்களின் இயலுமையை வரையறுப்பதற்கு பல்வேறு காரணிகள் தொடர்ந்தும் பங்களிப்பு செய்கின்றன. தொழில்முயற்சியாளர்களின் போதிய திறன் மற்றும் அறிவின்மை, மூலதன சொத்துக்கள் மற்றும் உட்கட்டமைப்புகளின் பற்றாக்குறை, சந்தையை அணுகுவதற்கான வரையறைகள் மற்றும் போதிய தொழில்நுட்பமின்மை போன்ற பல்வேறு காரணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்த வசதிகளை வழங்குவது தொடர்பாக தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை தன் கவனத்தைச் செலுத்துகின்றது

- **நிகழ்ச்சித்திட்டம் 10: பிராந்திய தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

பிராந்திய மட்டத்தில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கு தொழில்முயற்சி, சந்தை, தொழில்நுட்பம் மற்றும் நிதி முகாமைத்தவம் தொடர்பாக போதிய அறிவின்மை காணப்படுகின்றது. அத்துடன் அவர்களின் தொழில்முயற்சியை ஆரம்பிப்பதற்கு அல்லது விரிவுபடுத்தவதற்கு நிதித்தடைகள் காணப்படுகின்றது. அபிவிருத்தி அலுவலர்கள் பிராந்திய மட்டத்தில் இந்த அறிவு

மற்றும் திறன் அவசியமான தொழில்முயற்சியாளர்களை அடையாளம் காண்பதற்கான பணிகளை மேற்கொள்ளுகின்றனர்.

அதனால், தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அபிவிருத்தி அலுவலர்களின் உதவியுடன் பிராந்தியத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களில் உள்ள இந்த தொழில்மயற்சிளார்களுக்கு குறுகிய கால பயிற்சியையும் பின்னுாட்டல் சேவையையும் வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளது.

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை 12,100 புதிய மற்றும் தற்போதுள்ள தொழில்முயற்சியாளர்களுக்கு நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்தியுள்ளது.

- **நிகழ்ச்சித்திட்டம் 11: மாகந்துர பேணிக்காத்தல் மற்றும் தொழில்நுட்ப பரிமாற்ற மத்தியநிலையத்தை நிறுவுதல்**

புதிய பண்டத்தை அல்லது சேவையை அறிமுயப்படுத்தும் பொழுது ஏற்படும் இடரினைக் குறைப்பதற்காக பேணிக்காத்தல் மற்றும் தொழில்நுட்ப நிலையம் அமைக்கப்பட்டள்ளது.

இந்தக் கருத்திட்டத்தின் நோக்கம் பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேறிய பட்டதாரிகள் அவர்கள் தங்களை சுயமாக நிறுவிக்கொள்வதற்கு வளர்வதற்கு நுண் மற்றும் சிறிய கைத்தொழிற்சாலைகளுக்கு வசதியளித்தல்.

பேணிக்காத்தல் மற்றும் தொழில்நுட்ப நிலையம் இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் மற்றும் சுற்றியுள்ள ஆராய்ச்சி நிறுவனங்களின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளில் இருந்து பெற்றுக்கொண்ட வியாபாரக் கருத்துக்களுடன் அவசியமான உபகரணங்கள் மற்றும் பொறிகளுடன் ஆரம்பிக்கப்படுகின்றது.

National Enterprise Development Authority and Wayamba தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையும் இலங்கை வயம்ப பல்கலைக்கழகமும் பேணிக்காத்தல் மற்றும் தொழில்நுட்ப நிலையத்தின் நிறுவல், முகாமைத்துவம் மற்றும்செ தொழிற்பாடுகள் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திட்டுள்ளன. பேணிக்காத்தல் மற்றும் தொழில்நுட்ப நிலையம் கம்பனி பதிவாளர் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன், முகாமைத்தவ சபையினால் நிர்வகிக்கப்படுகின்றது.

இன்று வரை, தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை கட்டட செயற்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ளதுடன், பொறிகள் நிறுவியுள்ளது. இது 2017 செப்டெம்பர் மாதத்தில் திறக்கப்பட்டது. தற்போது, தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை தொழில்முயற்சியாளர்களுக்கும் பல்கலைக்கழக பட்டதாரிகளுக்கும் சேவைகளை வழங்குகின்றது.

- **நிகழ்ச்சித்திட்டம் 12: பல்கலைக்கழக தொழில்முயற்சியாளர்கள் (“Upadhidari Vyavasayake Udanaya”)**

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை பல்கலைக்கழகப் பட்டதாரிகளை வியாபாரத்துறையில் ஊக்குவிப்பதற்கும் வெற்றிகரமான தொழில்முயற்சியாளர்களாக மாற்றுவதற்கும் “Upadhidari Vyavasayake Udanaya” எனும் நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துகின்றது.

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை சப்ரகமுக, ரஜரட்ட, ஊவா வெல்லச, களனி, ஜயவர்த்தனபுர மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழகங்களில் உள்ள 205 பட்டதாரிகளுக்கு பயிற்சியை பயிற்சியை வழங்கியதுடன், 13 பட்டதாரிகளுக்கு நன்கொடைகளை வழங்கியது

- **நிகழ்ச்சித்திட்டம் 13: சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களின் அறியமையை நீக்குதல் (மனிதவளம், தகவல் தொழில்நுட்பம், வர்த்தக நாமம், வரி நடைமுறை மற்றும் நிதி)**

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை உரிய நிறுவனங்களுடன் இணைந்து விழிப்புணர் நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துகின்றது. தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை குருநாகல், புத்தளம் மற்றும் அனுராதபுர மாவட்டங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தை ஒழுங்குசெய்தது.

- **நிகழ்ச்சித்திட்டம் 14: தொழில்முயற்சி அபிவிருத்தியின் ஊடாக இலங்கை இளைஞர்களை மேம்படுத்தல்.**

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை தொழில்பயிற்சி பயிலுனர்களுக்கு வழங்கின்றது. 2018ம் ஆண்டு, இந் நிகழ்ச்சித்திட்டம் தொழில்நுட்ப கல்வி திணைக்களத்தின் ஆதரவுடன் அமுல்படுத்தப்பட்டது.

- தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை 100 இளைஞர்களை தேர்ந்தெர்த்து அவர்களுக்கு தொழில்முயற்சி அபிவிருத்தி பயிற்சியை வழங்கியது. இந்நிகழ்ச்சித்திட்டம் மேல்மாகணத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அவர்களுக்கு 2019ம் ஆண்டு இயந்திரங்களும் உபகரணங்களும் வழங்கப்படும்..

# நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை

## முகவுரை

நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையானது, 1979 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் நியாய வியாபார ஆணைக்குழுச் சட்டம் மற்றும் 1950 ஆண்டின் விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம் என்பனவற்றினை இரத்துச் செய்து அவற்றிற்குப் பதிலாக ஆக்கப்பட்ட 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டதாகும்.இச்சட்டத்தின் முகவுரையின்படி, நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையின் ஒட்டு மொத்த நோக்கமானது, வர்த்தக ஒழுங்குவிதி, பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளினைச் சீராகப் பேணுதல், நியாயமற்ற வர்த்தக செயற்பாடுகளுக்கெதிராக வர்த்தகர்கள் மற்றும் தயாரிப்பாளர்களைப் பாதுகாத்தல், மற்றும் வர்த்தக செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளினூடாக நுகர்வோர்களுக்கு மிகச் சிறந்த பாதுகாப்பினை வழங்குவதேயாகும்மேலும், பொருட்கள் மற்றும் சேவைகளின் வியாபாரிகள் மற்றும் தயாரிப்பாளர்களுக்கிடையே சாத்தியமானதும் ஆரோக்கியமானதுமான போட்டியினைப் பேணும் அதேவேளையில் போட்டி விலையிடலினை ஊக்குவிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

### 31 டிசம்பர் 2018ம் திகதியன்று முன்னேற்றம் பொது மக்களின் முறைப்பாடு தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

| | |
|---|---|
| **பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த முறைப்பாடுகள்** | **2,092** |
| *(அ) தபால் மூலம்* | *1,714* |
| *(ஆ) தொலைபேசி மூலம்* | *378* |
| ஏனைய நிறுவனங்களுக்கு குறிப்பீடு செய்யப்பட்டவை | 323 |
| சந்தைச் சோதனைக்கு குறிப்பீடு செய்யப்பட்டவை | 67 |
| பூர்த்தி செய்யப்பட்ட முறைப்பாடுகள | 482 |
| நடாத்தப்பட்ட கலந்துரையாடல்கள | 1,460 |

*மூலம்: நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை*

அட்டவணை: 19.3

### நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபைக்கு எதிரான வழக்குகள்

| | |
|---|---|
| உச்ச நீதிமன்றம் | 12 |
| மேன்முறையீட்டு நீதிமன்றம் | 48 |
| உயர்நீதிமன்றம் – மீளாய்வு விண்ணப்பம் | 07 |
| மாவட்ட நீதிமன்றம் | 11 |
| தொழில் நியாயசபைகள் | 03 |
| நீதவான் நீதிமன்றங்கள் | 02 |

*மூலம்: நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை*

வரைபு: 19.1

- **சந்தைச் சோதனைகளும் தண்டப்படணம் அறவீடு செய்தலும்**




*மூலம்: நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை*

### தனிப்பட்ட நிவாரணங்கள் தொடர்பான முறைப்பாடுகளுக்காக நடாத்தப்பட்ட விசாரணைகள்

| | |
|---|---|
| நடாத்தப்பட்ட விசாரணைகள் | 492 |
| தீர்வு காணப்பட்ட விசாரணைகள் | 80 |
| வழங்கப்பட்ட கட்டளைகள் | 127 |
| அமுல்படுத்தப்பட்ட கட்டளைகள் | 61 |

*மூலம்: நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை*

வரைபு: 19.2

- **தண்டப் பணங்களினூடாக அரசாங்கத்திற்குக் கிடைக்கப் பெற்ற வருமானம்**




*மூலம்: நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை*

**விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களின் விபரங்கள்**

| விபரங்கள் | இலக்கு (காலாண்டிற்கு இரண்டு) | அடையப் பெற்றது. |
|---|---|---|
| வியாபாரிகள் விழிப்புணர்வு | - | 464 |
| பொது மக்கள் | 6 | 274 |
| பாடசாலை விழிப்புணர்வு | 7 | 209 |

- *மூலம்: நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை*

- **நியாயமற்ற வர்த்தக செயற்பாடுகளிலிருந்து நுகர்வோர்களைப் பாதுகாத்தல்**

05 இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் ஆகக்கூடிய சில்லறை விலைகள் மீதான ஒழுங்குவிதிகள், தமது பதவினைப் பூர்த்தி செய்துள்ள உரிய இறக்குமதியாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள ஆகக்கூடிய சில்லறை விலைகள் மீதான 176 விண்ணப்பங்களின் கீழ் உள்நாட்டு தொழில்முயற்சியாளர்களினைப் பாதுகாக்கும் பொருட்டு அமுலாக்கப்பட்டுள்ளன.

- **தற்போதுள்ள சந்தை விலைகள் தொடர்பான ஆய்வு**

நடாத்தப்பட்ட விலை ஆய்வுகளின் அடிப்படையில், பின்வரும் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

| விபரங்கள் | அறிக்கைகளின் எண்ணிக்கை |
|---|---|
| கொழும்பு மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளின் அடிப்படையிலான பிரிவு 18/20 அறிக்கை | 11 |
| மாவட்ட ரீதியான தரவுகளின் அடிப்படையில் அத்தியாவசிய பொருட்களின் சில்லறை விலைகள் | 12 |
| மரக்கறிகளின் நாளாந்த சில்லறை விலைகள் தொடர்பான அறிக்கை | 160 |
| விசேட விலை தொடர்பான அறிக்கை | 200 |
| அத்தியாவசியப்பொருட்களின் சில்றை விலைதொடர்பான அறிக்கை | 160 |

*மூலம்: நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை*

- **போட்டி எதிர் மற்றும் நியாயமற்ற வர்த்தகச் செயற்பாடுகள் தொடர்பில் நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபைக்கு மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் வர்த்தக தலையீடு தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்தல்**

| செயற்பாடு | மொத்தம் |
|---|---|
| வியாபாரிகள் விழிப்புணர்வு | 10 |
| முன்னைய காலப்பகுதியிலிருந்து பெறப்பட்ட முறைப்பாடுகள் | 40 |
| குறித்த காலப்பகுதியில் பெற்றுக் கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் | 25 |
| நுகர்வோர் அலுவல்கள் பேரவைக்கு மாற்றப்பட்ட முறைப்பாடுகள் | 03 |
| குறிப்பிட்ட காலப்பகுதியில் தீர்வு காணப்பட்ட முறைப்பாடுகள் | 21 |
| செயன்முறையிள்ளுள்ள முறைப்பாடுகள் | 45 |

*மூலம்: நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை*

அட்டவணை: 19.7

- **11/07/2007 ஆம் திகதிய 1505/15 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் கீழ் தற்போது அடையாளங் காணப்பட்டுள்ள ஐந்து உற்பத்திப் பொருட்கள் தொடர்பில் அரசாங்க கொள்கையினை அமுலாக்குதல்**

| செயற்பாடு | மொத்தம் |
|---|---|
| பெற்ற முறைப்பாடுகள் | 273 |
| செயன்முறைக்குட்படுத்தப்பட்ட முறைப்பாடுகள் | 273 |

*மூலம்: நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை*

- **விலை மீளாய்வு விண்ணப்பங்களினை மதிப்பாய்வு செய்தலும் பரிந்துரை செய்தலும்**

மீளாய்வு காலப்பகுதியில் வழங்கப்பட்ட மதிப்பாய்வுகள் மற்றும் பரிந்துரைகள் பின்வருமாறு

| விடயம் | எண்ணிக்கை |
|---|---|
| வழங்கப்பட்ட விலை தொடர்பான தீர்மானங்களின் எண்ணிக்கை | 100 |
| பெற்றுக் கொள்ளப்பட்ட விலை தீர்மானம் தொடர்பான விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 162 |
| வழங்கப்பட்ட இடைக்கால கட்டளைகள் | 62 |

*மூலம்: நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை*

- **நீதிமன்ற வழக்குகள்**

| வகையீடு | 2018 ஆகஸ்ட் 31 வரையில் |
|---|---|
| தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் | 79 |
| நீதிமன்றத்தில் தோற்றியவை | 438 |

- *மூலம்: நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை*

- **கட்டுரைகள் மற்றும் பணிப்புரைகளினை வழங்குதலும் இரத்துச் செய்தலும்**

  - **பணிப்புரை இல. 50** – கட்டளை இலக்கம் 39 இலிருந்து முழு ஆடைப் பால் மாவினை (உள்நாடு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட) நீக்குதல்.
  - **கட்டளை இல. 51** – ஆகக்கூடிய சில்லறை விலைக்கு மேல் உள்நாட்டில் பொதியிடப்பட்ட/ போத்தலில் அடைக்கப்பட்ட குடி நீரினை உற்பத்தியாளர், வியாபாரி அல்லது விநியோகஸ்தர் எவரேனும் விற்பனை செய்யவோ, விற்பனைக்காக வெளிப்படுத்தவோ அல்லது கோரவோ அல்லது காட்சிப்படுத்தவோ கூடாது.
  - **பணிப்புரை இல. 52** – ஆகக்கூடிய சில்லறை விலைக்கு மேல் வெள்ளைச் சீனியினை (பொதி செய்யப்பட்ட மற்றும் பொதி செய்யப்படாத) வியாபாரி அல்லது விநியோகஸ்தர் உள்ளடங்கலான வழங்குனர் எவரேனும் விற்பனை செய்யவோ, விற்பனைக்காக கோரவோ அல்லது வழங்கவோ அல்லது காட்சிப்படுத்தவோ கூடாது.
  - **பணிப்புரை இல. 53** – இறக்குமதியாளரின் ஆகக்கூடிய சில்லறை விலைக்கு மேல் மொத்த விற்பனை நோக்கில் வெள்ளைச் சீனியினை விற்பனை செய்யவோ, விற்பனைக்காக கோரவோ அல்லது காட்சிப்படுத்தவோ கூடாது.
  - **பணிப்புரை இல. 65** – சருமத்திற்கான கிறீம்கள் மற்றும் சருமப் பூச்சுக்கள் என்பன, SLS743 இல் விதித்துரைக்கப்பட்டவாறு ISO/TR 17276 இற்கமைவாக பரிசோதிக்கப்படும் போது உலோகங்களுக்கான அனுமதிக்கத்தக்க ஆகக்கூடிய எல்லையினைக் கொண்டிருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.
  - **பணிப்புரை இல. 66** – சருமத்திற்கான கிறீம்கள் மற்றும் சருமப் பூச்சுக்களினைக் கொண்டுள்ள ஒவ்வொரு போத்தல், பொதி அல்லது கொள்கலனின் மீதும் தேவையான தகவல்களினை தெளிவாகவும் அழியாத வகையிலும் குறிப்பிடுதல் கட்டாயமானதாகும்.
  - **பணிப்புரை இல. 67** – உணவு வழங்கல் தொழிலில் அல்லது அதனையொத்த அல்லது அதனுடன் தொடர்புடைய செயற்பாடு / செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற பதப்படுத்திய உணவுகளின் வியாபாரி / அல்லது வேறு எவரேனும் ஆட்கள் GMP சான்றுப்படுத்தலினைப் (எஸ்எல்எஸ். 956) பெற்றுக் கொண்டாலன்றி அத்தொழிலில் ஈடுபட முடியாது.

- **நுகர்வோர் அலுவல்கள் பேரவையின் தொழிற்பாடுகளின் முன்னேற்றம்**

| செயற்பாடு | முறைப்பாடுகளின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | பெறப்பட்டவை | தீர்மானமானவை /தீர்வு காணப்பட்டவை அல்லது பேரவையினால் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டவை (முன்னைய ஆண்டு உள்ளடங்கலாக) |
| பொதுமக்களின் நலன்களுக்கெதிராக தொழிற்படுகின்ற போட்டி எதிர் நடவடிக்கைகளுக்கெதிராக நிவாரணம் வழங்கப்படுவதனை உறுதி செய்தல் | 04 | - |
| பொருட்கள் மற்றும் சேவைகளின் ஆகக்கூடிய விலையினை பரிந்துரை செய்தல் | 08 | பரிந்துரை - 04 |
| மிகையான விலைகளின் கீழான விசாரணைகள் | 03 | பரிந்துரை - 01 |

*மூலம்: நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை*

# இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை

## முகவுரை

1969 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் தற்போது கைத்தொழில் அபிவிருத்திச் சபை (IDB) இணைக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்படி நாட்டிலுள்ள தொழில்துறைத் துறையின் அபிவிருத்தி பொறுப்புடன் IDB ஒப்படைக்கப்பட்டுள்ளது.

### 31 டிசம்பர் 2018ம் திகதியன்று முன்னேற்றம்

2018 ஆம் ஆண்டில கைத்தொழில் அபிவிருத்திச் சபை (IDB) நாட்டில் வியாபார சமூகத்தை மேம்படுத்துவதற்காக பல்வேறு உதவிகளையும் வழங்கியுள்ளது. மேலும் மைக்ரோ, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்கள் (MSMEs) ஊக்குவிக்க தொழில் நுட்ப வளர்ச்சி தொடர்பாக உத்திகளை வடிவமைத்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நோக்கங்களை அடைய உள்ளூர் மற்றும் சர்வதேச அளவில் சந்தையில் வியாபாரத்தை விரிவுபடுத்த ஐடிபி பல்வேறு திட்டங்களை ஆரம்பித்து நிறைவேற்றுவதில் அமைச்சின் ஆலோசனையுடன் ஈடுபட்டுள்ளது.

- **சர்வதேச காலணி மற்றும் லெதர் /பேர் 2018**

இலங்கை காலணி மற்றும் லெதர் உற்பத்தியாளர்கள் சங்கம் (ஸ்ரீ.ல.சு.எல்.பீ.எம்.எம்.ஏ) சிரிமாவோ பண்டாரநாயக்க நினைவு கண்காட்சி மையத்தில் 10 வது சர்வதேச காலணி மற்றும் தோல் சந்தைப்படுத்தல் வைபவம் பிப்ரவரி 2 ஆம் திகதி தொடங்கி வைக்கப்பட்டது. இது ளுஆநு களுக்கான ஒரு வெளிப்பாடு மற்றும் அறிவை வழங்குவதில் முக்கியமாக கவனம் செலுத்தியது. இது அவர்களின் தயாரிப்புகளை மேம்படுத்தவும் சர்வதேச சந்தையை அடைய ஊக்குவிக்கவும் உதவியது.

- **கைத்தொழில் அபிவிருத்திச் சபை (IDB) இலங்கையின் பிளாஸ்டிக் மற்றும் ரப்பர் நிறுவனம் (PRISL) உடன் ஒப்பந்தம் கையெழுத்தானது.**

IDB மற்றும் இலங்கையின் பிளாஸ்டிக் மற்றும் ரப்பர் நிறுவனம்(PRISL) ஆகியவற்றிற்கிடையே புரிந்துணர்வு உடன்படிக்கை (MOU) 2018 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 21 ஆம் திகதி கையெழுத்திடப்பட்டுள்ளது. இலங்கையின் பிளாஸ்டிக் மற்றும் ரப்பர் நிறுவனம்(PRISL) என்பது பிளாஸ்டிக் தொழில் துறையில் ஈடுபட்டுள்ள உறுப்பினர்களுக்கு உதவுவதற்காக உருவாக்கப்பட்ட தேசிய தொழில் நிறுவனமாகும். இலங்கையில் சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கு(SME) அடையாளம் காட்டப்பட்ட இடைவெளிகளை நிறைவேற்ற தொழில்நுட்ப தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்கும் விரிவான மதிப்பீட்டை இது வழங்குகிறது.

*மூலம்: கைத்தொழில் அபிவிருத்தி வாரியம் செய்திமடல் (ஜனவரி-மார்ச் 2018)*

- **கைத்தொழில் அபிவிருத்திச் சபை (IDB) லக்ஷலவுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை (MOU) கையெழுத்திட்டுள்ளது.**

2018 மார்ச் 23 ஆம் திகதி கைத்தொழில் அபிவிருத்தி சபை மற்றும் ஸ்ரீலங்கா கைத்தொழில்கள் சபை (லக்சல) ஆகியவற்றிற்கு இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இலங்கையில் இளைஞர் மற்றும் நடுத்தர கைத்தொழில் மற்றும் இளைஞர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக மரத் தொழில்நுட்பத்தில் திறமை அபிவிருத்தி பயிற்சியை வழங்குவதன் நோக்கமாக இது அமைந்துள்ளது. ஐனுடீ மற்றும் டுயமளயடய இற்கும் இடையிலான ஒத்துழைப்பு மூலம் மரத் துறையின் வளர்ச்சிக்கு ஒரு பெரிய சேவை வழங்கலாம் என்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

- **சுத்தமிகு உற்பத்தி நடைமுறைகளின் ஊடாக ISO 14001 சான்றிழைப் பெற்றுக்கொள்வதற்கு சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு வசதியளித்தல் கருத்திட்டம்.**

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை தேசிய சுத்தமிகு உற்பத்தி மத்தியநிலையத்துடன் இணைந்து கைத்தொழில் அமைச்சின் வழிகாட்டலின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட 15 கைத்தொழிற்சாலைகளுக்கு சுத்தமிகு உற்பத்தி நடைமுறைகளின் ஊடாக ISO 14001 சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கு சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு வாய்ப்பளித்தல் கருத்திட்டத்தின் கீழ் சான்றிதழைப் பெற்றுக்கொடுத்துள்ளது. இந்தக் கருத்திட்டத்தின் ஊடாக கைத்தொழில் நடத்தைகள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் ஊடாக தேர்ந்தொடுக்கப்பட்ட பதினைந்து கைத்தொழிற்சாலைகளின் சூழல் மறைத்தாக்கத்தைக் குறைத்தலில் கவனம் செலுத்தப்பட்டது. இக்கருத்திட்டத்திற்கான சுத்தமிகு உற்பத்தி மதிப்பீடுகள் மற்றும் வலுச்சக்தி ஆய்வுகள் என்பவற்றின் ஊடாக குறைப்பதற்கான சந்தர்ப்பங்கள் தொடர்பான ஆலோசனைகளை தேசிய சுத்தமிகு உற்பத்தி மத்தியநிலையம் வழங்கியது.

இதன் கீழ் பதினான்கு கைத்தொழிற்சாலைகளுக்கு தரச் சான்றிதழ் வழங்கப்பட்டதுடன், ரூபா 300,000 பெறுமதியான நிதியுதவி ஒவ்வொரு கைத்தொழிற்சாலைக்கும், அவர்களுடைய கைத்தொழிற்சாலையில் சுத்தமிகு உற்பத்தி நடைமுறைகளைப் பின்பற்றுவதற்காக வழங்கப்பட்டது.

- **சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கு டிஜிடல் சந்தைப்படுத்தல் அறிவினைப் பெற்றுக்கொடுத்தல்.**

முன்னைய டிஜிடல் கால விழிப்புணர்வுகள் பத்திரிகை விளம்பரங்கள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் என்பவற்றில் வியாபாரம் தொடர்பான விழிபுணர்வுகளில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. எனினும் இன்று எந்தொவாரு வியாபாரத்தை எடுத்தக்கொண்டாலும் டிஜிடல் ஊடாகத்தின் ஊடாக உலகளாவிய அளவில் விளம்பரத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்டதனால் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தகவல் தொழில் நுட்பப் பிரிவு சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கிடையில் விழிப்புணர்வை ஏற்படுத்தவதற்காக செயலமர்வுகளை நடாததியதுடன், இதனுாடாக தொழில்நுட்பம் தொடர்பான பயம் மற்றும் அறிவின்மையைக் குறைக்க முயன்றது.

- **அங்கத்துவ விருது வழங்கும் வைபவம் - தெரண வியாபாரக் களரியுடன் கைத்தொழில் அபிவிருத்தி சபை**

இந்நாட்டின் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் ஆரம்ப நடவடிக்கையாக, தேசிய பொருளாதாரத்திற்கு மிகச்சிறந்த பங்களிப்பை வழங்கும் துறையாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், “Derana – IDB Brand

Excellence Programme" நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதனூடாக சர்வதேசத்திலும் உள்நாட்டிலும் பாரியளவிலான வாடிக்கையாளர்களை சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்கள் பெற்றுக்கொள்வதற்கு வழிவகுப்பதில கவனம் செலுத்தப்பட்டது. கைத்தொழில் அபிவிருத்தி சபையுடனான தெரன பிசினஸ் கிளப்பின் உத்தியோகபூர்வ இணையத்தரத்தளம் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் மற்றும் தெரனவின் பிரதான நிறைவேற்று அதிகாரியினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

## இயற்பியல் முன்னேற்றம்

- **பயிற்சி நிகழ்ச்சிகள்**

தொழில் முனைவோரின் உற்பத்தித்திறனை மேம் படுத்துவதற்காக பயிற்சி திட்டங்கள் நடத்தப்பட்டன. எனவே, தொழில் நுட்பம், மேலாண்மை, தொழில்நுட்பம் மற்றும் இயந்திரங்கள் பராமரிப்பு ஆகியவற்றில் அவர்களின் திறன்களை பலப்படுத்தலாம். 2018 ஆம் ஆண்டின் ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2018 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் உடல் ரீதியிலான முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு 232 பயிற்சியளிக்கப்பட்ட பயிற்சியின் எண்ணிக்கை மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை 6,964..

**Table: 20.1**

### Training Programmes

| | நிகழ்ச்சித்திட்டங்கள் | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | பயனாளிகள் |
|---|---|---|---|
| 1 | மேலாண்மை நிகழ்ச்சிகள் | 180 | 2,155 |
| 2 | தொழில்நுட்ப பரிமாற்ற நிகழ்ச்சிகள் | 120 | 3,363 |
| | மொத்தம் | **300** | **5,518** |

- *மூலம்: இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை*

- **அறிக்கைகள் தயாரித்தல்**

இந்த காலகட்டத்தில், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், தொழில்நுட்ப அறிக்கைகள் மற்றும் செயற்திறன் அறிக்கைகளின் மதிப்பீட்டு அறிக்கைகள் வங்கி கடன்களுக்கான அணுகல் மற்றும் பிற நோக்கங்களுக்காக தயாரிக்கப்பட்டன. இது சம்பந்தமாக தயாரிக்கப்பட்டுள்ள மொத்த எண்ணிக்கை 277 மற்றும் அதற்கான வகைப்படுத்தல் பின்வருமாறு.

| | அறிக்கைகள் | அறிக்கையின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | இயந்திர மதிப்பீட்டு அறிக்கைகள் | 74 |
| 2 | திட்ட சாத்தியக்கூறு அறிக்கைகள் | 34 |
| 3 | தொழில்நுட்ப அறிக்கைகள் | 169 |
| | மொத்தம் | 277 |

*மூலம்: இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை*

- **தற்போதுள்ள தொழிற்துறை தோட்டங்களின் நவீனமயமாக்கல் மற்றும் மேம்படுத்தல்.**

- தொழிற்சாலைகளுக்கு 22 நிலத் துண்டுகள் வழங்கப்பட்டது மற்றும் 16 புதிதாக ஆரம்பிக்கப்பட்டு 376 வேலைவாய்ப்பு வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

- 29 குத்தகைக் கைத்தொழில்கள் ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டது. **சேவைகள்**

கைத்தொழில் அபிவிருத்திச் சபை (IDB) நவீன தொழில்நுட்பத்தில் உள்ள உள்ளூர் கைத்தொழில்கள் மற்றும் உற்பத்தி தரம், சந்தை மற்றும் அணுகல், முன்னேற்றம் மற்றும் உற்பத்தி செயல்முறைகளை அதிகரிக்க தேவையான நல்ல மேலாண்மை நடைமுறைகள், தேவையான சேவைகள் மற்றும் வழிகாட்டல் ஈடுபட்டு வருகின்றது. 2018 ஆம் ஆண்டின் ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2018 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரையிலான முன்னேற்றத்தின்படி வழங்கப்பட்ட சேவைகள் மற்றும் பயனாளிகளின் மொத்த எண்ணிக்கை3,317.

**Table: 20.3**

| | சேவைகள | SME இன் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பொறியியல் சேவைகள் | 515 |
| 2 | அடிப்படை பொருட்கள், உலோகம் மற்றும் ரப்பர் தொழில்களுக்கு வழங்கப்படும் மூலப்பொருட்கள் | 1,092 |
| 3 | மதிப்பீட்டு சேவைகள் | 09 |
| 4 | தொழில்துறை தகவலை வழங்குதல் | 1,701 |
| | மொத்தம் | **3,317** |

*மூலம்: இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை*



# கூட்டுறவு ஊழியர் சேவை ஆணைக்குழு

## முகவுரை

கூட்டுறவு ஊழியர் சேவை ஆணைக்குழுவின் 1972 ஆம் ஆண்டின் 12 இலக்கச் சட்டத்திற்கமைய உருவாக்கப்பட்டது இதன் நோக்கமானது கூட்டுறவுத்துறையின் மனிதவழ முகாமைத்துவத்துக்கு தேவையானதும் அவசியமானதுமான கொள்கைகளை உருவாக்குதல் கூட்டுறவு ஊழியர் சேவையின் பாதுகாப்புக்கு வேண்டிய சட்டரீதியான விதிகளை உருவாக்குதல் ஊழியர்களை ஊக்கப்படுத்துவதற்கான திட்டங்களை உருவாக்கி செயற்படுத்துதல் மற்றும் கூட்டுறவு துறையின் தொழில்சார் பிணக்குகளை தீர்த்துவைத்தல் மற்றும் ஆலோசனை சேவையினை வழங்குதல்.

## தொலைநோக்கு

“நிறைவான கூட்டுறவாளர் மனித வளத்தை நிர்மாணித்தல”

## செயற்பணி

“கூட்டுறவு இயக்கம் செழிப்பாக நிலைத்திருக்க அத்துறையின் மனித வளத்தின் மேம்பாட்டுக்குத் தேவையான கொள்கைகளை தயாரித்தல்”

## பிரதான இலக்குகள் ∴ நோக்கங்கள்

- கூட்டுறவு துறைசார் மனிதவள முகாமைத்துவத்திற்காக ஆவசியமான கொள்கைகளை தயாரித்தல்.
- கூட்டுறவு உழியர் சேவையினை பாதுகாக்கும் பொருட்டு சட்டரீதியான வரையறைகளை உருவாக்குதல்.
- ஊழியர்களை ஊக்கப்படுத்துதலுக்கு தேவையான அவசியமான வரையறைகளையும் திட்டங்கிளையும் உருவாக்குதல் மற்றும் அவற்றை செயற்படுத்தல்.
- கூட்டுறவு துறையின் தொழில்சார் பிணக்குகளை தீர்த்துவைத்தல் மற்றும் ஆலோசனை சேவையினை வழங்குதல்.

## செயற்பாடுகள்

- கூட்டுறவு சங்கங்களுக்கு ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்யும் போதும், பதவி உயர்வுகளை வழங்கும் போதும், அவர்களுக்குரிய பணிக்கொடைகளை வழங்கும் போதும் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கைகளை நிச்சயித்தல்.
- கூட்டுறவு சங்கங்களில் பதவிகளுக்குரிய நியமனத்துக்காக தேவையான தகைமைகளை தீர்மானித்தலும், அப்பதவிகளுக்குரிய சம்பள அளவுகளைத் தீர்மானித்தலும்.
- ஊழியர் சச்சரவுகளை தீர்த்து வைத்தல், மேன்முறையீடுகளை விசாரணை செய்தல், ஆணைகளை செயற்படுத்தல், நிறைவேற்றத் தவறிய சங்கங்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்தல்.
- ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள் தொடர்பாக தேவையான பரிசீலனைகளை மேற்கொள்ளுதல்.
- தமது ஊழியர்கள் தொடர்பிலான ஒழுக்காற்று நடவடிக்கைகளின் போது கூட்டுறவு சங்கங்களினால் கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஒழுங்குவிதி ஒழுங்குவிதிகளைத் தீர்மானித்தல்.
- மனிதவளத்தை மேம்படுத்துவதற்காக கலந்துரையாடல்களையும், மாநாடுகளையும், பயிற்சித் திட்டங்களையும் செயற்படுத்துதல்.

## 31 டிசம்பர் 2018ம் திகதியில் முன்னேற்றம்.

- கூட்டுறவு ஊழியர்களினதும் கூட்டுறவு சேவைகள் ஆணைக்குழு உத்தியோகத்தர்களினதும் அறிவு விருத்தி மற்றும் செயற்திறனை மேம்படுத்துவதற்காக அறிவூட்டல் மற்றும் பயிற்சியளிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தல்.
- 2018.12.31 ஆம் திகதியின்போது கூட்டுறவு ஊழியர்களை அறிவூட்டல், பயிற்சியளிக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் ஆணைக்குழுவின் பணியாட்றொகுதிக்கு பயிற்சியளிக்கும் 15 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. அவை தொடர்பில் 0.89 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

# அரச நிறுவனங்கள்



## வரையறுக்கப்பட்ட மாந்தை உப்புக் கம்பனி

### முகவுரை

மாந்தை உப்புக் கம்பனி, இலங்கை வரலாற்றில் நீண்டகாலமாக உப்பு உற்பத்தில் ஈடுபட்டுவருகின்றது. இது சாதாரண உப்பு, அயடிக் கலந்த உப்பு, தூளாக்கிய உப்பு மற்றும் கைத்தொழில் உப்பு வகைகளை உற்பத்தி செய்கின்றது. பிரதான உப்பு உற்பத்தி மன்னார் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுவதுடன், தலைமைக் காரியாலயம் கொழும்பில் அமைந்துள்ளது..

இந்த உப்புக் கம்பனி 1938ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன், இது பல்வேறுபட்ட நலன்விரும்பிகளின் வேறுபட்ட நிர்வாக முறைகளின் கீழ் கட்டுப்படுத்தப்பட்டதுடன், இறுதியாக 2001ம் ஆண்டு வரையறுக்கப்பட்ட மாந்தை உப்பு கம்பனி எனப்பெயரிடப்பட்டு தற்போது கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் செயற்படுகின்றது. இந்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் ஏனைய உப்புகளுன் ஒப்பிடுகையில் மிகச்சிறந்த உப்பாக (98.0 சோடியம் குளோரைட்) அங்கீகரிக்கப்படுகின்றது.

மாந்தை உப்புக் கம்பனி தேசிய இயற்கை வள பயன்பாட்டு மத்தியநிலையமாக மாத்திரமன்றி வட மாகாணத்தில் வாழும் எண்ணற்ற மக்களுக்கு தொழில்வாய்ப்பினையும் வழங்குகின்றது. தற்போது இங்கு 75 நிரந்தரமான உத்தியோகத்தர்களும் 145 பருவகால அடிப்படையிலான ஊழியர்களும் பணிபுரிகின்றனர்.

வரையறுக்கப்பட்ட மாந்தை உப்புக் கம்பனி திறைசேரி மற்றும் ஏனைய திணைக்களங்களினால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட சபையினால் நிர்வகிக்கப்படுவதுடன், இது கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் செயற்படுகின்றது. இந்த அமைச்சின் கூட்டுத்தாபன மற்றும் நியதிச்சட்டப் பிரிவினால் கண்காணிக்கப்படுவதுடன், சட்ட மற்றும் பொறுப்பு விடயங்கள் தொடர்பான ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்படுகின்றது. இது ஒரு அரச தொழில்முயற்சியாண்மையாக 2007ம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன், கம்பனி ஒழுங்குவிதிகளையும் பின்பற்றுகின்றது. தற்போது, இந்நிறுவனம் இலங்கை நியமங்கள் நிறுவனத்தினால் தரம் உறுதிப்படுத்தப்படல் சான்றுபடுத்தப்பட்டுள்ளது. அத்துடன், திறைசேரியினால் தேர்வுசெய்யப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட கணக்காய்வாளர்களினால் கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

### தொலைநோக்கு

“ இரசாயனம் மற்றும் ஏனைய பதப்படுத்தலுடன் தொடர்புடையதுமான இயற்கை வளங்களை முற்றாய்வு செய்வதன் மூலம் வடக்கில் உப்பை அடிப்படையாக் கொண்ட தொழில்முயற்சிகளின் அபிவிருத்தி மற்றும் அதனூடாக அங்கு வாழும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தல்.”.

### செயற்பணி

“ வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசத்தில் உப்பளங்களின் தொழிற்பாடு, தயாரிப்பு, பதப்படுத்தல், உப்பு மற்றும் உப பொருட்களை சந்தைப்படுத்தல்.

### நோக்கங்கள்

தேசிய வளங்களை பயன்படுத்தல், நாட்டுக்கு வருமானத்தை உருவாக்கல், தொழில்வாய்ப்புகளை வழங்கல் மற்றும் சமூக கூட்டிணைந்த பொறுப்புக்களை உறுதிப்படுத்தல்..

### பிரதான செயற்பாடுகள்

பண்படாத உப்புத் தயாரிப்பு மற்றும் நுகர்வுக்கு தூளாக்கல் மற்றும் அயடின் சேர்த்தல் நடைமுறையின் ஊடாக பெறுமதிகளை சேர்த்தல்.

## 31 டிசம்பர் 2018ம் திகதியில் முன்னேற்றம்

- **ஆணையிறவு உப்பளத்தின் மேம்படுத்தல்**

**கருத்திட்டத்தின் நோக்கம் :** உப்பள நடவடிக்கைகளை மீள ஆரம்பித்தல் ஊடாக 20000 மெற்றிக்தொன் உப்பை உற்பத்தி செய்தல் மற்றும் உள்நாட்டு மக்களுக்கு தொழில்வாய்ப்புகளை வழங்குதல்.

அட்டவணை: 25.1

### சொந்த நிதியின் கீழ் வரும் பணிகள் திட்டமிட்டு செயற்படுத்தப்படுகின்றன.

| செயற்பாடு | ஒதுக்கீட்டு அலகு | பௌதீக முன்னேற்றம் | | நிதியியல் முன்னேற்றம் | | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| | | இலக்கு | அடைவுகள் | ஒதுக்கீடு | செலவு | |
| மன்னருக்கு கிரிஸ்டல் பிளான்டை கொள்வனவு செய்தல் | 01 பிளான்ட் | 60% | 40% | 20 | 00 | 1st வது ஆய்வு பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. |
| மன்னாரில் அலுவலக காரியாலயத்தைதக் கட்டுதல் | 01 கட்டடம் | 50% | 20% | 15 | 00 | திட்டம் பூர்த்திசெய்யப்பட்டது |
| **மொத்தம்** | | | | **35** | **00** | |

*மூலம்: மாந்தை சோல்ட் லிமிடட்*

அட்டவணை 25.2

### உப்பு உற்பத்தி மற்றும் விற்பனை
### (01/04/2018 -31/12/2018)

| உப்பளத்தின் பெயர் | தயாரிப்பு இலக்கு மெற்றிக் தொன்னில் | அடைவுகள் மெற்றிக் தொன்னில் | முன்மொழியப்பட்ட விற்பனை ரூபா | அடைவுகள் ரூபா |
|---|---|---|---|---|
| மன்னார் உப்பளம் | 4,900 | **5,906** | 52,185,000.00 | **79,986,600.00** |
| ஆணையிறவு உப்பளம் | 9,850 | **9,431** | 74,608,300.00 | **51,546,078.00** |

*மூலம்: மாந்தை சோல்ட் லிமிடட்*

# இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனம்

## முகவுரை

2009 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனம், 2009 ஜுன் 15ம் திகதியில் இருந்து செயற்பட ஆரம்பித்தது. இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனம் இலங்கையில் புடவை, ஆடை, பாதணி மற்றும் அதனோடு சேர்ந்த கைத்தொழிற்துறையினரை பயிற்றுவிக்கும் முக்கிய நிறுவனங்களில் ஒன்றாகும்.அத்தோடு, பயிற்சிகளுக்கு மேலதிகமாக, ஆலோசனைச் சேவைகளையும் மற்றும் பௌதீக மற்றும் இரசாயனவியல் பரிசோதனைகள் மற்றும் ஆடைப் பரிசோதனைகளையும் மேற்கொள்ளுகின்றது. இந்நிறுவனம் புடவைத்துறை மற்றும் புடவைத் தொழில்நுட்ப முகாமைத்துவம் போன்ற துறைகளுக்கு நீண்ட கால, குறுகிய கால மற்றும் தனிப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குகின்றது. இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனத்தின் பரிசோதனைக்கூடம்ஐளுழு 17025 சான்றிதழ் பரிசோதனைக்காக ஒத்தியல்புடையதாக்கப்பட்டுள்ளது. ஆடைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம் (CITI) மற்றும் புடவைத்தொழில் பயிற்சி மற்றும் சேவைகள் மத்தியநிலையம் (TT & SC) இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனமாக ஒன்றிணைக்கப்பட்ட இத்தந்திரோபாயத்தினால் இருக்கும் மனித வளம், இயந்திரங்கள், நிலம் என்பனவற்றை உபயோகித்து வினைத்திறனுள்ள மற்றும் செயற்திறனுள்ள சேவையினை வழங்க முடிந்தது. அத்தோடு, ஆறு திணைக்களங்களை மீள் ஒழுங்குபடுத்தி நிறுவனத்தின் அமைப்பினை மீளமைப்பு செய்வதினால் வியாபார சவால்களில் இருந்து இலங்கை புடவை மற்றும் ஆடைகள் துறையினை காக்க முடியும். இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனத்தின் மீளமைக்கப்பட்ட முகாமைத்துவத்தில் ஒவ்வவொரு அலகிற்கும் ஒவ்வொரு நபருக்கும் பொறுப்புகளும் அதிகாரங்களும் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளதனால், அதன் வியாபார தொடர்ச்சிக்கு வருமானத்தை உழைத்துக்கொள்ள முடியும்.

## பிரதான வியாபார செயற்பாடுகள்

- பயிற்சியளித்தல்
- பரிசோதனை செய்தல்
- ஆலோசனை சேவை
- தொழில்நுட்ப சேவைகள்

### 31 டிசம்பர் 2018ம் திகதியில் முன்னேற்றம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான மேலதிகம்/ பற்றாக்குறை | **26.62** | **(18.88)** | **16.11** | **35.16** | **1.84** |
| வேறுபடும் வருமானம் | 19.6 | 21.3 | 22.31 | 19.37 | 19.00 |
| **இக்காலப்பகுதிகான மொத்த மேலதிகம்/ பற்றாக்குறை** | **46.23** | **2.42** | **38.42** | **54.54** | **20.84** |

*மூலம் : இல்கை புடவைகள் மற்றும் ஆடைகள் நிறுவனம்*




*மூலம் : இல்கை புடவைகள் மற்றும் ஆடைகள் நிறுவனம்l*




*மூலம் : இல்கை புடவைகள் மற்றும் ஆடைகள் நிறுவனம்*




*மூலம் : இல்கை புடவைகள் மற்றும் ஆடைகள் நிறுவனம்*




*மூலம் : இல்கை புடவைகள் மற்றும் ஆடைகள் நிறுவனம்*




*மூலம் : இல்கை புடவைகள் மற்றும் ஆடைகள் நிறுவனம்*

## பௌதீக செயலாற்றுகை

| செயற்பாடுகள் | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|
| பரிசோதனைகளின்எண்ணிக்கை | 65,031 | 39,424 | 43,937 | 49,529 | 47,478 |
| பயிற்சியாளர்கள் | 4,319 | 4,402 | 4,048 | 5,409 | 3,751 |
| பாடநெறிகளின் எண்ணிக்கை | 144 | 151 | 237 | 201 | 137 |

*மூலம் : இல்கை புடவைகள் மற்றும் ஆடைகள் நிறுவனம்*

# லங்கா சதொச லிமிடட்

## முகவுரை

லங்கா சதொச நிறுவனமானது FMCG சந்தையில் 400 சில்லறை விற்பனை நிலையங்களை கொண்ட மிகப்பெரிய சில்லறை விற்பனை வலையமைப்பாகும். இது அத்தியவசிய பொருட்களின் விலைகளை தீர்மானிக்கும் கருவியாகவும் மற்றும் தனது விலைக்கு ஏனைய போட்டி நிறுவனத்தினை கெ ாண்டுவரும் ஒரு உண்டு சக்தியாகவும் திகழ்கிறது. லங்கா சதொச நிறுவனமானது 2017 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க நிறுவன சட்டத்தின் கிழ் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் பொது திறைசேரி 97% விதமான உரிமத்தினையும் CWE சதொச நிறுவனம் 03% விதமான உரிமத்தினையும் கொண்டுள்ளது. இந்நிறுவனம் 2016 ஆம் ஆண்டு கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டு தகுதியான முகாமையாளர்களை உள்வாங்கப்பட்டு நிறுவகிக்கப்படுகின்றது.

### 31 டிசம்பர் 2018ம் திகதியில் முன்னேற்றம்

**நிகழ்ச்சி நிரல்கள் மற்றும் திட்டங்கள்: புதிய விற்பனை நிலையங்களை ஆரம்பிப்பது**

| எதிர்பார்க்கும் வெளியீடுகள் | எதிர்பார்க்கும் பயன்கள் | 2018 க்கா மொத்த பாதீடு (ரூபா. மி) | முன்னேற்றம் |
|---|---|---|---|
| | | | நிதியியல் (ரூபா. மி) |
| நிறுவனத்தின் சந்தை பங்கை மேம்படுத்தல் | நிறுவன புரள்வு மற்றும் இலாபத்தினை மேம்படுததல் | 110.0 | 102.3 |
| வாழ்க்கை செலவை குறைத்தல் | | | |
| நவீனமயமாக்கல் சேவை ஊடாக நடுத்தர ஆடம்பர வர்க்கத்தினை கவர்தல் | | 150.0 | 276.1 |

**நிகழ்ச்சி நிரல்கள் மற்றும் திட்டங்கள்: கைரேகை மூலமான வருகையை உறுதிப்படுத்தும் முறையை பொருத்துதல்**

| எதிர்பார்க்கும் வெளியீடுகள் | எதிர்பார்க்கும் பயன்கள் | 2018 க்கா மொத்த பாதீடு (ரூபா. மி) | முன்னேற்றம் | |
|---|---|---|---|---|
| | | | நிதியியல் (ரூபா. மி) | இயல் பியல் |
| ஊழியர் வருகை சம்பந்தமான துல்லியமான தரவை உருவாக்கல் | ஊழியர் வருகை தொடர்பான கையேடு முறையை குறைத்து வினைதிறன் மிக்க அமைப்பை உருவாக்கல் | 15.0 | 12.3 | கைரேகை பதிவு கருவிகள் 380 விற்பனை நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ளது |
| மேலதிக வேலை நேரம் தொடர்பான முறைகேடுகளில் கட்டுப்பாட்டை மேற்கொள்ளல் | ஊழியர் வருகை தொடர்பான கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டை அதிகரித்தல் | | | |

**நிகழ்ச்சி நிரல்கள் மற்றும் திட்டங்கள்: செயற்பாட்டில் உள்ள விற்பனை நிலையங்களை மேம்படுத்தல்**

| எதிர்பார்க்கும் வெளியீடுகள் | எதிர்பார்க்கும் பயன்கள் | 2018 க்கா மொத்த பாதீடு (ரூபா. மி) | முன்னேற்றம் | |
|---|---|---|---|---|
| | | | நிதியியல் (ரூபா. மி) | இயல் பியல் |
| விற்பனை நிலைய பாதுகாப்பை மேம்படுத்தல் | தீ விபத்தினால் ஏற்படும் பாதிப்புகளில் இருந்து ஊழியர்களையும் சொத்துக்கயையும் பாதுகாத்தல் | 8.0 | | |
| மின்னஞ்சல் மற்றும் அமைப்புக்கான துணைவு போன்றவற்றை விற்பனை நிலைய முகாமையாளர்களுக்கு வழங்குதல் | விற்பனை நிலைய முகாமையாளர்களின் தொழிற்பாட்டு திறனை போதுமான தகவல்களை வழங்குவதன் மூலம் மேம்படுத்தல் | 10.0 | | |
| தேவையான உபகரணங்கள் மற்றும் கருவிகளை விற்பனை நிலையங்களுக்கு வழங்குதல் | பாவனையாளர்களது திருப்தியை மேம்படுத்தல் | 100.0 | | |

**நிகழ்ச்சி நிரல்கள் மற்றும் திட்டங்கள்: CCTV திட்டம் நடைமுறையில் உள்ளது**

| எதிர்பார்க்கும் வெளியீடுகள் | எதிர்பார்க்கும் பயன்கள் | 2018 க்கா மொத்த பாதீடு (ரூபா. மி) | முன்னேற்றம் | |
|---|---|---|---|---|
| | | | நிதியியல் (ரூபா. மி) | இயல் பியல் |
| களவுகள் திருட்டுகள் இல்லாமல் செய்து சிறந்த கட்டுப்பாட்டு சூழலை உருவாக்கல் | இழப்புகளை குறைப்பதனூடாக இலாபத்தினை அதிகரித்தல் | 80.0 | 48 | 258விற்பனை நிலையங்களில் 318CCTV முறை அமுல்படுத்தப்பட்டுள்ளது |

**நிகழ்ச்சி நிரல்கள் மற்றும் திட்டங்கள்: விலக்குரிமை விற்பனை நிலையங்களை ஆரம்பித்தல்**

| எதிர்பார்க்கும் வெளியீடுகள் | எதிர்பார்க்கும் பயன்கள் | 2018 க்கா மொத்த பாதீடு (ரூபா. மி) | முன்னேற்றம் | |
|---|---|---|---|---|
| | | | நிதியியல் (ரூபா. மி) | இயல்பியல் |
| அத்தியவசிய பொருட்களை குறைந்த விலையில் வழங்குவதனுடன் பிந்திய பகுதிகளுக்காக வசதிவாய்ந்த பாவனைகளை அடைதல் | தரமான பொருளை குறைந்த விலையில் பிந்திய குறைந்த வருமானம் பெறும் வர்க்கத்தினருக்கு பணியாற்றல் | 27.0 | | |
| நிறுவனத்தின் சந்தை பங்கை அதிகரித்தல் | போட்டியாளர்களை விட சந்தையில் பங்கினை அதிகரிப்பதன் ஊடாக தேசத்தின் விலை தீர்மானிப்பாளராக மாறுதல் | | | |
| நிறுவனத்தின் சொந்த பொருட்களை பிரபலப்படுத்தல் | | | | |
| சிறந்த போக்குவரத்தின் ஊடாக செலவுகளை குறைத்து சிறந்த கொள்வனவு முறைமை ஊடாக விலைகழிவு விலைக்குறிப்பில் ஆதிக்கம் செலுத்துதல் | சொந்த பொருட்களில் அதிக இலாபயீட்டுவதனூடாக நிறுவன இலாபத்தனை அதிகரித்தல் | | | |
| | நிறுவன இலாபத்தை அதிகரித்தல் | | | |
| மொத்தம் | | **500.0** | **438.7** | |

*மூலம்: லங்கா சதொச லிமிடட்*

# தேசிய அருங்கலைப் பேரவை

## முகவுரை

தேசிய அருங்கலைகள் பேரவையானது, கைப்பணியில் ஈடுபட்டுள்ள கலைஞர்களுக்கு சமூக அந்தஸ்தைப் பெற்றுக்கொடுப்பதுடன், கைப்பணியை வளர்க்கும் நோக்கத்துடன் 1982ம் ஆண்டு 35ம் இலக்க தேசிய அருங்கலைகள் பேரவை மற்றும் அதனோடு இணைந்த சட்டத்தின் ஏற்பாடுகள் மூலம் நிறுவப்பட்டது.

கடந்த சில தசாப்தங்களாக கைப்பணிகளைப் பாதுகாத்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதுடன், கைப்பணிக் கலைஞர்களின் நலன்புரிக்காக பல்வேறுபட்ட கருத்திட்டங்களும் நிகழ்ச்சித்திட்டங்களும் தேசிய அருங்கலைகள் பேரவை அமுல்படுத்தப்பட்டது.

**செயற்பாடுகள்**

- பிராந்திய மட்டத்தில் கைப்பணியாளர் சங்கங்களை நிறுவுதல் மற்றும் அதனூடான கைப்பணியாளர்களை செயற்படுத்தி, அந்த சங்கங்களின் ஊடாக கைப்பணிக் கிராமங்களை உருவாக்குதல்.
- தேசிய மட்டத்தில் பதிவுசெய்த கைப்பணியாளர்களை அடையாளம் கண்டு, அவர்களுக்கு அடையாள அட்டையை விநியோகித்தல்.
- கைப்பணியாளர்களுக்கு அரிதான மூலப்பொருட்களை வழங்குதல் மற்றும் அவ்வகையான நடவடிக்கைகளை ஒழுங்குசெய்தல்
- கைப்பணிப் பொருட்களின் தரத்தினை மேம்படுத்துவதற்காகவும், அந்த குறிப்பிட்ட நியமத்தைப் பேணுவதற்காகவும் செயலமர்வுகளை நடாத்துதல்
- தலைமை கைப்பணியாளர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- முழு நேர கைப்பணியாளர் பயிற்சிப் பாடநெறிகயை நடாத்துதல் மற்'றம் கைப்பணி பயிற்சி மத்தியநிலையத்தின் ஊடாக தயாரிப்பிற்கு வசதியளித்தல்.
- ஏற்றுமதிச் சந்தைக்கான கைப்பணித்தயாரிப்புகளை ஊக்குவித்தல் மற்றும் வெளிநாடுகளில் நடக்கும் கண்காட்சிகளில் கைப்பணியாளர்கள் பங்குபற்றவதற்கும், அங்கு அவர்களுடைய பொருட்களை காட்சிப்படுத்துவதற்கும் வாய்ப்பளித்தல்.
- கைப்பணியாளர்களை பாராட்டுவதற்கு மாகாண மற்றும் தேசிய ரீதியான கண்காட்சிகளையும் போட்டிகளையும் நடாத்துதல் மற்றும். அத்துடன் வர்த்தகச் சந்தைகளை நடாத்துதல் மற்றும் கைப்பணியாளர்கள் அவர்களுடைய பொருட்களை விற்பனை செய்வதற்காக கைப்பணிக் கிராமங்களை நிறுவுதல்.
- கைப்பணியாளர்களின் நலன்புரியை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- கைப்பணியாளர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் சமூக பொருளாதார நிலையைத்தரும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டங்களை மாகாண மற்றம் மாவட்ட மட்டங்களில் உள்ள அரச நிறுவனங்கள் அமுல்படுத்துதல்.

### 31 டிசம்பர் 2018ம் திகதியில் முன்னேற்றம்

- **தலைமை கைவினைஞர்கள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்**

தேசிய அருங்கலைப் பேரவை, இளைய சமுதாயத்திற்கு இதனைப் பிரபல்யப்படுத்தல், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களை அவர்களின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு கைப்பணித்துறையில் உள்ள சுய தொழிலுக்கு ஊக்கப்படுத்தல் என்பவற்றின் ஊடாக பாரம்பரியக் கைவினைப் பொருட்களைப் பேணிப் பாதுகாக்கும் நோக்கத்தடன் தலைமை கைவினைஞர்கள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துகின்றது. இதற்கமைவாக 72 தலைமை கைவினைஞர்கள் பயிற்சி வகுப்பு நடாத்தப்பட்டதுடன், 798 பயிலுனர் கைப்பணியாளர்கள் வழமையான பயிற்சியை கைப்பணித்துறையில் பெற்றுக்கொண்டனர். வகுப்பறையில் பயிற்சிக்கான உபகரணங்களும் மூலப்பொருட்களும் வழங்கப்பட்டது. (மொத்த ஆகுசெலவு ரூபா 8.716மில்லியன்).

- **கைப்பணி பயிற்சி மத்தியநிலையம்**

இங்கு 19 மாவட்டங்களில் 17 கைப்பணித்துறைகளில் 112 கைப்பணிப் பயிற்சி நிலையங்கள் தொழிற்படுகின்றது. இதனூடாக 875 பயிலுனர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது (மொத்தச் செலவு ரூபா 6.072 மில்லியன்). இந்தப் பயிலுனர்களுக்கு ஆறு மாதங்களுக்கு ரூபா 1000 மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டது

- **இடைநிலை பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**

கைப்பணிப் பொருட்களின் தரத்தினை மேம்படுத்தவதற்காக புதிய வடிவங்களை அறிமுகப்படுத்தல் மற்றும் கைப்பணிப் பொருட்களின் தரத்தை நியமப்படுத்துவதற்காக அவசியமான அறிவு மற்றும் தொழில்நுட்பம் தொடர்பாக கைப்பணியாளர்களை அறிவூட்டும் நோக்கத்துடன் கைப்பணிப் பயிற்சி செயலமர்வுகள் நடாத்தப்பட்டது. இதற்கமைவாக 17 பயிற்சி செயலமர்வுகள் நடாத்தப்பட்டதுடன் 433 நபர்களுக்கு பயிற்சி கொடுப்பனவு வழங்கப்பட்டது. (மொத்தச் செலவு ரூபா 1.017 மில்லியன்)

- **"Shilpa Saviya" தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் -**

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கம் பாரம்பரிய கைவினைஞர்களை தொழில்முயற்சியாளர்களாக மாற்றவதன் ஊடாகவும் புதிய வியாபார நாமங்களை அறிமுகப்படுத்தவதன் ஊடாகவும் உள்நாட்டு பொருளாதார நிலைமையை மேம்படுத்தவதன் ஊடாக நிலையான பொருளாதார அபிவிருத்தியை அடைதல் ஆகும். தொழில்முயற்சியாளர் பயிற்சி செயலமர்வுகளும் வடிவமைப்பு அபிவிருத்தி செயலமர்வுகளும் நடாத்தப்பட்டதுடன் இந்தப் பயிற்சி செயலமர்வில் 27 கைவினைஞர்கள் பங்குபற்றினர். "Shilpa Saviya" கண்காட்சி 19 – 21 டிசம்பர் 2018 இல் கொழும்பு டச் ஹொஸ்பிட்டல் தொகுதியில் நடாத்தப்பட்டது. (மொத்தச் செலவு ரூபா 2.541 மில்லியன்)

***வதிவிட பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்***

- **"Shilpa Abhimani - 2017" ஜனாதிபதி கைப்பணி விருதுகளை வைபவம்**

தேசிய அருங்கலைப் பேரவை, தேசிய கைப்பணித்துறை விருதுகள் வைபவத்தில் "Shilpa Abhimani" ஜனாதிபதி

கைப்பணித்துறை விருதுகள் வைபவத்தில் கைப்பணியாளர்களை ஊக்குவிப்பதற்கும் மதிப்பீடு செய்வதற்கு வருடாந்த "Shilpa" விருதுகள் வழங்கும் வைபவத்தை நாடாத்துகின்றது. "Shilpa Abhimani – 2017" விருதுகள் 28 மே 2018ம் திகதி BMICH கேட்போர் கூடத்தில் இலங்கை சோசலிச குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இதன்போது. விருதுகளைப் பெற்ற 428 கைப்பணியாளர்களுக்கு வெற்றிக் கோப்பைகளும், சான்றிதழ்களும் பண விருதுகளும் வழங்கப்பட்டது

- **"Shilpa Abhimani - 2018" கைப்பணிப் பொருட்கள் போட்டி மற்றும் கண்காட்சி ஜனாதிபதி விருதுகள்**

தேசிய அருங்கலைப் பேரவையினால் வருடாந்தம் நடாம்தப்படும் கைப்பணிப் பொருட்களுக்கான ஜனாதிபதி விருது மற்றும் கண்காட்சி "Shilpa Abhimani – 2018" இவ்வருடம் சர்வதேச கைப்பணிப் பொருட்கள் விழாக் காலத்திற்கு சமாந்தரமாக பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் "Sapphire Banquet Hall" கேட்போர்கூட்தில் 12- 18 செப்டெம்பர் 2018ம் திகதி நடாத்தப்பட்டது. உள்நாட்டு வெளிநாட்டு பார்வையாளர்கள், கைப்பணியாளர்கள், கலைஞர்கள், கொள்வனவாளர்கள், நுகர்வோர்கள் மற்றும் பாடசாலைப் பிள்ளைகள் என அதிகளவானோர் தேசிய கண்காட்சியில் பங்குபற்றினர். இது இலங்கை கைப்பணியாளர்களின் திறமையை பிரதிபலித்தது.

- **மாகாண கைப்பணிப் பொருட்கள் போட்டிகள் மற்றும் கண்காட்சி**

தேசிய அருங்கலைப் பேரவையினால் தேசிய கைப்பணிக் கண்காட்சிக்கு சமாந்தரமாக மாகாண சபைகள் மற்றும் சிறிய கைத்தொழிற்துறைக்கான மாகாணத் திணைக்களம் என்பவற்றுடன் இணைந்து ஒன்பது மாகாணங்களிலும் மாகாண மட்டத்திலான கண்காட்சிகள் ஒழுங்குசெய்யப்பட்டது. இதில் பங்குபற்றியவர்களுக்கு முதலாம் இடம், இரண்டாம் இடம், மூன்றாம் இடம் மற்றும் அதிவிசேட விருதுகள் வழங்கப்பட்டதுடன், அவர்கள் கைப்பணிப் பொருட்களுக்கான ஜனாதிபதி விருது மற்றும் கண்காட்சி "Shilpa Abhimani – 2018" போட்டியில் பங்குபற்றுவதற்கான தகைமையைப் பெற்றனர். ஒன்பது மாகாண போட்டிகள் நடாத்தப்பட்டதுடன், 4,138 கைப்பணியாளர்கள் பங்குபற்றினர். (மொத்தச் செலவு ரூபா 3.887 மில்லியன்).

- **விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்**

தேசிய அருங்கலைப் பேரவை தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் நடாத்தப்பட்ட கைப்பணித்துறைக் கண்காட்சிகளுக்கு சமாந்தரமாக கைப்பணியாளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்தியது. இந்தச் செயலமர்வின் நோக்கம் தேசிய மற்றும் மாவட்ட மட்டத்தில் கண்காட்சிகளை நடாத்தும் பொழுது கண்காட்சிக்கு அவசியமான தரம் தொடர்பாக கலந்துரையாடலின் ஊடாக அவர்களை அறிவூட்டுதல் மற்றும் இவ்வாறன தரத்தில் கண்காட்சிக்கு பொருட்களை வழங்குவதில் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை இனங்காணுதல் ஆகும். இவ்வாறான 25 செயலமர்வுகள் 2018ம் ஆண்டு மாகாண மற்றும் மாவட்ட மட்டங்களில் நடாத்தப்பட்டதுடன் 3,167 கைவினைஞர்கள் இந்த செயலமர்வில் பங்குபற்றினர் (மொத்தச் செலவு ரூபா 1.59 மில்லியன்)

- **"Shilpa Navoda" பாடசாலைகளுக்கு இடையிலான கைப்பணிப் போட்டி மற்றும் கண்காட்சி**

தேசிய அருங்கலைப் பேரவை கல்வி அமைச்சுடன் இணைந்து இளைய சமூதாயத்தை கைப்பணித்துறைக்கு இட்டுச் செல்வதற்காக "Shilpa Navoda" பாடசாலைகளுக்கு இடையிலான கைப்பணிப் போட்டியை நடாத்தவதற்கு திட்டமிட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டம் 4 படிமுறைகளைக் கொண்டுள்ளது, அவை விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டம், பயிற்சி நிகழ்ச்சித்திட்டம், போட்டி மற்றும் கண்காட்சி என்பவையாகும். அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான கைப்பணிப் பொருட்கள் போட்டி மற்றும் கண்காட்சி BMICHஇல் 28 மே 2018ம் திகதி நடைபெற்றது. 566 பாடசாலைகள் பங்குபற்றியதுடன் போட்டியின் போது 522 ஆக்கங்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டது. (மொத்தச் செலவு ரூபா 10.647 மில்லியன்)

- **கைவினைஞர்களைப் பதிவுசெய்தல்**

நாடு முழுவதிலுமுள்ள கைவினைஞர்களைப் பதிவுசெய்வதற்கான நடவடிக்கைகளை தேசிய அருங்கலைப் பேரவை எடுத்துள்ளது. கைப்பணித்துறையில் ஈடுபட்டிருக்கும் கைவினைஞர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதுடன், அவர்களுக்கு ஆரோக்கியமானதும் நிலையானதுமான தொடர்புகளைப் பேணுதல். இவ்வருடத்தினுள் 1382 கைவினைஞர்கள் பதிவுசெய்யப்பட்டதுடன், இது வரை பதிவுசெய்யப்பட்டுள்ள மொத்த கைவினைஞர்களின் எண்ணிக்கை 28,121 ஆகும். (மொத்தச் செலவு ரூபா 0.128 மில்லியன்).

- **சுயதொழிலுக்கான வசதிகளை வழங்குதல்**

தேசிய அருங்கலைப் பேரவையினால் கைப்பணித்துறையில் உள்ளவர்கள் அவர்களுடைய துறையை மேம்படுத்தவதற்காக மூலப் பொருட்களும் உபகரணங்களும் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக 464 கைவினைஞர்கள் பயன்பெற்றனர். (மொத்தச் செலவு ரூபா 2.829 மில்லியன்)

- **உள்நாட்டு சந்தை ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்**

தேசிய அருங்கலைப் பேரவை, சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்தல், இலங்கை கைப்பணிப் தயாரிப்புகளுக்கான கலச்சாரப் பெறுமதியை பிரபல்யப்படுத்தல், கைப்பணித் தயாரிப்புகளுக்கு நியாயமான விலையைப் பெற்றுக்கொள்ளல் என்பவற்றுக்காக உள்நாட்டு சந்தை ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது. இந்த நிகழ்ச்சித்திட்டதின் கீழ் 04 உள்நாட்டு வர்த்தக சந்தை மற்றும் கண்காட்சிகளும் மற்றும் சிறிந்த சந்தை நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தப்பட்டது. இதனூடாக 185 கைவினைஞர்களுக்கு சந்தைவசிகள் வழங்கப்பட்டது. (மொத்தச் செலவு ரூபா 1.749 மில்லியன்).

- **வெளிநாட்டு சந்தை ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்**

தேசிய அருங்கலைப் பேரவை, உள்நாட்டு கைவினைஞர்களின் அதிவிசேட திறமையை ஊக்குவித்தல் மற்றும் காட்சிப்படுத்தல் நோக்கத்துடனும் வெளிநாடுகளில் உள்நாட்டு அடையாளத்தைப் பெற்றுக்கொள்வதற்காகவும் உள்நாட்டு கைப்பணியாளர்களை வெளிநாட்டு வர்த்தக் கண்காட்சிகளுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 23 கைவினைஞர்கள் இந்தியாவின் Suraj Kund Craft Mela & Malabar Crafts Mela மற்றும் பூட்டான் மற்றும் சீனாவில் நடைபெற்ற கைப்பணிச் சந்தைகளில் என்பவற்றில் பங்குபற்றினர். (மொத்தச் செலவு ரூபா 3.23 மில்லியன்)

- **கைவினையாளர் நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள்**

தேசிய அருங்கலைப் பேரவை முதியவர்களுக்கும் ஊனமுற்றவர்களுக்கும் அவர்களுடைய கோரல்களைக் கவனத்தில் கொண்டு ( சத்திர சிகிச்சை, இதய சத்திர சிகிச்சை, கண் சத்திர சிகிச்சை மற்றும் விசேட சத்திர சிகிச்சைகளுக்கு ) மற்றும் தற்காலிகமாக ஊனமுற்றவாகளுக்கும் தேசிய அருங்கலைப் பேரவையின் நலன்புரிச் சட்டத்திற்கு அமைவாக கொடுப்பனவுகளை வழங்கியது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 88 கைப்பணியாளர்கள் நன்மை பெற்றனர். (மொத்தச் செலவு ரூபா 0.615 மில்லியன்)

# தேசிய வடிவமைப்பு மத்தியநிலையம்

## முகவுரை

தேசிய அருங்கலைகள் பேரவை (NDC) மற்றும் இணைந்த நிறுவனங்கள் சட்டம் 1982 இல. 35ன் கீழ் நிறுவப்பட்ட தேசிய வடிவமைப்பு நிலையம் அதன் செயற்பாடுகளை 1983ல் ஆரம்பித்ததோடு, பாரம்பரிய கைவினை கலைஞர்களை வழிநடாத்தல் மற்றும் பயிற்சியளித்தல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொண்டு அவர்களது அபிவிருத்தி மற்றும் முன்னேற்றம் எனும் பிரதான குறிக்கோளை அடையும் நோக்குடன் தற்பொழுது கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் அதிகார வரம்பின் கீழ் செயற்படுகிறது.

தேசிய மற்றும் சர்வதேச சந்தைகளை இலக்காகக் கொண்டு கைவினை கைத்தொழில் துறைக்காக சந்தைக்கு பொருத்தமான புதிய வடிவமைப்புக்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் மேம்படுத்தல் தேசிய வடிவமைப்பு நிலையத்தின் பிரதான குறிக்கோள்களாகும். கைவினை கலைஞர்களுடைய தொழிநுட்ப மற்றும் வடிவமைப்பு திறனை மேம்படுத்தும் நோக்கில் தேசிய வடிவமைப்பு நிலையம் பயிற்சியளித்தல், தொழிநுட்ப பரிமாற்றம் மற்றும் திறன் அபிவிருத்தி வேலைதிட்டங்களை நடாத்துகிறது. 2018ம் அண்டில் தே.வ.நிலையத்திற்கு ரூ.18 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2018ம் ஆகஸ்ட் 31ம் திகதி வரை ரூ.7.18 மில்லியன்களுக்கான பெறுமதியான (செயற்படுத்தப்பட்டுள்ள) அபிவிருத்தி வேலைகள் முடிவுறுத்தப்பட்டிருக்கின்றன. மீதமுள்ள ஒதுக்கீட்டின் பிரதான பகுதி கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் டிசம்பர் 13-16 வரை நடைபெறவுள்ள புதிய வடிவமைப்பு கண்காட்சிக்காக ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக ரூ.60 மில்லியன்கள் வேலைதளம் மற்றும் வடிவமைப்பு ஆய்வுகூடமொன்றை கட்டுவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இப்புதிய கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதோடு, (செயற்படுத்தப்பட்டுள்ள) அதன் நிதியியல் வளர்ச்சி ரூ.25.00 மில்லியன்களாகும்.

### 31 டிசம்பர் 2018ம் திகதியில் முன்னேற்றம்

### 2018 இல் கருத்திட்டத்தின் முன்னேற்றம்

**கருத்திட்டத்தின் பெயர்: புதிய வடிவமைப்பு உருவாக்கங்கள்**

| எதிர்பார்த்த இலக்கு | ஒதுக்கீடு ரூ.மில். | நடவடிக்கை சுட்டி.'சுட்டிகள் | வருடாந்த ஒதுக்கீடு | முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|
| | | | | பௌதிகம் | நிதிப்படுத்தல் (ரூபா. மி) |
| புதிய வடிவமைப்பிற்கான அதிகரிக்கப்பட்ட வடிவமைப்புக்கள் | 4.120 | புதிய வடிவமைப்பு புத்தாக்கங்களின் எண்ணிக்கை | 680 | 835 | 3.193 |
| | | தயாரிக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை | 420 | 507 | |
| | | கைவினைக் கலைஞர்களுக்கு அறிமுகப்படுத்திய வடிவமைப்புக்களின் எண்ணிக்கை | 470 | 531 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | பதவியணியினர் பயிற்சி – நபர்களின் எண்ணிக்கை | 110 | 110 | |

**கருத்திட்டத்தின் பெயர்: வேலைதளம் மற்றும் வடிவமைப்பு ஆய்வு கூடத்தை நிர்மாணித்தல்**

| எதிர்பார்த்த இலக்கு | ஒதுக்கீடு ரூ.மில். | நடவடிக்கை சுட்டி.'சுட்டிகள் | வருடாந்த ஒதுக்கீடு | முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|
| | | | | பௌதிகம் | நிதிப்படுத்தல் (ரூபா. மி) |
| கைவினை கைத்தொழில் துறைகளுக்கு வழங்கிய சேவைகள் அதிகரிப்பு | 60.000 | கட்டிடங்களின் எண்ணிக்கை | 01 | நிர்மாணிக்கப்படும் கட்டிடங்களின் முன்னேற்றம் 80% | 31.628 |

**கருத்திட்டத்தின் பெயர்: புதிய வடிவமைப்பு மற்றும் தொழிநுட்பத்தைப் பற்றிய அறிவூட்டல்**

| எதிர்பார்த்த இலக்கு | ஒதுக்கீடு ரூ.மில். | நடவடிக்கை சுட்டி.'சுட்டிகள் | வருடாந்த ஒதுக்கீடு | முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|
| | | | | பௌதிகம் | நிதிப்படுத்தல் (ரூபா. மி) |
| வடிவமைப்பாளர்களின் அறிவு மற்றும் திறனை அதிகரித்தல் - வடிவமைப்பு /தொழிநுட்பம் | 3.920 | நடாத்தப்பட்ட பயிற்சி வேலைதிட்டங்களின் எண்ணிக்கை | 30 | 34 | 3.131 |
| | | பெற்றுக் கொண்ட தனிப்பட்ட பயிற்சி தொடர்பான விசாரணைகளின் எண்ணிக்கை | 07 | 10 | |
| | | பயிற்சி வழங்கப்பட்ட தனி நபர்களின் எண்ணிக்கை | 50 | 83 | |
| | | பயிற்றப்பட்ட கைவினைக் கலைஞர்களின் எண்ணிக்கை | 600 | 823 | |

**கருத்திட்டத்தின் பெயர்: புதிய தொழிநுட்பம் தொடர்பான மாற்று மூலப்பொருட்கள்/ செய்நகிரமம் ஆகியவைகளை கண்டு பிடிக்கும் ஆராய்ச்சி வேலைதிட்டங்கள்**

| எதிர்பார்த்த இலக்கு | ஒதுக்கீடு ரூ.மில். | நடவடிக்கை சுட்டி.'சுட்டிகள் | வருடாந்த ஒதுக்கீடு | முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|
| | | | | பௌதிகம் | நிதிப்படுத்தல் (ரூபா. மி) |
| கைவினைக் கலைஞர்களின் அறிவு மற்றும் திறனை அதிகரித்தல் - தொழிநுட்பம் | 2.160 | கைவினைக் கைத்தொழில் துறைக்கான ஆராய்ச்சியின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டவைகளின் எண்ணிக்கை | 03 | 02 (1 programme is ongoing) | 0.627 |

**கருத்திட்டத்தின் பெயர்: புதிய கைவினைக் கைத்தொழில் உற்பத்திகளை வணிகப்படுத்தல் மற்றும் பிரதான நீரோட்டத்தில் இணைத்தல்**

| எதிர்பார்த்த இலக்கு | ஒதுக்கீடு ரு.மில். | நடவடிக்கை சுட்டி.்சுட்டிகள் | வருடாந்த ஒதுக்கீடு | முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|
| | | | | பௌதீகம் | நிதிப்படுத்தல் (ரூபா. மி) |
| சந்தைப்படுத்தல் வசதிகளை அதிகரித்தல் | 9.800 | புதிய வடிவமைப்புக்கலில் ஒரு விகிதாசாரமாக சந்தைப்படுத்தக் கூடிய வடிவமைப்புக்கள் நிர்மாணம் | 250 | 286 | 7.807 |
| | | சந்தைப்படுத்தல் இணைப்புகளின் எண்ணிக்கை (கைவினைக் கலைஞர்கள்) | 100 | 103 | |
| | | நடாத்தப்பட்ட புதிய வடிவமைப்புக் கண்காட்சிகளின் எண்ணிககை | பிரதானமானது -01<br>ஏனையவைகள் -5 | ஏனையவைகள்<br>-02 | |
| **மொத்தத் தொகை -மூலதனப் பாதீடு** | **80.000** | | | | **46.386** |

**கருத்திட்டத்தின் பெயர்: வடிவமைப்பு மதியுரை சேவைகள்**

| எதிர்பார்த்த இலக்கு | ஒதுக்கீடு ரு.மில். | நடவடிக்கை சுட்டி.்சுட்டிகள் | வருடாந்த ஒதுக்கீடு | Progress | |
|---|---|---|---|---|---|
| | | | | பௌதீகம் | நிதிப்படுத்தல் (ரூபா. மி) |
| வாடிக்கையாளர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக சிறந்த சேவைகளை வழங்கல் | வெளியார் நிதி | வழங்கப்பட்ட மதியுரை சேவைகளின் எண்ணிக்கை | 03 | 04 | |

*மூலம்: தேசிய வடிவமைப்பு மத்தியநிலையம்*

**கருத்திட்டத்தின் பெயர்: தேசிய வடிவமைப்பு நிலையத்தின் மூலமாக வடிவமைப்பாளர்களின் பற்றாக்குறையை நீக்குவதற்காக டிப்ளோமா மட்ட நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்**

| எதிர்பார்த்த இலக்கு | ஒதுக்கீடு ரு.மில். | நடவடிக்கை சுட்டி.்சுட்டிகள் | வருடாந்த ஒதுக்கீடு | Progress | |
|---|---|---|---|---|---|
| | | | | பௌதீகம் | நிதிப்படுத்தல் (ரூபா. மி) |
| உள்ளக அலங்காரம் மற்றும் உற்பத்தி வடிவமைப்புக்கள் தொடர்பாக அறிவையும் திறனையும் அதிகரித்தல | ஈட்டிய நிதி | டிப்ளோமா பாடநெறி பயில்வதற்காக இணைந்து கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை | 70 | 2017ம் ஆண்டு பாடநெறி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது | |
| | | டிப்ளோமாப் பாடநெறிகள் | 60 | 63 | |
| | | உயர் டிப்ளோமாப் பாடநெறி பயிலுவதற்காக இணைந்து கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை | 40 | 34 | |
| | | உயர் டிப்ளோமாப் பாடநெறியை பூரணப்படுத்திய மாணவர்களின் எண்ணிக்கை | 30 | தொடர்கின்றது | |

# தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம்

## முகவுரை

